Registered as a News Paper in Sri lanka
நகர சபை, யாழ்ப்பாணம்.
விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU





முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 ஆவணி 12 திங்கட்கிழமை (29.08.2011) பக்கங்கள் 16 ஓசை – 334



தலையிட இது நேரமல்ல (08)



இதுவும் காதல் சின்னம் (11)



தீர்ப்பை தடுப்பது தவறு (12)



ஆட்டம் இழக்காமல் (06)

# ஐ.நா.வுக்கு பதிலளிக்க தயாராகிறது அரசு



## ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத்திற்கு முகம் கொடுக்க ஐவர் கொண்ட குழுவை அரசு நியமித்துள்ளது.

ஜெனீவாவில் நடைபெறுகின்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் அடுத்த கூட்டத் தொடரில் இலங்கையைப் பிரதிநிதித்துவப் படுத்தும் ஐந்து பேர் கொண்ட குழுவை அரசு நியமித்துள்ளது. இக்குழுவினர் மேற்படி கூட்டத் தொடரில் இலங்கை மீதான மனித உரிமை மீறல் தொடர்பான குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிப்பதற்குத் தயாராகி வருகின்றனர். நான்கு அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும் இந்தக் குழுவில் அடங்குவதாக வெளிவிவகார அமைச்சு குறிப்பிடுகின்றது.

ஜி.எல்.பீரிஸ், மகிந்த சமரசிங்க, நிமல் சிறிபால டி சில்வா, அனுர பிரியதர்ஷன யாப்பா ஆகிய அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்த்தனவும் இந்த பிரதிநிதிகள் குழுவில் அடங்குகின்றனர்.

ஐக்கிய ஆணைக்குழுவின் 18ஆவது கூட்டத் தொடர் செப்ரெம்பர் மாதம் 12 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

## பிளேக் இன்று வரமாட்டார்

(வொசிங்டன்)

அமெரிக்க உதவி ராஜாங்கச் செயலாளர் ரொபேட் ஓ பிளேக் தனது இலங்கைக்கான இராஜாங்க விஜயத்தை இறுதி நேரத்தில் இரத்துச் செய்துள்ளார்.

இன்று இலங்கைக்கு வருவார் என்று எதிர்பார்க்கப்பட்ட ரொபேட் ஓ பிளேக் அமெரிக்காவில் வீசும் கடும் புயல் காரணமாகத் தனது இலங்கை விஜயத்தைக் கடைசி நிமிடத்தில் கைவிட்டுள்ளார்.

ஏற்கனவே கிடைத்த மற்றுமொரு செய்தி 08ஆம் பக்கத்தில் உள்ளது.

## அவசரகாலச் சட்டம் நீங்கினாலும் கைதிகளுக்கு விமோசனம் இல்லை



(கொழும்பு)

அவசரகால சட்டம் நீக்கப்பட்டமையை அடுத்து, அவசரகால சட்டம் மற்றும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு அல்லது சரணடைந்தவர்கள் விடுதலை செய்யப்படமாட்டார்கள் என அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத தடைச்சட்டம். பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கைகளை எடுக்கும் அதிகாரத்தை கொண்டிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார். சந்தேகநபர்கள், பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளமையால் அவர்களை சாதாரண சட்டத்தின் கீழ் விடுவிக்க முடியாது என்று (15ஆம் பக்கம் பார்க்க)

## ‘அக்ரஹாரா’ காப்புறுதிக்கு இலத்திரனியல் அட்டை அறிமுகம்

(கொழும்பு)

அரச ஊழியர்களுக்கும், ஊடகவியலாளர்களுக்குமான அக்ரஹார காப்புறுதிக்கு இலத்திரனியல் அட்டைகள் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

அரச ஊழியர்கள் அக்ரஹார முறைமையின் கீழ் வைத்திய சிகிச்சைகள் பெற்றுக் கொள்ளும் கட்டணப்பட்டியல் அவர்களால் வைத்திய சாலைகளுக்கு செலுத்தப்பட்டதன் பின்னர் கட்டணப் பட்டியலுக்கான தொகை மீளளிக்கப்பட்டு வந்தது.

இந்த நடைமுறையினைப் பின்பற்றி காப்புறுதி தொகையினைப் பெற்றுக் கொள்வதற்கு நீண்ட நாட்கள் செலவிட நேரிடுவதாக சுட்டிக்காட்டப்பட்டது. இக்குறைபாட்டை நீக்கி 27ஆம் திகதி முதல் புதிய திட்டத்தின் கீழ் இலத்திரனியல் அட்டைகளை வைத்தியசாலைகளில் கொடுத்து சிகிச்சை பெற்றுக் கொள்ளலாமென தேசிய காப்புறுதி நிதியம் குறிப்பிடுகின்றது.

30 மில்லியனுக்கும் அதிகமான அரச ஊழியர்களுக்கும் இந்தத் திட்டத்தின் கீழ் நன்மை பெற்றுக் கொள்ள முடியும் என நிதியத்தின் தலைவர் சேனக்க அபேகுணவர்தன தெரிவித்தார்.

## தூக்குத் தண்டனைக்கு எதிர்ப்பு இளம் பெண் தீக்குளித்து மரணம்

(சென்னை)

ராஜீவ் காந்தி கொலையின் சூத்திரதாரிகளான பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகியோர் மீதான தூக்குத் தண்டனையை ரத்து செய்யக்கோரி காஞ்சிபுரத்தில் இளம்பெண் தீக்குளித்து இறந்தார். செங்கொடி (வயது-27) என்பவரே இவ்வாறு தீக்குளித்து இறந்தவராவார்.

மக்கள் மன்றம் இயக்க உறுப்பினரான இவர், நேற்றுமாலை காஞ்சிபுரம் வட்டாட்சியர் அலுவலகம் முன்பாக பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகியோரின் தூக்குத் தண்டனையை எதிர்த்து முழக்கமிட்டபடி தீக்குளித்தார். (15ஆம் பக்கம் பார்க்க)

## அனலைதீவுக் கடற்கரையில் ஆணின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். அனலைதீவு கடற்கரைப் பகுதியில் கரையொதுங்கிய நிலையில் ஆணொருவரின் சடலம் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு மீட்கப்பட்டுள்ளதாக ஊர்காவற்றுறைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சடலத்தின் தலைப் பகுதி சிதைவடைந்து காணப்படுவதாகத் தெரிவித்த பொலிஸார், நீலநிறமான ரீசேட் அணிந்திருந்த நிலையில் சடலம் காணப்படுவதாகவும் குறிப்பிட்டனர். சுமார் 30 வயதிற்கும் 35 வயதுக்கும் இடைப்பட்ட இந்தச் சடலம் இந்திய மீனவருடையதாக இருக்கலாமென பொலிஸார் சந்தேகம் வெளியிட்டனர். இந்த



சடலம் தற்போது பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

**மாணவச் செல்வங்களே**

☞ உள்ளே கல்வி முரசு
க.பொ.த. (சா.த) பரீட்சை - 2011 மாதிரி வினாத்தாள் இணைக்கப்பட்டுள்ளது.

# ஈ.என்.டி.எல்.எப். கோரிக்கையின் பேரில் சுதர்ஷன நாச்சியப்பன் கூட்டிய மாநாடு

## ஈ.என்.டி.எல்.எப் அறிக்கை

ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணியின் (E.N.D.L.F) 2500 கி.மீ. நடைப்பயணம் மேற்கொண்டு கையளித்த கோரிக்கையின் அடிப்படையில் தான் டெல்லி மாநாடு சுதர்ஷன நாச்சியப்பன் தலைமையில் மேற்கொள்ளப்பட்டது என்று ஈ.என்.டி.எல்.எப் பங்களூரிலிருந்து விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

தமிழ்க் கட்சிகள் டெல்லிக்கு அழைக்கப்பட்டது தனிநாடு பற்றிப் பேசவோ சுயநிர்ணய அதிகாரம் பற்றிப் பேசவோ அல்ல. தமிழ்க் கட்சிகள் ஒன்றுபட்டு ஏகோபித்த கருத்தொற்றுமையை தெரியப்படுத்தினால் இந்தியா அது விடயத்தில் தலையிடும்.

உடனடி சாத்தியமற்ற, விவாதத்துக்குரிய பிரச்சினைகளை முன் வைத்தால் இழப்பு எங்கள் இனத்துக்குத்தான். அறிவைப் பயன்படுத்துவதை விடுத்து, தாங்கள் கொள்கை வீரர்கள் என்று புலிகளின் கொள்கையை மீண்டும் நிலைநாட்டத் (15ஆம் பக்கம் பார்க்க)

## சிறை ஆணையாளர் திடீர் இராஜினாமா

(கொழும்பு)

இலங்கை சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் வீ.ஆர்.டி சில்வா தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார். என்ன காரணத்திற்காக அவர் தனது பதவியை இராஜினாமா செய்தார் என்பது இதுவரையில் தெரியவரவில்லை. இதேவேளை, புதிய சிறைச்சாலை ஆணையாளர் நாயகமாக பீ.டபிள்யூ.கொடிப்பிலி தெரிவு செய்யப்பட்டுள்ளார். புதிய சிறைச்சாலை ஆணையாளர் வெலிக்கடைச் சிறைச்சாலையில் நேற்றுப் பதவியைப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறார்.




**தினமுரசு பொது அறிவுப் போட்டியின் பரிசளிப்பு நிகழ்வு இன்று மாலை 6.30 மணிக்கு நல்லூர் ஆலயத்தின் பின் வீதியில் அமைந்துள்ள தினமுரசு உற்சவகாலப் பந்தலில் நடைபெறும். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

# அராலி வெளியில் மேய்ச்சல் தரவை



(வேலணை)

வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள அராலி வெளி என்று அழைக்கப்பட்டு வருகின்ற தரவைப் பகுதியான அனைத்துப் பகுதிகளையும் மாடுகளுக்கான புல்லுகளை வளர்ப்பதற்காக உடனடியாக உழுது பண்படுத்துமாறு வடமாகாண ஆளுநர் சந்திரசிறி உத்தரவொன்றினை விடுத்துள்ளார்.

நேற்று வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் இடம்பெற்ற அபிவிருத்தி வேலைத்திட்டம் சம்பந்தமான கலந்துரையாடலின் போதே அவர் இவ் உத்தரவினை விடுத்துள்ளார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் அராலி வெளித் தரவையில் உள்ள மேலான மண்களை உள்ளூரில் உள்ளவர்கள் இழுவை பொறிகள் மூலமாக வீதிகள், ஒழுங்கைகள் என்பவற்றின் தேவைகளுக்காக ஏற்றிச் சென்றுள்ளனர்.

எனவே இவ்விதமாக மண்ணினை சென்றுள்ளதாலும், தரவையின் பல இடங்கள் சமதரையாக இல்லாமல் பள்ளங்களும் திட்டிகளுமாக காட்சியளித்து வருகின்றது.

கால்நடையினது உணவுக்காக பயன்படுத்தப்பட்டு வருகின்ற புற்கள் மீண்டும் ஒழுங்கான முறைகளில் முளைப்பதற்கு சாத்திமயற்றதாக இருப்பதாகவும் மக்கள் எடுத்துக்கூறியதையடுத்து, அமைச்சர் உடனடியாக இந்த தரவை வெளிகளை புல்லுகள் முளைப்பதற்காக உழுது பண்படுத்தி விடுமாறு வடமாகாண ஆளுநரிடம் வேண்டிக் கொண்டதையடுத்த உடனடியாக தரைவெளிகளை உழுது பண்படுத்துமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளார். (05)

## சிவில் பாதுகாப்பு குழுக்களுடன் பாதுகாப்புப் படையினர் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் பொலிஸ் பிரிவில் சிவில் பாதுகாப்பு குழு அங்கத்தவர்களுக்கான கலந்துரையாடல் நேற்று மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் இடம்பெற்றது.


யாழ். உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஜெகத் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ் மா அதிபர் நீல்.டி.தளுவத்த, வலி. தெற்கு பிரதேச செயலாளர் மஞ்சுளா சதீசன், சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சித்திக்கபண்டார உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இதேவேளை வட்டுக்கோட்டைப் பகுதியிலும் சிவில் பாதுகாப்புக் குழு அங்கத்தவர்களுக்கான கலந்துரையாடல் இடம்பெற்றது.



தேசத்தின் அபிமானம் என்ற தலைப்பில் 2011 ஆம் ஆண்டுக்கான பல்கலைக்கழக அனுமதி பெற்ற யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட மாணவர்களை கௌரவித்தல் தொடர்பான நிகழ்வு நேற்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினர்கள் மங்கள விளக்கு ஏற்றுவதையும், கலந்துகொண்ட மாணவர்களையும் காணலாம். (எப்.எஸ்)

## ரமழான் சிந்தனை



நோன்புப் பெருநாள் தொழுகைக்கு செல்லும் முன்னர் காலை உணவை உண்டு, புத்தாடை அணிந்து நறுமணம் பூசி குடும்பத்தாருடன் முஸாபஹா செய்தால் சுன்னத்தாகும். (105)

## நல்லூர் ஆலயச் சூழலில்...

### தெய்வீக இசையரங்கு

நல்லூர் கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு இளங்கலைஞர் மன்றத்தினால் தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் தினமும் மாலை 6.30 மணிமுதல் 8.00 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் தெய்வீக இசையரங்கு நடைபெற்றுவருகிறது.

இதில் பூங்காவனத் திருவிழாவான இன்று இளங்கலைஞர் மன்ற மாணவர்கள், ஆசிரியர்கள் வழங்கும் பாட்டு மற்றும் பரத நாட்டிய நிகழ்வுகள் இடம்பெறவுள்ளது.

'ஞானவடிவேலன் வரும் நேரம்' என்னும் நடன நிகழ்வில் வயலின் - அ.ஜெயராமன், மிருதங்கம் - க.கண்ணதாசன், நட்டுவாங்கம் - லி.அனுருத்தன், பாட்டு - ம.தயாபரன் ஆகியோர் பக்கவாத்தியக் கலைஞர்களாகக் கலந்துகொள்ளவுள்ளனர்.

❖ ❖ ❖ ❖

'சூரன் போர்' நாட்டிய நாடகம் நிகழ்வில் பாட்டு - திருமதி மாலினி உலகநாதன், திருமதி பாமினி கேதீஸ்வரன், மிருதங்கம்- ம.லோகேந்திரன், கீபோட் - என்.செல்வச்சந்திரன், நட்டுவாங்கம்- பிரியதர்சினி ஆகியோர் பக்கவாத்தியக் கலைஞர்களாகக் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதேவேளை வைரவர் சாந்தியான நாளை மாலை 6 மணிக்கு இணுவில் கந்தசுவாமி கோயில் இளந்தொண்டர் சபையினர் வழங்கும் எம்.என்.பரமேஸ்வரனின் நெறியாள்கையின் கீழ் உருவான வள்ளி திருமணம் இசை நாடகம் இடம்பெறவுள்ளது.

❖ ❖ ❖ ❖

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் கந்தசுவாமி கோவில் மஹோற்சவ காலத்தில் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் தினமும் பிற்பகல் 3 மணிமுதல் 6 மணிவரை நடத்தும் சமயச் சொற்பொழிவு மற்றும் கலை நிகழ்வுகளில் இன்று 'ஆறுமுகமான பொருள்' என்னும் விடயம் பற்றி ச.லலீசன் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

தொடர்ந்து கலைநிகழ்வுகளில் உரும்பிராய் திருக்குமரன், ஊர்காவற்துறை பருத்தியடைப்பு கதிரேசன் இந்து, சுழிபுரம் ஜெகசோதி ஆகிய அறநெறிப் பாடசாலை மாணவர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

## புனரமைப்புக் கூட்டம்

(வேலணை)

வேலணை வடக்கு சோளாவத்தை ஆத்திசூடி வித்தியாசாலையில் பழைய மாணவர் சங்கத்தின் புனரமைப்புக்கூட்டம் நாளைமறுதினம் பிற்பகல் 2 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது.

மேற்படி வித்தியாசாலை இடம்பெயர்வின் பின்னர் இதுவரை காலமும் மூடப்பட்டிருந்தது. தற்போது இந்தப் பாடசாலையினை மீள ஆரம்பிப்பதற்கு கல்வித் திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளதால் மீண்டும் இந்தப் பாடசாலையினை இயங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வது சம்பந்தமான ஆலோசனைகளையும் பழைய மாணவர்களிடமிருந்தும் பிள்ளைகளினது பெற்றோர்களிடமிருந்தும் அன்றைய தினம் நடைபெறவிருக்கும் கூட்டத்தில் பெறப்படவிருக்கின்றது. (05)





சிங்கப்பூரிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு நாடெங்கும் விநியோகிக்கும் Sun Flower Oil நிறுவனம் நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு நல்லூர் கோயில் சுற்றாடலில் Sun Flower Oil காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. கொள்வனவு செய்ய விரும்புவோர் விசேட விலைக்கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு :-
Pyramid Wilmar (Pvt) Ltd
No, 04-2/1, லௌறிஸ் பிளேஸ்,
ஆர்.ஏ.டி.மெல் மாவத்தை, கொழும்பு – 04, இலங்கை.
(C/567)




**தேசநலன் காத்திட**
**தெல்லிப்பளையில் கொடியேற்று**

ஆற்றாதழுத அருமந்த பிள்ளைக்கு
அமுதம் அளித்த தாயே கொடியேற்று
நோற்றார் மனதில்
நினைத்ததையெல்லாம்
நொடியில் அளிக்கும் துர்க்கையே
கொடியேற்று
மாற்றார் மனத்தில் மயக்கத்தை
அறுத்து
மாற்றம் சேர்த்திட தாயே!
கொடியேற்று
கூற்றாம் வறுமையைக் கொன்று
செல்வத்தை
கொளிக்கச் செய்திடும் அன்னையே
கொடியேற்று

மதுரகவி காரை.எம்.பி.அருளானந்தன்


யாழ்ப்பாணத்தில் முதன்முறையாக ஓர் சர்வதேச இன்னிசைப் பெருவிழா
LIVE PRAISE AND WORSHIP
இதுவரை இல்லாத அரங்கம் அதிரும் – நாடகம்
சிந்தையைத் தூண்டும் – செய்தி
போதகர்:– ஆல்வின் தாமஸ்
துதி, ஆராதனை, செய்தி
பிரவேசம் இலவசம்
இடம்:
ஏஞ்சல் சர்வதேசக் கல்லூரி
மானிப்பாய், யாழ்ப்பாணம்.
Angel International School
Manipai, Jaffna.
August - 30, 31
Daily - 4.00 P.m
விசேஷித்த வாலிபர் ஆராதனைக் கருத்தரங்கு 30, 31 ஓகஸ்ட் 9.00 Am - 12.30 Pm
(C/914)
Call:- 07772380300, 0774683217
For More Details
Visit:- www.ruahfreedom.com

ஓய்வு ஒழிவு இல்லாமல் வேலைகளைச் செய்துகொண்டே இரு. ஆனால் அந்த வேலைகளுக்குள் நீ கட்டுப்பட்டு விடாதே. அதற்குள் சிக்கிக்கொள்ளாதே. என்பதே கீதையின் உபதேசமாகும்.

-விவோகானந்தர்-

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

# மாறவே மாட்டோமா?

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் திருவிழா, இன்றைய பூங்காவனத் திருவிழாவுடன் நிறைவுபெறுகின்றது. இருபத்தைந்து நாட்களும் யாழ்ப்பாணம் விழாக்கோலம் பூண்டது என்றே சொல்லவேண்டும்.

சப்பறத் திருவிழா, தேர்த்திருவிழா, தீர்த்தத் திருவிழா ஆகிய மூன்று நாட்களும் இதற்கு முந்திய காலங்களைவிட மேலும் அதிகமான பக்தர்களால் நிரம்பி வழிந்தது நல்லூர். இலங்கையில் தமிழ் மக்கள் இதுபோல் வேறொன்றுக்கும் திரள்வதில்லை என்னும் அளவிற்கு நல்லூர்க் கந்தன் மக்களை ஆகர்ஷித்துக் கொண்டுள்ளான்.

இந்தியாவில் சிதம்பரம் நடராஜர், மதுரை மீனாட்சி, திருப்பதி மற்றும் ஆறுபடை வீடுகளைப்போல திசையெங்குமிருந்து பக்தர்கள் குழுமும், இலங்கையிலுள்ள மிக முக்கிய சுற்றுலாத் திருத்தலமாகவும் நல்லூர் திகழ்கிறது.

இம்முறை இந்தியாவிலிருந்தும் கூட வியாபாரிகள் வந்து நல்லூர் சுற்றுப்புறங்களில் கடை விரித்திருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. தென்னிலங்கையிலிருந்தும், புலம்பெயர்ந்த நாடுகளிலிருந்தும் ஏராளமானோர் நல்லூர்த் திருவிழாவிற்கெனவே வந்திருந்தனர்.

யாழ்ப்பாணத்தில் உள்ளவர்களைப் பொறுத்தவரையிலும் சரி, வெளியேறி வேறெங்கெங்கோ போய்க் குடியேறிவிட்டவர்களாக இருந்தாலும் சரி அவர்கள் மனங்களில் நல்லூர்க் கந்தன் ஒரு கலாசாரக் குறியீடாகவே மாறிவிட்டிருப்பதைப் பார்க்கலாம்.

கந்தனுக்காக ஒன்றுகுவியும் மக்களைப் பார்க்கும்போது 'நமது மக்களைக் கடவுள்தான் காப்பாற்றவேண்டும்' என்ற பிரபலமான வசனத்தின் நினைவு எழுவதையும் தவிர்க்க முடியவில்லை. நமது நல்ல எண்ணங்கள் தான் கடவுள் அல்லது நல்ல மனங்களிலேதான் கடவுள் வாழ்கிறார் என்பதை ஒப்புக்கொள்வோமானால், நாம் காப்பாற்றப்படக் கூடிய வழியும் புரிந்துவிடும். கடவுளால் நாம் காப்பாற்றப்பட்டு விடுவோம்!

மற்றவர்களைக் கரித்துக்கொட்டிக் கொண்டிருக்கும் மனமாகவே நம் சமூகப் பொதுமனம் இருப்பதாகத் தெரிகிறது. நமக்கு யாரைப் பற்றியும் கவலை இல்லை: அவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பது பற்றிக் கவலை இல்லை. ஆனால் எல்லோரும் நம்மைப் பற்றிக் கவலைப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பு மட்டும் பெரிதாக இருக்கிறது.

நமக்குத்தான் பெருந்துன்பம், நாம்தான் அதிகமதிகம் பாதிகக்கப்பட்டவர்கள் என்பதையெல்லாம், அயலிலும் உலகிலும் பாதிகக்கப்பட்டுக்கொண்டிருக்கும் யாரையும் கவனத்திலேயே கொள்ளாமல் நாம் சொல்லிக்கொண்டிருந்தால், உலகம் நம்மைப் பற்றியே கவலை கொள்ளவேண்டும் என்று நினைத்தால் அது எப்படி நடக்கும் என்று யோசிக்கவேண்டாமா? எப்படி நாம் இவ்வளவு பெரிய சுயநலச் சமூகமாக இருக்கிறோம்?

'இந்தியா துரோகம் செய்துவிட்டது' என்று கூசாமல் குற்றச்சாட்டை எடுத்துப் போடுகிறோம். அவர்கள் துரோகம் செய்ததெல்லாம் உண்மையாக இருக்கட்டும், சரி! நாம் இந்தியாவுக்குச செய்த துரோகமும் அந்த மக்களில் பெரும்பான்மையோரது மனங்களில் கனன்று கொண்டிருக்கும் என்ற எளிய உண்மை ஏன் நம்மை உறுத்துவதில்லை?

உலக வரலாற்றில் படுகொலை செய்யப்பட்ட நாட்டுத் தலைவர்களில், மிகத் தெளிவான விசாரணைகள் மூலம் மழுப்ப முடியாத ஆதாரங்களோடு நிரூபணமான கொலை இந்தியப் பிரதமரின் கொலை அல்லவா? அதற்கு நாங்கள் கேட்டுக்கொண்ட மன்னிப்போ மனவருத்தமோ என்ன? 'அது ஒரு துன்பியல் சம்பவம்' என்ற மகாவாக்கியம் தானே?

அது பற்றிய எந்த உறுத்தலும் நமக்கில்லை: எந்த மனவருத்தத்தையும் நாம் காட்டிக்கொள்வதில்லை. இந்தியா செய்த துரோகங்களைப் பட்டியலிடுவதை மட்டுமே செய்துகொண்டிருப்போம். இந்திய அமைதிப்படை இங்கு வந்து செய்ததற்குப் பதிலடி என்று ஒரு மனச் சமாதானத்தை மனதுக்குள் வைத்திருக்கிறோம்.

83 இன் பின்னர் நாங்களேதான் எங்கள் பிரச்சினையைத் தீவிரமாக இந்தியாவுக்கு எடுத்துப்போனோம். அதன் தொடர்ச்சியாகவே அவர்கள் இங்கு வந்தார்கள். இங்கு வந்து நடந்துகொண்டதற்கு அந்த தேசத்தின் தலைவரைப் படுகொலை செய்தது எங்கள் பதிலடி என்றால், அதற்குப் பதிலடி என்று அவர்கள் கொடுப்பதையும் விளங்கிக்கொண்டுதானே ஆகவேண்டும்! அதற்குப் பிறகும் அவர்கள் துரோகம் செய்கிறார்கள் என்று சொல்லிக்கொண்டிருந்து ஆகப்போவதென்ன?

நாங்கள் மாறவே மாட்டோமா?

- ஆசிரியர்

# தேசிய மட்டத்தில் 1880 பேர் உலக ஆசிரியர் தினத்தில் கௌரவிப்பு

(கொழும்பு)

உலக ஆசிரியர் தினக் கொண்டாட்டங்களை முன்னிட்டு இவ்வாண்டு தேசிய மட்டத்தில் கல்வி அமைச்சினால் 1880 அதிபர், ஆசிரியர்கள் கௌரவிக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் எச்.எம்.குணசேகர அறிவித்துள்ளார்.

நாட்டின் மாணவர் பரம்பரை மீது மிகுந்த கருணையுடனும் அர்ப்பணிப்புடனும் செயற்படும் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களை இனங்கண்டு அவர்களுக்கு தேசத்தின் கௌரவத்தை செலுத்துவதே இக் கௌரவிப்பின் நோக்கமாகும் என கல்வி அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய மட்டத்தில் 94 கல்வி வலயங்களில் இருந்து 1410 ஆசிரியர்களும், 47 அதிபர்களும் இக் கௌரவத்தை பெறவுள்ளனர். வலய ரீதியாக தலா 15 ஆசிரியர்களும் 05 அதிபர்களும் இதனை பெறவுள்ளனர்.

இவ் தேசிய மட்டத் தெரிவுகளுக்கு முன்னோடியாக பாடசாலை மட்டம், கோட்ட மட்டம், வலயமட்டம், மாவட்ட மட்டத்தில் தெரிவுகள் இடம்பெறவேண்டுமென கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

தேசிய மட்டத்தில் தெரிவு செய்யப்படும் ஆசிரியர், அதிபர்களுக்கு ஒக்டோபர் 06 ஆம் திகதி கொண்டாடப்படும் ஆசிரியர் தின தேசிய வைபவங்களின் போது ஜனாதிபதியினால் விருதுகளும், கௌரவமும் வழங்கப்படுமென கல்வி அமைச்சின் செயலாளர் எச்.எம். குணசேகர அறிவித்துள்ளார்.

## செல்வவடிவேல் கௌரவிப்பு

(யாழ்.நிருபர்)

பொன்னாலை அருள்மிகு ஸ்ரீவரதராஜப் பெருமாள் ஆலயத்தில் மகோற்சவ காலத்தில் 19 தினங்களாக "மகாபாரதம்" தொடர் சொற்பொழிவு நிகழ்த்திய சொல்லின்செல்வர் தேசபற்று இரா.செல்வவடிவேல் அவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த வாரம் இடம் பெற்றது.

இந் நிகழ்வில் ஆலயத்தின் பிரதம குரு பிரதிஸ்டா சிரோன்மணி ஸ்ரீ விஷ்ணு ஸ்ரீ.க.ச சோமாஸ்கந்த சிவாசாரியார் ஆசியுரை வழங்கும்போது ஆசிரியரின் மகாபாரத விரிவுரை கேட்போரை ஈர்க்கும் தன்மை வாய்ந்தது. இரவு 7 மணியானதும மண்டபம் நிறைய மக்கள் கூடியிருந்து அவரது உரையைச் செவிமடுத்து வந்தனர்.

ஆலயங்கள் கேளிக்கை நிகழ்வுகளைத் தவிர்த்து இவ்வாறான ஆன்மீக உரைகளுக்கு முக்கியத்துவம் வழங்கவேண்டுமெனவும் குறிப்பிட்டார். (10)

# சட்டவிரோத மின்சாரம் பெற்ற 80 பேர் வவுனியாவில் கைது

(கொழும்பு)

வவுனியா நகரிலும் சுற்றுப் புறங்களிலும் இருந்து கடந்த இரு தினங்களில் சட்ட விரோத மின்சாரம் பெற்ற சுமார் 80 பேர் கண்டுபிடிக்கப்பட்டனர்.

மின்மானியில் திருட்டு வேலைகளை செய்தவர்களே பெரும்பாலானவர்கள் கண்டுபிடிக்கப்பட்டனர்

கொழும்பிலிருந்து வந்த மின்சார சபை திடீர் பரிசோதகர்கள் மேற்கொண்ட இந்த தேடுதலில் வவுனியா நகரம் மற்றும் கூமாங்குளம், பண்டாரிகுளம், சின்னப்புதுக்குளம்,தேக்கம்காடு குட்செட்வீதியை சேர்ந்தவர்கள் இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைதானவர்கள் அனைவரும் நேற்று மாவட்டபதில் நீதவான் எம்- சிற்றம்பலம் முன் ஆஜர் செய்யப்பட்டதுடன் சரீரபிணையில் செல்ல நீதவான் அனுமதி வழங்கினார் இவர்களை எதிர் வரும் 1 ஆம் மற்றும் 2 ஆம் திகதிகளில் நீதிமன்றில் ஆஜராகுமாறு கேட்டுள்ளார்

மின்மானியில் திருட்டு வேலைகளை செய்தவர்களுக்கு சட்ட பிரகாரம் அபராதம் விதிக்கப்படும் என பொலிஸார் குறிப்பிட்டனர். (39,125)

# மின்மானி வாசிப்பாளரை கிறிஸ் பூதமாக்கின மூதாட்டி

## தாக்க வந்தவர்களுக்கு ஏமாற்றம்

(சாவகச்சேரி)

மின்மானியின் பதிவு மேற்கொள்ளச் சென்ற மின்மானி வாசிப்பவர் வீட்டிலிருந்த மூதாட்டிக்கு கிறீஸ் பூதமாகத் தென்பட்ட சம்பவம் அண்மையில் தென்மராட்சியில் இடம்பெற்றுள்ளது.

வீட்டிலிருந்த மூதாட்டி திடீரென கிறீஸ்பூதமெனக் கூக்குரலிட மின்மானி வாசிப்பாளர் அச்சத்தினால் அந்த இடத்திலேயே நின்றுவிட்டார். மூதாட்டியின் கூக்குரல் கேட்ட அயலவர்கள் ஓடிவந்து விசாரித்த போது கிறீஸ் பூதம் வந்து நிற்பதாகத் தெரிவித்த மூதாட்டி மின்மானி வாசிப்பாளரைக் காட்டினார். ஏற்கனவே அந்தப் பகுதியில் மின் வாசிப்பில் இந்த நபர் ஈடுபட்டதால் அவர் அனைவருக்கும் பரீட்சயமானவர். இதனால் கிறீஸ் பூதத்தைப் பிடிக்க ஓடிவந்த அனைவரும் நிலைமையை அறிந்துகொண்டு ஏமாற்றத்துடன் வெளியேறினர்.

# வடக்கில் 225 கிலோ மீற்றர் பாரிய வீதிகள் புனரமைப்பு

(கிளிநொச்சி)

வடக்கில் 225 கிலோமீற்றர் வீதிகள் பாரிய வீதி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டு வருவதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் தெரிவித்துள்ளனர்.

சீன அரசாங்கத்தின் நிதியுதவியுடனும்,ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியுதவியுடனும் இந்த வீதி அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

பாரிய வீதி புனரமைப்பு ஒப்பந்த நிறுவனங்கள் இந்தப் புனரமைப்பு பணியில் ஈடுபட்டுள்ளன.

ஏ-9 வீதியில் 136 கிலோமீற்றர் பரந்தன் முல்லைத்தீவு வீதியில் 40 கிலோமீற்றர், மாங்குளம் - முல்லைத்தீவு - புல்மோட்டை வீதியில் 42 கிலோ மீற்றர் வீதியும், இந்தப் பாரிய வீதி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

ச்ர்வதேச தரத்திலான தொழில்நுட்பவியலாளர்கள் பெருமளவிலான பாரிய வீதி அபிவிருத்தி இயந்திரங்கள், பல ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் இந்த வீதிப் புனரமைப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இவ்வீதிகளூடாக வாகனப் போக்குவரத்துக்கள் தொடர்ச்சியாக இடம்பெற்றுவருகின்ற போதும் அவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் வீதி ஒழுங்குகளை கடைப்பிடித்து புனரமைப்பு பணிகள் விரைவாக இடம்பெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது. (110)

# மீள் குடியேறிய மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்ய நடவடிக்கை எடுக்கவும்

## புதுக்குடியிருப்பு மக்கள் மகஜர்

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவில் மீள்குடியேற்றம் இடம்பெறாத பகுதிகளில் மக்களை மீள்குடியேற்றுமாறும் மீள்குடியேற்றம் நடைபெற்ற பகுதிகளுக்கான அத்தியவசிய தேவைகளை நிறைவு செய்வதற்கான வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு நாடாளுமன்றம் உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ விடமும் வடக்கு மாகாண ஆளுநா ஜி.எ.சந்திர சிறியிடமும் மக்கள் கோரிக்கை மகஜரினை கையளித்துள்ளனர்.

கடந்த 26ஆம் திகதி இப் பகுதிக்கு விஜயம்செய்த இவர்களிடம் அப்பகுதி மக்கள் இம் மகஜரினை கையளித்துள்ளனர்.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் 19 கிராம சேவையாளர் பிரிவுகள் காணப்படுகின்றன. இதில் 12 கிராம சேவையாளர் பிரிவுகளில் மீள்குடியேற்றம் இடம்பெற்றுள்ளது. மேலும் 7 கிராம சேவையாளர் பிரிவுகளின் மீள்குடியேற்றம் செய்யப்படவில்லை.

புதுக்குடியிருப்பு நகரப்பகுதியில் மீள்குடியேற்றம் செய்யப்படாத பகுதிகளிலேயே பொதுச் சந்தை,பிரதேச வைத்தியசாலை, வர்த்தக நிலையங்கள், பிரபல பாடசாலைகள்,விளையாட்டு மைதானங்கள் உட்பட அரச, அரச சார்பற்ற நிறுவன அலுவலகங்களும் அமைந்துள்ளன.

எனவே இப்பகுதியிலும் மீள்குடியேற்றத்தினை துரிதப்படுத்தி மக்களின் அன்றாட தேவைகளை இலகுவாக பூர்த்தி செய்யக்கூடிய வகையில் நடவடிக்கை எடுகக் வேண்டும் என அம்மகஜரில் கோரப்பட்டுள்ளது. (110)

# கிளிநொச்சியில் 13 பாடசாலைகளுக்கு "கொய்கா" 500 மில்லியன் நிதி உதவி

(கிளிநொச்சி)

கிளிநொச்சியிலுள்ள 13 பாடசாலைகளில் வகுப்பறைகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நோக்குடன் கொரிய கல்வி நிதியம் (கொய்கா) 500 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது.

இதற்கான ஒப்பந்தம் கல்வி அமைச்சில் அமைச்சர் பந்துல குணவர்த்தன முன்னிலையில் கைச்சாத்தானது.

கொய்கா நிறுவனத்தின் வதிவிடப் பிரதிநிதி வோ சென் வூ மற்றும் கல்வி அமைச்சின் செயலாளர் எச். எம். குணசேகர ஆகியோர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர். கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள 13 பாடசாலைகளிலும் புதிதாக 105 வகுப்பறைகள் 13 பாடசாலை அலுவலகங்கள் மற்றும் 12 ஆசிரியர்கள் தங்குமிட அறைகள் போன்றவை கட்டப்படவுள்ளன.

கிளிநொச்சி புனித தெரேசா மகளிர் கல்லூரி, சிவநகர் அரசாங்க தமிழ்க் கலவன் பாடசாலை, பாரதி வித்தியாலயம், அக்கராயன் தமிழ்க் கலவன் பாடசாலை, இராமநாதபுரம் மகா வித்தியாலயம், வட்டக்கச்சி மகா வித்தியாலயம், இராமநாதபுரம் மேற்கு தமிழ்க் கலவன் பாடசாலை என்பனவற்றிலும்,

கண்டாவளையில் பிரமந் தனாறு மகா வித்தியாலயம், தர்மபுரம் மகா வித்தியாலயம், முருகானந்தா மகா வித்தியாலயம் என்பவற்றிலும்,

பூநகரியில் வேராவில் இந்து மகா வித்தியாலயம், இரணைதீவு ரோமன் கத்தோலிக்க தமிழ்ப் பாடசாலை, கிரான்சி அரசாங்கத் தமிழ் கலவன் பாடசாலை என்பவற்றிலும் புதிய வகுப்பறைகள் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படவுள்ளன.

## ஈழத்துச் சிதம்பர தீர்த்தக்கரை ஆழமாக்கும் பணிகள் ஆரம்பம்


(யாழ். நிருபர்)

காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் புனித தீர்த்தக் கரையை ஆழமாக்கும் பணிகள் கடந்த வாரம் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

1.5 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ள இத்தீர்த்தக் கரையினை ஆழமாக்கும் பணியினை கடற்றொழில் நீரியல்வள அமைச்சர் ராஜித சேனாரட்ண ஆரம்பித்து வைத்துள்ளார்.

காரைநகரில் உள்ள கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள்,தேவைகள் பற்றியும் அமைச்சர் கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடியுள்ளார். (10)

## நல்லூர்க் கந்தனுக்கு இன்று பூங்காவனம்



பூங்கா வனத்தன்று பூசிப்போம் - நல்லூரில்
ஆங்கழுகுக் காய்வளரும் பூமரங்கள் - தீங்கான
சூழலை மாசகற்றுஞ் சூக்குமமாம் மக்களுயிர்
வாழ வகுத்த வழி.

- கந்தன் பாமாலை

மால் மருகனின் மணக்கோலம் காணவே பெரும்
மங்கள சங்கீதங்களே முழங்கவே - மகிழ்வாய்
நல்லைப் பதிக்கே வந்தவரே - என்றும்
நலம் பல பெற்றே வாழ்வாரே

- பூஞ்சிட்டு

மங்கள நன் நாளிலே - மண
மாலைகள் இடம் மாறவே - நல்லூரானின்
பூங்காவனம் காணவே - வான் தேவரும்
பூ மாரியே! பொழிவரே!

- சண்






முல்லைத்தீவு மாவட்டத்தில் 16 உள்ளூர் வீதிகளை காப்பற் வீதியாக மாற்றும் வேலைத்திட்டங்களுக்கான பெயர்ப் பலகையினை நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ திரைநீக்கம் செய்து ஆரம்பித்து வைப்பதையும், வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி, முல்லைத்தீவு அரச அதிபர் ஏ. பத்திநாதன், கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மார்க் உட்பட மற்றும் பலர் பிரசன்னமாகியிருப்பதையும் காணலாம்.

## வருடாந்த மகோற்சவம்

(யாழ். நிருபர்)

சுழிபுரம் மேற்கு அருள்மிகு ஸ்ரீஹரிஹர புத்திர ஐயனார் தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் கடந்த வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி திருவிழா சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும் திருவிழாக் காலங்களில் தினமும் மாலை 7.00 மணிக்கு சொல்லின் செல்வர் தேசபந் இரா. செல்வ வடிவேல் "பெரியபுராணம்" தொடர் சொற்பொழிவு நிகழ்த்தி வருகிறார்.

செப்ரெம்பர் 3ஆம் திகதி சனிக்கிழமை இரதோற்சவமும், 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (10)

## துணுக்காயில் நலத்திட்டங்கள் ஆரம்பித்து வைத்தார் நாமல்

(கிளிநொச்சி)

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் பல்வேறு மக்கள் நலத் திட்டப் பணிகளை நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ நேற்று முன்தினம் ஆரம்பித்து வைத்துள்ளார்.

துணுக்காயில் புதிதாக அமைக்கப்பட்ட பேருந்து நிலையத்தினையும் அதனோடிணைந்த கடைத் தொகுதியையும் பகல் 12.00 மணியளவில் திறந்து வைத்தார்.

இராணுவத்தினரால் யோகபுரத்தில் அமைக்கப்பட்ட "நன சல" கணினி நிலையத்தினை பிற்பகல் 2.30 மணிக்கும், யோகபுரம் உப தபாலகத்தினை 3.00 மணிக்கும் திறந்து வைத்தார்.

தொடர்ந்து அனிஞ்சியன் குளம் பாடசாலையில் இடம்பெற்ற நிகழ்வில் விதவைகளுக்கான வாழ்வாதாரக் கொடுப்பனவுகளை வழங்கி வைத்ததுடன் வரட்சி நிவாரணங்களையும் வழங்கினார்.

வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி முல்லைத்தீவு அரசாங்க அதிபர் பத்திநாதன், துணுக்காய்ப் பிரதேச செயலர் சி. குணபாலன், இராணுவ அதிகாரி மற்றும் அரச அதிகாரிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர். (121, 110)

## இணுவில் மக்களின் சாதுரியத்தால் கோயில் திருட்டு முயற்சி முறியடிப்பு

### நான்கு திருடர்கள் பொலிஸில் ஒப்படைப்பு

(இணுவில்)

இணுவில் கந்தசுவாமி கோவிலில் நேற்று முன்தினம் நள்ளிரவு மேற்கொள்ளப்பட்ட திருட்டு முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளதுடன் திருடர்களும் பிடிக்கப்பட்டு, பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:

நேற்று முன்தினம் நள்ளிரவு 12.30 மணியளவில் ஓட்டோ ஒன்றில் வந்த நால்வரில் மூவர் ஆலயத்தின் வைரவர் கோவிற் பக்கமாக ஏறி ஓட்டைப் பிரித்து உள்ளே இறங்கி குத்துவிளக்கு உட்பட பெறுமதியான பொருட்களைத் திருடினர்.

இதன்போது அருகில் திருமண நிகழ்வொன்று நடத்ததனால், அங்கு நின்ற இளைஞர்கள் சிலர் அப்பகுதியால் வந்தவேளை, ஓட்டோ ஒன்று நிற்பதனை அவதானித்தனர். சந்தேகமடைந்த இளைஞர்கள், ஆலய சூழலுக்குச் சென்ற வேளை வைரவர் கோவிற்பக்கம் திருடர்களில் ஒருவர் நிற்பதனை அவதானித்து, அவரைப் பிடித்தனர். அவரிடம் மேற்கொண்ட விசாரணையை அடுத்து மற்றைய மூவரும் கோவிலுக்குள் நிற்பது தெரிய வந்தது. எனினும் அவர்கள் பிள்ளையார் மூலைப் பக்கமாக ஏறி ஓடு பிரித்து வெளியேறி ஓடிய வேளை, அப்பகுதியில் ரோந்தில் ஈடுபட்ட இராணுவத்தினரிடம் அகப்பட்டனர். இதனையடுத்து, சுன்னாகம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டு அவர்கள் வந்து குறித்த நால்வரையும் கைது செய்து அழைத்துச் சென்றதுடன், இது தொடர்பான மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

## அமுதசுரபி அன்னதான மண்டப பொன்விழா

(வடமராட்சி)

தொண்டமானாறு செல்வச்சந்நிதி அமுதசுரபி அன்னதான மண்டபப் பொன்விழா நிகழ்வுகள் இன்று காலை 10.00 மணிக்கு மண்டபத் தலைவர் க. சிவஞானராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா கலந்து சிறப்பிக்கவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை பிரதேச செயலர் இ. வரதீஸ்வரன், யாழ். எவ்.எம். வானொலி இணைப்பாளர் ரி. உருத்திராபதி, கிளிநொச்சி மாவட்ட மதுவரித் திணைக்களப் பொறுப்பாளர் செந்தூர்ச்செல்வன், பொறியியலாளர் ச. சந்தியரூபன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (60)

## யாழ். மாவட்டத்தில் பெற்றோரால் 438 சிறுவர்கள் கைவிடப்பட்டுள்ளனர்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் இவ்வருட அரையாண்டு காலப்பகுதியில் 438 சிறுவர்கள் பெற்றோரால் கைவிடப்பட்டுள்ளதாக யாழ். அரச செயலக புள்ளி விபரங்கள் தெரிவித்துள்ளன.

பெற்றோரால் கைவிடப்பட்ட நிலையில் நெடுந்தீவுப் பிரிவில் 15 சிறுவர்களும், வேலணைப் பிரிவில் ஆறு சிறுவர்களும், ஊர்காவற்றுறைப் பிரிவில் ஒரு சிறுவனும், காரைநகர் பிரிவில் ஆறு சிறுவர்களும், யாழ்ப்பாணத்தில் 131 சிறுவர்களும், நல்லூர்ப் பிரிவில் 17 சிறுவர்களும், சண்டிலிப்பாய்ப் பிரிவில் 42 சிறுவர்களும், சங்கானைப் பிரிவில் 35 சிறுவர்களும், உடுவில் பிரிவில் 35 சிறுவர்களும், தெல்லிப்பளைப் பிரிவில் 37, சிறுவர்களும், கோப்பாய்ப் பிரிவில் 28 சிறுவர்களும், சாவகச்சேரிப் பிரிவில் 9 சிறுவர்களும், பருத்தித்துறைப் பிரிவில் 43 சிறுவர்களும், மருதங்கேணிப் பிரிவில் 9 சிறுவர்களும், கரவெட்டிப் பிரிவில் 24 சிறுவர்களும் இனங்காணப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட புள்ளிவிபரத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

## பத்திரிகையாளர் சங்க பொதுக்கூட்டம்

(யாழ். நிருபர்)

வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கக் கூட்டம் நாளை மறுதினம் புதன்கிழமை 4.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் நடைபெறவுள்ளது.

வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தின் தலைவர் எஸ். கதிர்காமத்தம்பி தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் மேற்படி சங்கத்தை விஸ்தரித்தல், ஊடகவியலாளர்களை இணைத்து அபிவிருத்தி செய்தல் போன்ற விடயங்கள் ஆராயப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சங்கத்தில் புதிய அங்கத்தவர்களை இணைப்பது தொடர்பான விவகாரத்துக்குப் பொறுப்பாக மூன்று உறுப்பினர் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும், இக்குழுவினர் அங்கத்துவப் படிவங்களை விநியோகித்து புதிய உறுப்பினர்களை இணைப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகவும் தலைவர் எஸ். கதிர்காமத்தம்பி தெரிவித்துள்ளார். (10)

# முல்லைத்தீவில் மர்மமனிதர் நடமாட்டம் அச்சத்துடன் இரவைக் கழிக்கும் மக்கள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் நான்கிற்கும் மேற்பட்ட கிராமங்களில் மர்ம நபர்களின் நடமாட்டம் இருப்பதாகத் தெரிவித்துள்ள மக்கள் இரவில் குடும்பம் குடும்பமாகத் தங்கி வாழ்வதாகவும் அப பிரதேசங்களில் அச்சமான சூழல் தொடர்ந்து கொண்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

தண்ணீரூற்று, குமிழமுனை, நீராவிப்பிட்டி, முள்ளியவளை போன்ற பகுதிகளில் கடந்த வாரம் முதல் இவ்வாறான மர்ம மனிதர்களின் நடமாட்டம் இருந்து வருகின்றது.

குமிழமுனை கிராமத்திலுள்ள கண்ணிவெடி அகற்றும் தொண்டு நிறுவனமொன்றின் அலுவலகத்திற்குள் மர்ம மனிதன் ஒருவன் புகுந்துள்ளதாகவும், அதனை அவதானித்த குறித்த நிறுவனத்தின் காவலாளி கூச்சலிட்டதைத் தொடர்ந்து அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளதாகவும் தெரிய வருகிறது.

இந்தச் சம்பவம் இடம்பெற்ற தினத்திற்கு முதல் நாள் நீராவிப்பிட்டி கிராமத்திலுள்ள முஸ்லிம் சமய மதகுரு ஒருவரின் வீட்டின் கதவைத் தட்டிய சிலர் ஜன்னல் கதவுகளையும் திறந்துள்ளனர். வீட்டில் இருந்தவர்கள் விழிப்படைந்ததையடுத்து மர்ம நபர்கள் தப்பிச் சென்றுள்ளனர். இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து இக் கிராமங்களிலும் அயற் கிராமங்களிலும் தொடர்ச்சியாக மர்ம மனிதன் நடமாட்டம் இருந்து கொண்டிருப்பதாகவும் கிராமங்களில் விழிப்புக்குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளதுடன் மக்கள் குடும்பம் குடும்பமாக தங்கியிருப்பதாகவும் மேலும் தெரிவித்துள்ளனர்.

## திருடர் கைவரிசை

வவுனியா கிராமப் புறங்களில் திருடர்களின் கைவரிசை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளது. மர்மமனிதன் என்ற போர்வையில் வீடுகளுக்குச் சென்று வீட்டில் உள்ள பொருட்களை திருடிச் செல்கின்றனர். இதனால் பொதுமக்கள் பெரும் அச்சத்திலும் பதற்றத்திலும் உள்ளனர் அண்மையில் கூமாங்குளத்தில் பூட்டி இருந்த வீட்டுக்கு சென்ற திருடர்கள் வீட்டின் ஜன்னலை உடைத்து தொலைக்காட்சி பெட்டி உட்பட பல பொருட்களை திருடிச சென்றுள்ளனர்.

# நல்லூர்ப் பிரதேச சபையின் முதலாவது கூட்டம் இன்று

(யாழ்.நிருபர்)

நல்லூர்ப் பிரதேச சபையின் முதலாவது மாதாந்த பொதுக் கூட்டம் இன்று திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது. நல்லூர்ப் பிரதேச சபையின் தலைவர் ப.வசந்தகுமார் தலைமையில் நல்லூர்ப் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் இப்பிரதேசத்தில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தி வேலைகள் தொடர்பாக ஆராயப்படுமென்றும், நிதி மற்றும் சமூகநலன் சார்ந்த விடயங்களைக் கவனிப்பதற்காக குழுக்கள் அமைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (10)

# இந்து சமயம் கூறும் தத்துவங்கள் வாழ்க்கை சிறப்படைய உதவும்

## சின்மயா மிஷன் சுவாமிகள்

(யாழ்.நிருபர்)

இந்து சமயம் கூறும் தத்துவங்களையும், வாழ்க்கை முறைகளையும் பின்பற்றி ஒழுகினால் எமது வாழ்க்கை சிறப்படையும். இந்து மதத் தத்துவங்களும், வாழ்க்கை நெறிகளும் எமது பண்பாட்டு விழுமியங்களைப் பாதுகாக்கப் பெரிதும் உதவும்.

இவ்வாறு நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு இந்து கலாசாரத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நாவலர் மணிமண்டபத்தில் நடைபெற்ற ஆனமக்ச் சொற்பொழிவு நிகழ்வில் உரை நிகழ்த்திய யாழ். மாவட்ட சின்மயா மிஷன் சுவாமி கள் பிரமச்சாரி ஜாக்கிரத் சைதன்யா குறிப்பிட்டார்.

இந்து சமய கலாசாரத் திணைக்களத்தின் கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் பா.உதயபாலன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில்,

இந்து மக்களின் கலாசாரப் பண்பாட்டு அம்சங்களில் ஒன்றாகக் குத்துவிளக்கு ஏற்றி வைப்பதைக் குறிப்பிடலாம். வேறு எந்தச் சமயத்திலும் இல்லாத சிறந்த பண்பாட்டு அம்சங்கள் எமது சமயத்தில் உண்டு. அவற்றை நாம் ஒழுங்காகக் கடைப்பிடித்து வாழ்வில் முன்னேற்றமடைய வேண்டும்.

இந்து தர்மத்தின் உண்மையான பெயர் சனாதன தர்மம். சனாதன தர்மம் என்றால் அழிவற்றது. புராதனமானது, பெருமை வாய்ந்தது என்பன பொருளாகும்.

சிறந்த வாழ்க்கையையும், நல்ல பண்பாட்டு விழுமியங்களையும் பெற்றுக்கொள்வதற்கு இந்து தர்மம் கூறும் தத்துவங்களையும் வழிமுறைகளையும் பினபறறி நடக்கவேண்டும்.

இவ்வாறு சொயவதன் மூலம் இறையுணர்வையும், மன அமைதியையும வளமான வாழ்வையும் அமைத்துக்கொள்ள வேண்டும் என்றார். (10)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(29.08.2011 – திங்கட்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**

**கர வருஷம்**

**ஆவணி 12 ஆம் நாள்.**

இராகுகாலம் 07.35–9.05, சுபநேரம் 12.05 –1.35,

நட்சத்திரம்: மகம் பி.ப 1.12 வரை

திதி: அமாவாசை மு.ப 9.19 வரை

நல்லூர்க் கந்தன் பூங்காவனத் திருவிழா.

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

**மேடம்:–** பணவரவு, குடும்பத்தில் மகிழ்ச்சி, தேக ஆரோக்கியம், மன மகிழ்ச்சி, நண்பர் வருகை.

**ரிஷபம:–** குடும்பத்தில் கவலை, பணக் கஷ்டம், தொழில் விருத்தி, மாமனார் பகை, உறவினர் தொல்லை.

**மதுனம் :–** பணவரவு, குடும்பத்தில் குதூகலம், மன மகிழ்ச்சி, தேக ஆரோக்கியம், தொழில் விருத்தி.

**கடகம்:–** குடும்பத்தில் கவலை, பணக் கஷ்டம், தொழில் மந்தம், நண்பர் வருகை, மாமனார் பகை.

**சிம்மம்:–**பணவரவு, குடும்பத்தில் மகிழ்ச்சி, தொழில் விருத்தி, கடன் தொல்லை, உடல் நலக் குறைவு.

**கனனி :–** குடும்பத்தில் கவலை, பணக் கஷ்டம், உடல் நலக் குறைவு. மருத்துவச் செலவு, விபத்து.

**துலாம் :–** பண வரவு, தேக ஆரோக்கியம், கடன் தொல்லை, குடும்பத்தில் மகிழ்ச்சி, நண்பர் வருகை.

**விருச்சிகம்:–** தொழில் விருத்தி, பண வரவு, தேக ஆரோக்கியம், குடும்பத்தில் குதூகலம், நண்பர் தொல்லை.

**தனுசு:–** பண வரவு, தொழில் விருத்தி. குடும்பத்தில் மகிழ்ச்சி, நண்பர் தொல்லை, கடன் வசூல்.

**மகரம:–** நினைத்ததைச் சாதித்தல், பணக் கஷ்டம், தேக ஆரோக்கியம், தெய்வ தரிசனம், விபத்து வரலாம்.

**கும்பம் :–** பணவரவு, குடும்பத்தில் மகிழச்சி, கடன் தொல்லை, தொழில் ஆதாயம், பெரியோர் ஆசி.

**மனம்:–** தொழில் விருத்தி, பணக் கஷ்டம், மூத்தோர் ஆசி, குடும்பத்தில் குதூகலம், தெரு விபத்து.

# தேருநர் இடாப்புத் திருத்தம் விபரங்கள் சேகரிப்பு

(அச்சுவேலி)

இவ்வாண்டிற்கான தேருநர் இடாப்புத் திருத்தங்களுக்காக வலி.கிழக்கு கோப்பாய்ப் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட கிராமசேவகர் பிரிவுகள் தோறும் ஒவ்வொரு குடும்பங்களுக்கும் திருத்திய தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பங்கள் வழங்கப்பட்டு அவை மீண்டும் கிராம சேவகர்கள் மூலம் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு குடும்பங்களுக்கும் திருத்தத்திற்காக வழங்கப்படும் விண்ணப்பப்படிவத்தில் இதுவரை வாக்காளர்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ளவர்களின் விபரங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும் அதேவேளை, புதிய அங்கத்தவர்கள் மற்றும் நீக்கம் பெறும் அங்கத்தவர்களைச் சரியாக இனங்கண்டு கொள்ளும வகையிலும் அடையாள அட்டை இலக்கங்களைச் சரியாகப் பதிவு செய்து கொள்வதற்கும் ஏதுவான முறையில் அவ விண்ணப்பப்படிவம் வழங்கப்பட்டு வருகின்றது. (03)

# வெள்ளைவான் நடமாட்டம் அளவெட்டியில் நள்ளிரவில் பதற்றம்

(அளவெட்டி)

அளவெட்டிப் பகுதியில் நேற்று முன்தினம் நள்ளிரவு வெள்ளை வாகனமொன்றின் நடமாட்டத்தினால் அப்பகுதி மக்களிடையே பெரும் பதற்றமான நிலை காணப்பட்டது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

அளவெட்டி வடக்குப் பகுதியில் நேற்று முன்தினம் நள்ளிரவு ஒரு மணியளவில் ஊர்மனைக்குள் ஹையேஸ் வாகனமொன்று சுறறித் திரிந்துள்ளது. குறித்த வாகனம் செல்வதை அவதானித்த அவ்வு,ர் மக்கள், ஆழ்ந்த உறக்கத்திலிருந்த அயலவர்களையும் எழுப்பி தத்தமது வீட்டின் வெளிப்புறங்களிலுள்ள மின்குமிழ்களையும் ஒளிரச் செய்தனர்.


இதன்போது ஊர்மனைக்குள் சுற்றித்திரிந்த குறித்த ஹையேஸ் வாகனம், பிரதான வீதியான் டச்சு வீதிப் பகுதிக்குச் சென்று சிறிது நேரம் தரித்துவிட்டுப் பின் அப்பகுதியிலிருந்து சென்றுவிட்டது.

குடாநாட்டில் தற்போது மர்மமனிதர்கள் எனப்படுவோரின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படும் நிலையில், நள்ளிரவு நேரம் ஹையேஸ் வாகனம் திரிந்ததனால் அப்பகுதி மக்களிடையே அச்ச நிலை ஏற்பட்டுள்ளது.

# ஈச்சங்குளம் வீதி சேதம்

(வவுனியா)

தாண்டிக்குளம் ஈச்சங்குளம் வீதி போக்குவரத்து செய்ய முடியாத நிலையில் குண்டும் குழியுமாக உள்ளதால் பாடசாலை மாணவர்கள் வாகன ஓட்டுனர்கள் பொதுமக்கள் பலரும் கவலை தெரிவிப்பதுடன் வீதியை திருத்த உரிய நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை கேட்டுகொண்டுள்ளனர்.




வருசா வருசம் இங்கிலீசுக்கு ஆவணி மாதங்களில நம்மட வடக்குப் பகுதியில வாழுற இரண்டு பகுதி மக்கள் மத்தியில் பெருந் திருவிழாக்கள் நடக்கும்.

இந்து, கிறிஸ்தவ மக்களைத் தான் சொல்றன். இந்துக்களுக்கு நல்லூர்க் கந்தசாமி கோவில் கிறிஸ்தவர்களுக்கு மருதமடு செபமாலை மாதா கோவில்.

ரெண்டு கோவில்களிலும் பெருந்திருவிழாக்கள் அநேகமாக ஒரே காலகட்டங்களில் நடக்கும். இந்த வருசமும் அப்பிடித்தான்.

இந்தப் பொருத்தம் ரெண்டு கோவில்களில் பூர்வீக சரித்திரத்திலும் இருக்கெண்டாப் பாருங்கோவன். நல்லூர் கோவில் முதல்ல இப்ப இருக்கிற இடத்தில இருக்கேல்ல, அதுபோல மடுமாதா கோவிலும் இப்ப இருக்கிற இடத்தில் இருக்கேல்ல.

அதுக்குக் காரணம் இந்த நாடு பிடிக்கிற சண்டையள்தான். ஆயிரத்து ஐநூறுகளில வந்த போத்துக்கீசர் இந்துக் கோவில்களை உடைச்சு வேதக் கோவில்களைக் கட்டினார்.

முத்திரைச் சந்தியில இருந்த முருகன் கோவில் அப்பிடி உடைக்கப்பட்டு ஒரு சிலரால் பாதுகாக்கப்பட்ட விக்கிரகம் பின்பாக இப்ப கோவிலுள்ள இடத்தில பிரதிஷ்டை செய்ததெண்டு சரித்திரம் சொல்லுது.

அப்பிடித்தான் மருதமடு மாதாவின்ர சரித்திரமும் பெரிய சரித்திரம். போத்துக்கீசரால் பரப்பப்பட்ட கத்தோலிக்க மதம் மன்னார் பகுதியில் தீவிரமாக வளந்து வந்துது.

அப்ப மன்னார் மாந்தை எண்டுற இடத்திலதான் மாதாவின் கோவில் அமைந்திருந்தது. அந்நேரம் போத்துக் கீசருக்கு எதிராக படை நடத்திய சங்கிலியன் மதம் மாறியவர்களை வெட்டிக் கொண்டதாகவும் சரித்திரம் கூறுது.

அது ஒருபுறமிருக்க பிறகு வந்த ஒல்லாந்தர் கத்தோலிக்க ஆலயஙகளை உடைச்சு அகற்றியபோது மாந்தையில் இருந்த மாதா கோவில் சுருபத்தை எடுத்துக்கொண்டு வந்து இப்போ கோவில் அமைந்துள்ள பெரும் காட்டுப் பகுதியில் ஒளிச்சு வைச்சேண்டும் கதையிருக்கு.

அந்த இடத்தில தோன்றியது தான் மருதமடு மாதா திருத்தலம் எண்டது வரலாறு. இப்ப சொல்லுங்க பாப்பம் ரெண்டு கோவில்களுக்கும் ஒற்றுமை இருக்கத்தான் செய்யுது.

அதுபோகட்டும் கிட்டடீல தமிழகத்தில இருந்து வருகை தந்த தமிழ்ப் பேராசிரியர் ஒருவர் சொன்னாராம். வன்னியிலையும் குடாநாட்டிலையும் நடந்த அனாத்தங்களால். நூற்றுக்கணக்கான கிறிஸ்தவ தேவாலயங்களும், ஆயிரக்கணக்கான இந்துக்கோவில்களும் சேதமடைந்து போயுள்ளன. அவற்றைத் திருத்தாமல் புத்த விகாரைகள் அமைக்கப்பட்டு வருவதாகச் சுட்டிக் காட்டினார்.

ஒன்றேகுலம் ஒருவனே தேவனெண்டதெல்லாம் அந்தக் காலம் இப்பதான் மனிசரைப் போல கடவுளும் பெருகிப் போச்சே.

மடுமாதா 2008 ஆம் ஆண்டில இடம்பெயர்ந்த சரித்திரம் தெரியும்தான. பூநகரி தேவம்பிட்டி மாதா கோவிலுக்குக் கொண்டுபோய் திரும்பவும் வந்ததும் சும்மா சரித்திரமே பாருங்கோ.

# குமாரசுவாமி வெற்றிக் கிண்ண ருவென்ரி 20 அரையிறுதியில் பற்றீசியன், சென்றல் அணிகள்

(யாழ்ப்பாணம்)

குமாரசுவாமி வெற்றிக் கிண்ண ருவென்ரி 20 தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு பற்றீசியன் மற்றும் யாழ். சென்றல் அணிகள் தகுதி பெற்றுள்ளன.

ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்டு வரும் 'குமாரசுவாமி வெற்றிக் கிண்ணத்திற்கான ருவென்ரி 20 போட்டித் தொடர் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடை பெற்று வருகின்றது.


இதில் கடந்த சனிக்கிழமை இடம் பெற்ற முதலாவது காலிறுதிப் போட்டியில் பற்றீசியன் அணியும், ஓல்ட்கோல்ஸ் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய பற்றீசியன் அணி நிர்ணயிக கப்பட்ட ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 146 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ரியூடர் 13, சஜீன்கிரன் 16, நவதீபன் 15, எரிக் பிரதாப் 56, கிளின்ரன் 20 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஜெயசுதன், திலீபன் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு ஆடிய ஓல்ட்கோல்ஸ் அணி 14.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 82 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் சிறிகஜன் 11, நிரோஸன் 12, குகன் 17 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அஜீத் மூன்று, சுஜீவன் நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இதேவேளை, இரண்டாவது காலிறுதிப் போட்டியில் யாழ். சென்றல் அணியும், கிளாஸ்கொப்பர்ஸ் அணியும் மோதின. இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் ஆடிய கிளாஸ்கொப்பர்ஸ் அணி 17 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 77 ஓட்டங்களைப் பெற்றது. இதில் டிலோஸன் 18 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் மயூரன், யசின்தன் தலா மூன்று, சலீஸ்ரன் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு ஆடிய யாழ். சென்றல் அணி 10.3 ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் கலிஸ்ரன் ஆட்டமிழக்காது 51 ஓட்டங்களைப் பெற்றார்.



கலிஸ்ரன்

## விளையாட்டுச் செய்திகள்

# புதன் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவை நடத்தும் அழைக்கப்பட்ட அணிகளுக்கிடையிலான 50 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் தொடர் நாளை மறுதினம் முதல் ஆரம்பமாகின்றது. யாழ். பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ள முதல் போட்டியில் பல்கலைக்கழக அணியை எதிர்த்து கே.சி.சி.சி. அணி மோதவுள்ளது.

லீக் அடிப்படையில் நடைபெறவுள்ள இப்போட்டியில் யாழ். பல்கலைக்கழகம், கே.சி.சி.சி, யாழ். சென்றல், இகில் ஆகிய நான்கு அணிகள் மோதவுள்ளன.

ஒவ்வொரு போட்டிகளிலும் வெற்றி பெறும் அணிக்கு புள்ளிகள் வழங்கப்பட்டு, அடுத்த சுற்றுக்களுக்கு அணிகள் தெரிவாகும் என்று போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

# காலிறுதிக்கு தகுதி பெற்றது ஐங்கரன், ஸ்ரார் ஏ அணிகள்

(மட்டுவில்)

அலெக்சன் ஞாபகார்த்தமாக நடத்தப்பட்டு வரும் கரப்பந்தாட்டத் தொடரின் காலிறுதிப் போட்டிக்கு மட்டுவில் ஐங்கரன் மற்றும் அச்சுவேலி ஸ்ரார் 'ஏ' அணிகள் தகுதி பெற்றுள்ளன.

கைதடி வடக்கு நவ சனசமூக நிலையத்தினால் நடத்தப்பட்டு வரும் அலெக்சன் ஞாபகார்த்த கரப்பந்தாட்டத் தொடர் பிரதேச மற்றும் மாவட்ட மட்ட ரீதியில் நடாத்தப்பட்டு வருகின்றது.

மின்னொளியில் இடம்பெற்று வரும் இப்போட்டித் தொடர் கைதடி வடக்கு நவ சனசமூக நிலைய விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதில் நேற்று முன்தினம் இரவு 7.00 மணிக்கு நடைபெற்ற முதல் போட்டி தென்மராட்சிப் பிரதேச ரீதியில் இடம் பெற்றது. இதில் நாவற்குழி சந்தி அணியும், மட்டுவில் ஐங்கரன் அணியும் மோதின. இதில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய மட்டுவில் ஐங்கரன் அணி 2-0 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற யாழ். மாவட்ட மட்டப் போட்டியில் கிளிநொச்சி ஐக்கிய அணியும், அச்சுவேலி ஸ்ரார் 'ஏ' அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் அச்சுவேலி ஸ்ரார் 'ஏ' அணி 2-1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று காலிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

இதேவேளை, இன்று இரவு நடைபெறும் பிரதேச மட்டப் போட்டியில் கைதடி மின்னொளி அணியை எதிர்த்து கைதடி சரஸ்வதி அணியும், மாவட்ட மட்டப் போட்டியில் அச்சுவேலி விக்னேஸ்வரா அணியை எதிர்த்து நீர்வேலி ஐக்கிய அணியும் மோதவுள்ளன. (118)

# பிரபாகரன் மென்பந்துச்சுற்று இலகு வெற்றி பெற்றது ரூனி

(தும்பளை)

அமரர் பிரபாகரன் ஞாபகார்த்த மென்பந்துச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டமொன்றில் தம்பசிட்டி ரூனி அணி எட்டு விக்கெட்டுக்களால் இலகு வெற்றி பெற்றது.

தும்பளை விவேகானந்தா விளையாட்டுக் கழகத்தினால் அதன் முன்னாள் கழக வீரர் அமரர் பிரபாகரன் ஞாபகார்த்தமாக நடாத்தப்பட்டு வரும் 15 ஓவர்களைக் கொண்ட மென்பந்துச் சுற்றுப் போட்டி தும்பளை விவேகானந்தா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் நேற்றுக் காலை நடைபெற்ற முதல் சுற்று ஆட்டத்தில் பருத்தித்துறை யதுஸ் அணியை எதிர்த்து தம்பசிட்டி ரூனி அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய யதுஸ் அணி 14.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 63 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பிரதீபன் 17, ரமேஷ் 14 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கௌசிகன் நான்கு, சயந்தன் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு ஆடிய ரூனி அணி 12 ஓவர்கள் நிறைவில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

இதில் நிதர்சன் 17, சயந்தன் 14, மதுசன் ஆட்டமிழக்காது 13 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பிரதீபன், ரமேஷ் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இன்று மாலை நடைபெறும் போட்டியில் திருநாவலூர் அணியை எதிர்த்து மைக்கல் அணி மோதவுள்ளது. (62)

# பிரதாபன், கவாஸ்கர் இணைப்பாட்டம் சென் ஜோன்ஸ் பெற்றது திரில் வெற்றி

(யாழ்ப்பாணம்)

பிரதாபன், கவாஸ்கர் ஆகியோரின் சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் ஸ்ரான்லிக் கல்லூரி அணிக்கெதிரான ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் சென் ஜோன்ஸ் கல்லூரி அணி திரில் வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தால் நடத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் இரண்டாவது சுற்று ஆட்டமொன்றிலேயே சென் ஜோன்ஸ் கல்லூரி அணி வெற்றிபெற்றது.

சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டி கடந்த 26ஆம் திகதி நடைபெற்றது.

இப்போட்டி இரு கல்லூரிகளின் 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் ஆடிய ஸ்ரான்லிக் கல்லூரி அணி 27 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 107 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பிரசாந்த் 25 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்கு ஆடிய சென் ஜோன்ஸ் கல்லூரி அணி, சம இடைவெளியில் விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. ஒரு கட்டத்தில் 57 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து தடுமாறியிருந்தது.

இருப்பினும் எட்டாவது விக்கெட்டுக்காக இணைந்த பிரதாபன் மற்றும் கவாஸ்கர் இணை மிகச் சிறப்பாக ஆடி அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றதுடன், இணைப்பாட்டமாக 40 ஓட்டங்களையும் பெற்றது. இறுதியில் சென் ஜோன்ஸ் அணி 34.3 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் பிரதாபன் ஆட்டமிழக்காது 24, கவாஸ்கர் 16, கௌசிகன் 21 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மாதவன் நான்கு, உதயா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

# தயார்ப்படுத்தல் சரியில்லை

(டுபாய்)

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இந்திய அணி 0-4 என்ற கணக்கில் தோற்றதற்கு சரியாக தயாராகாததே காரணம் என மேற்கிந்தியத்தீவு முன்னாள் அணித் தலைவர் கிளைவ் லொயிட் தெரிவித்தார்.

டெஸ்டுக்கு முன்பாக மூன்று அல்லது நான்கு பயிற்சி ஆட்டங்களில் ஆடியிருக்க வேண்டும். தனது எண்ணப்படியான அணியை உருவாக்குவதற்கு டோனிக்கு இது சரியான நேரம். தனக்குத் தேவையான வீரர்களை அவர் தேர்வுக் குழுவிடம் கேட்டுப்பெற வேண்டும். இந்திய அணி மறுபடியும் பழைய நிலைக்குத் திரும்ப இது மட்டும் தான் சரியான வழி.

இதற்கு அப்பால் இங்கிலாந்து அணியின் வளர்ச்சி நிலையை எவரும் கருத்தில் கொள்ளவில்லை. அந்த அணி அவுஸ்ரேலிய அணிக்கெதிரான ஆஷஸ் தொடரை வென்ற பின்னர் நல்ல உத்வேகத்துடன் போட்டியிட்டு வருகின்றது. அதன் பயிற்சியாளர், வீரர்கள் இடையே உள்ள உறவு நிலை, வெற்றிபெறவேண்டும் என்ற வேட்கை என்பன இங்கிலாந்து அணி டெஸ்ட் தரப்படுத்தலில் முதல் நிலை இடத்தைத் தக்க வைக்க முக்கிய காரணம்.

இதனை அனைவரும் கருத்தில் கொள்ளவேண்டும். இந்திய அணியின் பலவீனங்களுக்கு அப்பால் இவற்றை நாம் மறந்துவிடக்கூடாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கடற்கரைக் கால்பந்து பூர்த்தியானது ஏற்பாடு

(நெல்லியடி)

இலங்கையில் இம்முறை நடைபெறவுள்ள ஏழு நாடுகள் பங்குபற்றும் முதலாவது தெற்காசிய கடற்கரைக் கால்பந்து விழாவுக்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியாகியுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இப்போட்டித் தொடர் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் ஒக்டோபர் 'மாதம் 8ஆம் திகதி முதல் 17ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இலங்கை, ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், இந்தியா, மாலைதீவு, நேபாளம், பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் வீர, வீராங்கனைகள் இப்போட்டித் தொடரில் பங்குபற்றவுள்ளனர்.

கடற்கரை வலைப்பந்தாட்டம், கடற்கரை கரப்பந்தாட்டம், கடற்கரை கூடைப்பந்தாட்டம், கடற்கரை கைப்பந்தாட்டம், கடற்கரை கபடி, கடற்கரை குதிரையேற்றம், கடற்கரை கால்பந்தாட்டம், கடற்கரை உடற்கட்டுமஸ்தானம் மற்றும் படகோட்டம், நீச்சல் ஆகிய விளையாட்டுக்கள் இடம்பெறவுள்ளன. (12)

# தெற்காசிய கடற்கரை விளையாட்டு விழா இலங்கை சார்பாக மூன்று அணிகள் தகுதி

(நெல்லியடி)

தெற்காசிய கடற்கரை விளையாட்டு விழாவில் இலங்கை சார்பாக பங்குபற்றவுள்ள வலைப்பந்தாட்டத் தொடரில் மூன்று அணிகள் தெரிவாகியுள்ளன.

ஏழு நாடுகள் பங்குபற்றவுள்ள முதலாவது தெற்காசிய கடற்கரை விளையாட்டு விழா இம்முறை இலங்கையில் நடைபெறவுள்ளது.

இதில் இலங்கை சார்பாக போட்டியிடவுள்ள மாவட்ட அணிகளுக்கிடையிலான தெரிவுப் போட்டி நீர்கொழும்பு கடற்கரை மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் கம்பஹா, கண்டி, முல்லைத்தீவு, கிளிநொச்சி, கொழும்பு, அம்பாந்தோட்டை அணிகள் பங்குபற்றின.

இதில் முதலாமிடத்தை கொழும்பு இலங்கைப் பாடசாலையும், இரண்டாமிடத்தை கொழும்பு ஸ்ரேஸ் சேவிஸ் அணியும், மூன்றாமிடத்தை கம்பஹா அணியும் பெற்றுக்கொண்டதுடன், தெற்காசிய கடற்கரை விளையாட்டு விழாவில் கலந்து கொள்ளும் வாய்ப்பையும் பெற்றது.

கிளிநொச்சி மாவட்ட அணி கம்பஹா, கண்டி, அம்பாந்தோட்டை அணிகளுடன் மோதி 6-4, 9-7, 8-6 என்ற அடிப்படையில் தோல்வியுற்றுள்ளது. இதேபோல் முல்லைத்தீவு மாவட்டம் காலிறுதி ஆட்டத்திற்கு தெரிவாகி கொழும்பு தேசியக் கல்லூரியுடன் மோதி 11-3 என்ற வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

# உலகத் தடகளப் போட்டி தென்கொரியாவில் கோலாகல ஆரம்பம்



(டெகு)

உலகத் தடகள போட்டி தென்கொரியாவில் நேற்று முன்தினம் கோலாகலமாகத் தொடங்கியது.


13ஆவது உலக தடகள சம்பியன்ஷிப் போட்டி தென்கொரியாவில் உள்ள டெகு நகரில் நேற்று முன்தினம் கண்கவர் கலைநிகழ்ச்சி மற்றும் வாணவேடிக்கைகளுடன் கோலாகலமாக தொடங்கியது. இந்தப் போட்டியில் 202 நாடுகளைச சேர்ந்த 1945 வீரர்-வீராங்கனைகள் கலந்து கொண்டுள்ளனர்.

## கென்யா வீராங்கனைக்கு முதல் தங்கம்

(டெகு)

உலக தடகள போட்டி நேற்று முன்தினம் நடைபெற்ற பெண்களுக்கான மரதன் ஓட்டப் பந்தயத்தில் கென்யா வீராங்கனை எட்னா கிப்லாகாட் 2 மணி 28 நிமிடம் 43 வினாடியில் பந்தய தூரத்தைக் கடந்து முதல் தங்கப்பதக்கத்தை கென்யாவுக்கு வென்று கொடுத்தார். இந்தப் போட்டியில் வெள்ளி மற்றும் வெண்கலப்பதக்கமும் கென்யாவுக்கே கிடைத்தது.

அந்த நாட்டு வீராங்கனை பிரிஸ்கா ஜெப்டு 2:29:00 வினாடியில் பந்தய தூரத்தை எட்டி வெள்ளிப்பதக்கமும், மற்றொரு வீராங்கனை ஷரோன் ஷெரோப் 2:29:14 வினாடியில் பந்தய தூரத்தைக் கடந்து வெண்கலப்பதக்கமும் பெற்றனர்.




இதேபோல் பெண்களுக்கான 10 ஆயிரம் மீட்டர் ஓட்டத்திலும் கென்யாவே முழுமையாக ஆதிக்கம் செலுத்தியது. கென்ய வீராங்கனை விவியன் செரியோட் 30:48.98 வினாடியில் பந்தய தூரத்தை கடந்து தங்கப்பதக்கம் வென்றார். சக நாட்டவர்களான சாலி கிப்யகோ வெள்ளிப்பதக்கமும், லினட் மாசியா வெண்கலப்பதக்கமும் பெற்றனர்.

ஆண்களுக்கான தடியூன்றிப் பாய்தல் போட்டியில் முன்னாள் உலக மற்றும் ஒலிம்பிக் சம்பியனான அவுஸ்ரேலிய வீரர் ஸ்டீவ் ஹுகெர் தகுதிச் சுற்றுடன் வெளியேறினார். சர்வதேச தடகள சம்மேளனம் நிர்ணயித்துள்ள 5.50 மீற்றர் உயரத்தை அவர் 3 முறை முயற்சித்தும் தோல்வி கண்டார். ஸ்டீவ் காயத்தில் இருந்து மீண்டு ஜுலை மாதம் தான் களம் திரும்பினார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேபோல் 400 மீட்டர் ஓட்டத்தில் இங்கிலாந்து வீராங்கனை கிறிஸ்டின் ஒகுரோகு தகுதிச் சுற்றுடன் வெளியேறினார். தகுதிச் சுற்றில் அவர் தவறான தொடக்கம் கண்டதால் வெளியேற்றப்பட்டார். 27 வயதான கிறிஸ்டின், 2007ஆம் ஆண்டு உலக சம்பியன்ஷிப் போட்டி, பீஜிங் ஒலிம்பிக் போட்டி ஆகியவற்றில் 400 மீட்டர் ஓட்டத்தில் தங்கப்பதக்கம் வென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பிள்ளைகளுக்கு சமர்ப்பணம்

(டெகு)




உலக தடகள சம்பியன்ஷிப் போட்டியில் தங்கம் வென்றதை எனது இரண்டு குழந்தைகளுக்கும் அர்ப்பணிக்கிறேன் என முதல் தங்கம் வென்ற கென்யா வீராங்கனை எட்னா கிப்லாகாட் தெரிவித்தார்.

இது தான் நான் பங்கேற்ற முதல் உலக தடகள சம்பியன்ஷிப் போட்டியாகும். இதில் வெற்றி கண்டது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. இந்தப் போட்டிக்காக நான் சிறப்புத் திட்டம் எதுவும் கடைப்பிடிக்கவில்லை. மணிக்கு 32 கிலோ மீற்றர் வேகத்தில் ஓட வேண்டும் என்ற முடிவுடன் செயற்பட்டேன். கடைசிக் கட்ட தண்ணீர் நிலையத்தில் தண்ணீர் குடிக்கும் போது என் மீது சக வீராங்கனை மோதியதில் கீழே விழுந்தேன்.

இதனால் ஓட்டத் திறன் பாதிக்குமோ என்று பயந்தேன். ஆனால் எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை.

இந்த வெற்றியை எனது இரண்டு குழந்தைகளுக்கும் அர்ப்பணிக்கிறேன். இந்த வெற்றியை ஷொப்பிங் சென்று கொண்டாடுவேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

முதல் தங்கப்பதக்கம் வென்ற 31 வயதான எட்னா கிப்லாகாட் கென்யா பொலிஸில் வேலை செய்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கிப்ளகாட் கீழே விழுந்ததற்கு எனது தவறு காரணம் அல்ல. ஆனாலும், எனது தோழி விழுந்தவுடன் ஓட்டத்தை நிறுத்தி, அவரைத் தூக்கிவிட்டேன். அவர் அதிர்ச்சியில் இருந்து மீளும் வரை மெதுவாக ஓடினேன் சக வீராங்கனை ஷெரான் செரோப் தெரிவித்தார்.

## முடியும் என்பதற்கு...




உலகத் தடகளப் போட்டி தனது இரண்டு கால்களையும் இழந்த நிலையில் போட்டியிடும் தென்னாபிரிக்காவின் ஆஸ்கர் பிஸ்டோ 400 மீற்றர் ஓட்ட அரையிறுதிக்குத் தகுதிபெற்றுள்ளார்.

## விதிகளை மீறிய குற்றச்சாட்டு 2 வீரர்களுக்கு 2 வருடத் தடை

(புதுடில்லி)



விதிகளை மீறி ஒழுங்கீனமாக நடந்து கொண்டதற்காக இந்திய ஹொக்கி அணியின் நட்சத்திர வீரர்கள் சந்தீப்சிங், சர்தாரா சிங் ஆகியோருக்கு இரண்டு ஆண்டு காலத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்திய ஹொக்கி அணிக்கு பெங்களூரில் பயிற்சி முகாம் நடந்தது. இதில் பங்கேற்ற இந்திய முன்னணி வீரர்கள் சந்தீப்சிங், சர்தாரா சிங் இருவரும் பயிற்சியாளர் அனுமதியின்றி முகாமை விட்டுத் திடீரென வெளியேறினர். முன்னதாக அவர்கள் இருவரும் பயிற்சியாளரிடம் வாக்குவாதமும் செய்திருக்கிறார்கள். இந்த விவகாரம் சர்ச்சையாக வெடித்தது. அவர்கள் மீது ஒழுங்கீன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. இது தொடர்பாக அவர்களிடம் விளக்கமும் கேட்கப்பட்டது.

இந்த நிலையில் ஹொக்கி இந்தியா அமைப்பு நிர்வாகிகளின் அவசர கூட்டம் புதுடில்லியில் நேற்று முன்தினம் நடந்தது. இதில் வீரர்களின் நடத்தை குறித்து நீண்ட நேரம் விவாதிக்கப்பட்டது. இதன் முடிவில் இருவருக்கும் 2 ஆண்டு காலம் விளையாடத் தடை விதிப்பது என்று முடிவு செய்யப்பட்டது.

## வோஸ்னியாக்கி சம்பியன்




(நியூ ஹேவன்)

நியூ ஹேவன் ஓப்பன் ரென்னிஸ் தொடரின் பெண்கள் ஒற்றையர் வெற்றிக் கிண்ணத்தை டென்மார்க்கின் வோஸ்னியாக்கி கைப்பற்றிக் கொண்டார்.

அமெரிக்காவின் நியூஹேவன் நகரில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்த இறுதிப் போட்டியில் செக்குடியரசின் பெட்ரா செட்கோவ்ஸ்காவை வோஸ்னியாக்கி எதிர்கொண்டார். இதில் சிறப்பான ஆட்டத் திறனை வெளிப்படுத்திய வோஸ்னியாக்கி 6-4, 61 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்றுக் கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டார்.

## இந்திய அணியின் டெஸ்ட் தோல்வி பிரெட் லீக்கு வியப்பாக உள்ளதாம்

(கொழும்பு)



இங்கிலாந்து அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில், இந்திய அணி தோல்வியடைந்தது வியப்பாக உள்ளது என அவுஸ்ரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர் பிரட் லீ தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில், இந்திய அணி முழுமையாக தோல்வியடைந்தது ஆச்சரியமானது. இந்தத் தோல்வி இந்திய அணியைக் காயப்படுத்தி இருக்கும் என்று தெரியும். ஆனால், இங்கிலாந்து வீரர்கள் சிறப்பான கிரிக்கெட்டை வெளிப்படுத்தினர். சொந்த மண் சாதகத்தை நன்கு பயன்படுத்திக் கொண்டனர். வேகம் மற்றும் சுவிங்கிற்கு ஒத்துழைக்கும் இங்குள்ள ஆடுகளங்களில் விளையாடுவது மிகவும் கடினம். கடந்த 2005 ஆஷஸ் தொடரின் போது இதே அனுபவம் தான் எங்களுக்கு ஏற்பட்டது. இதனால் தான் அந்த தொடரில் நாங்கள் (1-2) தோற்க நேரிட்டது. அணியில் வேகப்பந்து வீச்சாளர்களாக இருப்பது கடினமான பணி. தொடர்ந்து உடற் தகுதியை பராமரிக்க கடும் முயற்சி செய்ய வேண்டும். காயம் காரணமாக கிரிக்கெட்டில் இருந்து விலகியிருந்த போது, பயிற்சியில் நான் நிறைய கற்றுக்கொண்டேன். இதனால் தான் மீண்டும் கிரிக்கெட்டுக்கு திரும்ப முடிந்தது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சர்வதேச கைப்பந்தாட்டம் சம்பியனானது இந்தியா



சர்வதேச கைப்பந்துப் போட்டியில் இந்திய சிரேஷ்ட ஆண்கள் அணி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது.

துனிசியா, ரஷ்யா, இந்தியா, சீனா, ஈரான் உட்பட 8 அணிகள் பங்கேற்ற பிரசிடென்ட் கிண்ணத்துக்கான சர்வதேச கைப்பந்துப் போட்டி கஜகஸ்தான் நாட்டில் நடந்தது.

இதில் நேற்று நடந்த இறுதிப் போட்டியில் இந்திய அணி, துனிசியாவை எதிர்கொண்டது. விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் இந்திய அணி 25-18, 25-20, 25-22 என்ற நேர்செட்டில் துனிசியாவை வீழ்த்தி கிண்ணத்தைக் கைப்பற்றியது. இப்போட்டியில் கிண்ணம் வெற்றது பெருமை என்று இந்திய அணித் தலைவர் தெரிவித்தார்.

# மத்திய கிழக்கில் ஏற்பட்ட நெருக்கடி தேயிலை ஏற்றுமதியிலும் பாதிப்பு

(கொழும்பு)

மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிகளால் இலங்கையின் தேயிலை ஏற்றுமதி கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

ஆண்டுதோறும் இலங்கையினால் ஏற்றுமதி செய்யப்படும் 300 மில்லியன் கிலோ தேயிலையில், 78 வீதமானவற்றை ஈரான், ஈராக், சிரியா, லிபியா ஆகிய நாடுகளே வாங்கி வந்தன.

ஆனால் இந்த ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் 55 மில்லியின் கிலோ தேயிலை மட்டுமே ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இது மொத்த தேயிலை ஏற்றுமதியில் 30 வீதம் மட்டுமேயாகும்.

அரசியல் நெருக்கடிகளால் லிபியா, சிரியா போன்ற நாடுகளின் பிரதான துறைமுகங்களுக்கு தேயிலையை அனுப்ப முடியாத நிலை உள்ளதாக கொழும்பின் முன்னணி தேயிலை ஏற்றுமதி நிறுவனம் ஒன்றின் பணிப்பாளரான மலிக் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஈரான் மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத்தடையும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

ஈரானில் இருந்து ஏற்றுமதியாளர்கள் தமக்கான கொடுப்பனவை உள்ளூர் வணிக வங்கி ஒன்றின் ஏற்பாட்டில் வேறு வழிமுறை ஒன்றின் ஊடாகவே பெறுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இலங்கையின் நான்காவது மிகப்பெரிய தேயிலை ஏற்றுமதி நாடான சிரியாவில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளும், ஆண்டுதோறும் 10 மில்லியன் கிலோ தேயிலை அனுப்பப்படும் லிபியாவின் சந்தையும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இலங்கை தேயிலைச் சபையின் பணிப்பாளர் ஹசித டி சில்வா தெரிவித்துள்ளார்.

# அபிவிருத்தித் திட்டங்களை பிரசாரப்படுத்த, பெருமளவு பணம் விரயமாக்கப்படுகிறது

## குற்றஞ் சாட்டுகிறது ஜே.வி.பி

(கொழும்பு)

அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்களை பிரசாரம் செய்யும் நோக்கில் நடைபெற்று வரும் தேசத்திற்கு மகுடம் கண்காட்சிக்காக பாரியளவு பணம் விரயமாக்கப்படுவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இந்த ஆண்டின் ஆரம்பப் பகுதியில் புத்தளத்தில் நடைபெற்ற தேசத்திற்கு மகுடம் நிகழ்வுகளின் போது 65 மில்லியன் ரூபா பணம் விரயமாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

14அமைச்சுக்களும், அரசாங்க நிறுவனங்களும் இவ்வாறு பணத்தை விரயமாக்கியுள்ளதாக ஜே.வி.பி குற்றம் சுமத்தியுள்ளது. குறித்த கண்காட்சியில் கலந்து கொண்ட வெளிவிவகார அமைச்சு மட்டும் எட்டு மில்லியன் ரூபாவினை விரயம் செய்துள்ளதாக ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச ரீதியில் நாட்டின் நன்மதிப்பை உயர்த்துவதற்காக இந்தளவு பணம் விரயம் செய்யப்பட்டிருந்தால் அதனை ஏற்றுக்கொள்ள முடியும் எனவும், வெல்லவாய அல்லது புத்தளம் போன்ற பிரதேசங்களில் இவ்வளவு பணத்தைச் செலவு செய்ய வேண்டுமா என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதேவேளை, அமைச்சுக்களின் நடவடிக்கைகளை மக்களுக்கு தெளிவுபடுத்தும் நோக்கில் இந்தக் கண்காட்சி நடத்தப்படுவதாக ஆளும் கட்சியின் பிரதம கொறடா தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

## இன்று வருகிறார் பிளேக்

(கொழும்பு)

மத்திய மற்றும் தென் ஆசியப் பிராந்திய வலய நாடுகளுக்கான அமெரிக்க உதவி இராஜாங்கச் செயலாளர் ரொபரட் ஓ பிளேக் மூன்று நாள் விஜயமொன்றை மேற்கொண்டு இன்று இலங்கைக்கு விஜயம் செய்வார் என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அறிவித்துள்ளது.

அமைச்சர்கள், அரசியல்வாதிகள், சிவில் அமைப்புக்கள், பல்கலைக்கழக மாணவ பிரதிநிதிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருடனும் அவர் பேச்சுவார்த்தை நடத்துவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஏப்ரல் மாதத்திலும் ரொபர்ட் ஓ பிளேக் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை விடயத்தில் சர்வதேச தலையீடு தேவையில்லாத ஒன்று என்கிறார் காரியவசம்

(கொழும்பு)

**இலங்கை விவகாரத்தில் சர்வதேச சமூகம் தலையீடு செய்வதற்கான உசிதமான காலம் இதுவல்லவென இந்தியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் பிரசாத் காரியவசம் தெரிவித்துள்ளார் இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,**

இலங்கைக்கு எதிராக சுமத்தப்பட்டு வரும் அநேகமான குற்றச்சாட்டுக்கள் தொலைக்காட்சி விவரணங்களாகவும் அறிக்கைகளாகவுமே அமைந்துள்ளது.

எனினும், இவற்றைச் சரியான முறையில் உறுதிப்படுத்த முடியவில்லை.

வடக்கு மக்களின் நல்வாழ்விற்காக பெரும்பான்மையான புலம்பெயர் மக்கள் உதவிகளை வழங்கி வருகின்றனர். மேற்குலக நாடுகளிலும், தமிழகத்திலும் வாழும் ஒரு சில புலம்பெயர் தமிழர்கள் ஒத்துழைப்பு வழங்குவதில்லை.

யுத்தத்தின் பின்னரான நிலைமைகளைப் பயன்படுத்தி மக்களுக்கு சுபீட்சமான எதிர்காலத்தை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

எதிர்வரும் நவம்பர் மாதமளவில் உண்மையைக் கண்டறியும். ஆணைக்குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்படும்.

உள்நாட்டு ரீதியான தீர்வுத் திட்டமொன்றே நாட்டில் அமுல்ப்படுத்தப்பட வேண்டும்



உலகின் ஏனைய அனைவரை விடவும் இலங்கை மக்களின் தேவைகளை அரசாங்கம் அறிந்து வைத்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

## ஆணைக்குழுவின் அறிக்கையில் அவசர காலச்சட்ட நீக்கம்

(கொழும்பு)

அவசரகாலச் சட்ட நீக்கம் தொடர்பான யோசனை கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் உள்ளடக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையில் இந்த விடயம் உள்ளடக்கப்படும் என அதன் தலைவர் சீ.ஆர்.டி சில்வா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை தொடர்பான பூர்வாங்க நடவடிக்கைகள் பூர்த்தியாகியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆணைக்குழுவிற்கு கிடைத்த சாட்சியங்களின் முக்கியமானவை மட்டும் இறுதி அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

இந்த அறிக்கை மிகவும் பாரிய அறிக்கையாக அமையும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் 15ம் திகதி அளவில் நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# விமல்வீரவன்ச, சம்பிக்க இருவரும் புலனாய்வுப் பிரிவின் கண்காணிப்பில்

## என்கிறது கொழும்பு ஆங்கில வாரஇதழ்



(கொழும்பு)

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள் சம்பிக்க ரணவக்க, விமல் வீரவன்ச போன்றோரையும், அரசுக்கு ஆதரவளிக்கும் சில அரசியல்கட்சிகள் அமைப்புகளையும் புலனாய்வுச் சேவை தீவிரமாகக் கண்காணித்து வருவதாக கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

அரச புலனாய்வுச் சேவையே இந்தக் கண்காணிப்பை மேற்கொண்டு வருவதாக புலனாய்வு வட்டாரங்கள் கொழும்பு வாரஇதழிடம் தெரிவித்துள்ளன.

அமைச்சர்கள் சம்பிக்க ரணவக்க, விமல் வீரவன்ச ஆகியோருடன் அரசுக்கு எதிராக அண்மையில் கருத்து வெளியிட்ட ஜாதிக ஹெல உறுமயவின் அத்துரலிய ரத்ன தேரரும் புலனாய்வுச் சேவையின் கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இவர்களினதும், தேசிய சுதந்திர முன்னணி, ஜாதிக ஹெல உறுமய போன்ற கட்சிகள் மற்றும் அவற்றைச் சார்ந்த அமைப்புகளினதும் பேரணிகள், கூட்டங்களில் நிகழ்த்தப்படும் உரைகள் குறித்தும் உன்னிப்பாகக் கண் காணிக்குமாறு அரச உயர் மட்டமே அரச புலனாய்வுச் சேவைக்குப் பணித்துள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் கூறியுள்ளன.

அரசாங்கத்தரப்பில் இருந்தாலும், இவர்களின் உரைகள் மற்றும் செயற்பாடுகளால் அரசுக்கு பாதிப்பு ஏற்படலாம் என்பதாலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் புலனாய்வு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

கண்காணிக்கப்படுவது குறித்து தாம் அறிந்திருப்பதாக தேசப்பற்று தேசிய முன்னணியின் பொதுச் செயலர் வசந்த பண்டார கொழும்பு வார இதழிடம் கூறியுள்ளார்.

தமது தொலைபேசி அழைப்புகள் ஒட்டுக்கேட்கப்படுவதாகவும் கூறியுள்ள அவர், தாம் அரசுடன் எல்லா விடயங்களிலும் முரண்படவில்லை என்றும் ஒரு சில விடயங்களில் மட்டுமே முரண்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை அமைச்சர் சம்பிக்க ரணவக்க புலனாய்வு அதிகாரிகளால் தாம் கண்காணிக்கப்படுவதை அறியவில்லை என்று கூறியுள்ளார்.

தம்மையோ தமது கட்சியையோ உன்னிபாகக் கண்காணிக்க வேண்டிய அவசியம் ஏதுமில்லை என்றும் கூறியுள்ள சம்பிக்க ரணவக்க,தாம் அரசின் சில முடிவுகள் மற்றும் கொள்கைகள் விடயத்தில் மட்டுமே மாற்றுக்கருத்தைக் கொண்டிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

ஜாதிக ஹெல உறுமயவின் ஊடகப் பேச்சாளர் நிசாந்த சிறி வர்ணசிங்கவும் இதுபற்றி தாம் அறிந்திருக்கவில்லை என்று தெரிவித்துள்ளார்.

# கிறிஸ்பூத சர்ச்சையின் பின்னணியில் புலிகளின் சர்வதேச வலையமைப்பு

## கூறுகிறது திவயின

(கொழும்பு)

கிறிஸ் பூதம் தொடர்பான சர்ச்சையின் பின்னணியில் விடுதலைப் புலிகளின் சர்வதேச வலையமைப்பு செயற்பட்டு வருவதாக திவயினப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. இதுதொடர்பாக அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையின் சுற்றுலாக் கைத்தொழிலுக்கு பங்கம் ஏற்படுத்தும் நோக்கில் கிறிஸ் பூத வதந்திகள் பரப்பப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

இராணுவ முகாம்களில் உள்ள படையினர் கிறிஸ் பூதங்கள் போன்று தோன்றி சுற்றுலாப் பயணிகளுக்கு இடையூறு ஏற்படுத்துவதாகவும் பொருட்களை கொள்ளையிடுவதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சுற்றுலாப் பயணிகளின் வருகை 36 வீதமாக உயர்வடைந்துள்ள காரணத்தினால் விடுதலைப் புலிகளின் சர்வதேச வலையமைப்பு இந்தச் சதித் திட்டத்தை தீட்டியுள்ளதாகத தெரிவிக்கப்படுகிறது.

கனடா மற்றும் பிரிட்டனைச் சேர்ந்த புலி ஆதரவாளர்கள் சுற்றுலாப் பயணிகளைப் போன்று வடக்கு புலம் பெயர் தமிழ் மக்களின் இந்த நாச வேலை குறித்து பிரதிக் காவல்துறை மா அதிபர் பூஜித ஜயசுந்தர உயர் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளார்.

பிரிட்டன் தமிழ்ப் பேரவை மற்றும் கனேடிய புலிகள் அமைப்பு ஆகியன இணைந்து இந்தப் போலிப் பிரசாரங்களை மேற்கொண்டு வருவாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அண்மையில் பிரிட்டனிலிருந்து இலங்கை சென்ற தாய் மற்றும் மகளை புலனாய்வுப் பிரிவினர் தீவிர விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



திரு. T.S.திலக்

கற்பித்தல் செயற்பாட்டில் முன்னணியில் உள்ள ஆசிரியர்களில் ஒருவர்.

# க.பொ.த. சா/த பரீட்சை - 2011

நேரம்: 1 மணித்தியாலம்

# கல்வி முரசு O/L

## வணிகக் கல்வியும் கணக்கீடும் - பகுதி I



திரு. S.சுகுமாரன

கற்பித்தல் செயற்பாட்டில் முன்னணியில் உள்ள ஆசிரியர்களில் ஒருவர்.

**யாழ்.மாவட்டத்திலுள்ள 5 வலயங்களின் ஆசிரிய ஆலோசகர்கள், கற்பித்தல் செயற்பாட்டில் முன்னணியிலுள்ள ஆசிரியர்களால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்**

**எல்லா வினாக்களுக்கும் விடைதருக.**

1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் 1,2,3,4 என எண்ணிடப்பட்ட விடைகளின் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

01. நிரல் (அ) இல் பணவகைகள் சிலவும் நிரல் (ஆ) இல் அவ்வகைக்கு உதாரணமும் தரப்பட்டுள்ளன.

| நிரல் (அ) | நிரல் (ஆ) |
|---|---|
| 1. பண்டப் பணம் | A - காசோலை |
| 2. சட்டப் பணம் | B - கடற்சிற்பி |
| 3. வங்கிப் பணம் | C - கடனட்டை |
| 4. இலத்திரன் பணம் | D - தாள், உலோக நாணயம் |

நிரல் (அ) இல் உள்ள பண வகைகளின் ஒழுங்கின்படி நிரல் (ஆ) வின் உதாரணங்களைச் சரியாகப் பொருந்தினால் கிடைக்கும் வரிசை பின்வருவனவற்றுள் எது?
1. ADCB  2. BCAD  3. BDAC  4. DBAC

02. தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவுசெய்து கொள்வதற்காகப் பண்டங்களையும் சேவைகளையும் பிறருக்காக உருவாக்கிக் கொள்ளும் செயன்முறை எவ்வாறு அழைக்கப்படும்?
1. முதனிலை உற்பத்திகள்  2. நேரில் உற்பத்திகள்
3. சிற்றளவு உற்பத்திகள்  4. நேர் உற்பத்திகள்

03. வணிகமென்பது மனிதத் தேவைகள் விருப்பங்களை நிறைவுசெய்து கொள்வதற்காக இடம்பெறும் பொருளாதாரச் செயற்பாடுகள்.
1. ஒவ்வொன்றும் ஆகும்  2. ஏதாவது ஒன்று ஆகும்
3. எந்த ஒன்றும் ஆகும்  4. அன்னத்தும் ஆகும்

04. நல்ல பணத்தின் தொழிற்பாடுகளும் இயல்புகளும் வகுக்கப்பட்டுள்ளன. இவற்றில் எது பிரதான தொழிற்பாடு ஆகும்.
1. பரிமாற்றும் ஊடகம்  2. பொது அங்கீகாரம்
3. பெறுமான அளவீடு  4. நெடு வாழ்வு

05. ஆக்கக் கைத்தொழில் விருத்தியடைவதில் செல்வாக்குச் செலுத்திய பிரதான காரணியாகக் கருதக்கூடியது எது?
1. தகவல் தொழில்நுட்பப் புரட்சி  2. கைத்தொழில் புரட்சி
3. தனியாள் சிறக்குமியல்பு  4. தொழிற் பிரிப்பு

06. 2007 இன் 7ஆம் இலக்கச் சட்டத்தின்படி எவ்வகையான வணிகங்கள் அமைக்கப்படுவது இலகுவாக்கப்பட்டுள்ளது.
1. வரையறுத்த கம்பனிகள்  2. தனியுடமை
3. பங்குடமை  4. கூட்டுறவு நிறுவனங்கள்

07. வணிகத் திட்டமொன்றைத் தயாரிக்க முன், மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாது?
1. பதிவு செய்தல்  2. சந்தை ஆய்வு செய்தல்
3. ஊழியர்களைச் சேர்த்தல்  4. நிதியைத் திரட்டுதல்

08. 1918 இன் 6 ஆம் இலக்க வணிகப் பெயர்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்து கொள்ளப்படாத நிறுவனம்.
1. கொழும்பு தமிழ்ச் சங்கம்  2. ராதா ரேடிங் கம்பனி
3. மோகன் சகோதரர்கள்  4. வரையறுத்த கண்ணன் கம்பனி

09. இலக்கு நுகர்வோர் யார்?
1. சந்தையில் உள்ள நுகர்வோரில் தெரிவு செய்த ஒரு குழுவினர்
2. சந்தையில் உள்ள நுகர்வோரில் தெரிவு செய்த ஒன்று அல்லது மேற்பட்ட குழுவினர்
3. சந்தையில் உள்ள அனைத்து நுகர்வோர் குழுவினர்
4. சந்தையில் உள்ள அனைத்து நுகர்வோர்

10. தொழில் முகவர் நிலையமொன்றை நடத்திவரும் அருணகிரி என்பவர் வங்கிக் கணக்கொன்றை ஆரம்பித்து காசோலைகளைப் பயன்படுத்த விரும்புகின்றார். அவர் பின்வருவனவற்றில் எதனைத் தெரிவு செய்ய வேண்டும்.
1. நடைமுறைக் கணக்கு - இலங்கை வங்கி
2. நடைமுறைக் கணக்கு - இலங்கை மத்திய வங்கி
3. சாதாரண சேமிப்புக் கணக்கு - மக்கள் வங்கி
4. நிலையான சேமிப்புக் கணக்கு - தேசிய சேமிப்பு வங்கி

11. கமலா காசநோய்க்கு சிகிச்சை பெற்றிருந்தாள். காப்புறுதி விண்ணப்பத்தில் அதனை வெளிப்படுத்தவில்லை. கமலாவின் மகள் காஞ்சனா தாயின் இறப்பினைத் தொடர்ந்து சமர்ப்பித்த இழப்பீட்டுக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. இதற்கு ஏதுவான காப்புறுதிக் கோட்பாடு யாது?
1. காப்புறுதி உரித்து  2. உச்ச நம்பிக்கை
3. இழப்பீடு  4. அண்மிய காரணம்

12. தொடர்பாடல் செயன்முறையில் அடங்காத ஒரு முக்கிய அம்சம்
1. செய்தி  2. துலங்கல்  3. பின்னூட்டல்  4. செம்மை

13. தற்காலத்தில் ஒரு தொடர்பாடல் ஊடகமாக "மின்னஞ்சல்" துரிதமாக ஜனரஞ்சகமடைந்தமைக்கு பிரதான காரணம்.
1. அச்சு வடிவில் அமைதல்  2. தெளிவாக இருத்தல்
3. நேரடியான செலவு இன்மை  4. பிரதி எடுக்க முடிதல்

14. பாதை, ஊடகம், சக்தி, முடிவிடம் ஆகியன போக்குவரத்து மூலக் கூறுகள் ஆகும். இவற்றில் அதிகம் புதியனவற்றைத் தருவது.
1. பாதை  2. ஊடகம்  3. சக்தி  4. முடிவிடம்

15. பின்வரும் வணிக நிதித் தேவைகளுள் குறுங்கால நிதித் தேவையாகக் கருதப்படுவது யாது?
1. பொறியொன்றினைக் கொள்வனவு செய்தல்
2. சரக்கைக் கொள்வனவு செய்தல்
3. சரக்கைக் கொண்டு செல்வதற்கான லொறியைக் கொள்வனவு செய்தல்
4. கட்டடத்தில் சரக்கைப் பேணுவதற்கான குளிர்சாதனங்களைப் பொருத்துதல்

16. வரையறுத்த பொதுக் கம்பனியொன்றில் சாதாரண பங்குகளை வாங்குவதற்கு ஏன் முதலீட்டாளர்கள் அதிகம் ஆர்வம் காட்டுகின்றனர்.
1. இயக்குநர்களாகப் பதவி வகித்தல்
2. கூடிய வீதவட்டி பெறுதல்
3. வரையறாத அளவு பங்குலாபம் பெறுதல்
4. இலகுவாகப் பங்கிலாபம் பெறல்

17. பேக்கரி வணிகமொன்றினால் செய்யப்பட்ட பின்வரும் செலவுகளுள் நேர்பொருள் கிரயமாகக் கருதக்கூடியது யாது?
1. மாஜரின்  2. கோதுமை மா  3. எண்ணெய்  4. உப்பு

18. வரதன் தனது வணிகத்துக்காகப் பெற்றிருந்த கடன் ரூபா 60000 இல் தவணைக் கொடுப்பனவாக ரூபா 5000 ஐ செலுத்தினார். இக்கொடுக்கல் வாங்கல் காரணமாக அவரது வணிகத்தின்,
1. சொத்துக்களும் உரிமையும் அதிகரிக்கும்
2. சொத்துக்களும் பொறுப்புக்களும் குறைவடையும்
3. சொத்து அதிகரிக்க உரிமை குறையும்
4. சொத்துக்கள் அதிகரிக்கும் பொறுப்புக்கள் குறைவடையும்

19. வணிகமொன்றின் கணக்கீட்டுச் சமன்பாடு பின்வருமாறு, சொத்துக்கள் (ரூ150000) = உரிமை + (ரூ 100000) பொறுப்புக்கள் (ரூ 50000) இவ்வணிகத்துக்காக ரூ 50000 இற்கான தளபாடங்கள் "டம்றோ" நிறுவனத்தில் இலகு தவணை முறையில் வாங்கப்பட்ட பின்னர் கணக்கீட்டுச் சமன்பாடு எவ்வாறு அமையும்.
1. சொத்துக்களும் உரிமைகளும் அதிகரிக்கும்
2. சொத்துக்களும் பொறுப்புக்களும் அதிகரிக்கும்
3. சொத்து அதிகரிக்க உரிமை குறையும்
4. சொத்துக்கள் அதிகரிக்கும் பொறுப்புகள் குறைவடையும்

20. கொடுக்கல் வா_கல்கள் அதற்கான முதற்பதிவேடு, மூல ஆவணத்தையும் தவறாகக் காட்டுவது,
1. சரக்குக் கடன் விற்பனை - விற்பனை நாளேடு
2. நிலையான சொத்துக்கடன் கொள்வனவு - கொள்வனவுப் பட்டியல் - கொள்வனவு நாளேடு
3. கொள்வனவு திரும்பல் - வரவுத்தாள் - வெளித்திரும்பல் நாளேடு
4. விற்பனைத் திரும்பல் - செலவுத்தாள் - உட்திரும்பல் நாளேடு

21. உப்பு விற்பனை வணிகமொன்றினை நடத்திச் செல்லும் உதயகுமார் கடந்த மாதத்தில் ஒரு கிலோ ரூ. 20 படி 20000 கிலோ உப்பு 20 வீதம் வியாபாரக் கழிவுடன் விற்பனை செய்துள்ளார். சகல விற்பனைகளும் கடனுக்குச் செய்யப்பட்டன. கடந்த மாதத்தில் அவரது வணிகத்தின் விற்பனைகள் எவ்வளவு?
1. ரூ.400000  2. ரூ.80000  3. ரூ.480000  4. ரூ.320000

22. பொருத்தமான போக்குவரத்துமுறை மற்றும் போக்குவரத்து ஊடகமொன்றினைத் தெரிவு செய்யும்போது வணிகர் ஒருவர் கவனம் செலுத்த வேண்டிய காரணங்களாவன கிரயம், பாதுகாப்பு, கொள்ளனவு மற்றும்,
1. வலு  2. வழி  3. முடிவிடம்  4. கதி

23. வங்கிக் கணக்கிணக்கக் கூற்றைத் தயாரிக்கும்போது பயன்படுத்தப்படும் ஓர் பிரதான உருப்படி பின்வருவனவற்றுள் எது?
1. காசோலைப் புத்தகக் கட்டணம்  2. வங்கிக் கட்டணம்
3. நேரடி வைப்புக்கள்  4. மாற்றப்படாத காசோலைகள்

24. வணிகமொன்றின் சில்லறைக் காசேட்டின் வசக்கட்டு ரூ.3000 குறித்த ஒரு மாதத்தின் செலவுத் தொகை ரூ.1900 எனின் மீள் நிரப்புத் தொகை யாது?
1. ரூ.3000  2. 4900  3. ரூ.1900  4. ரூ.1100

25. வாகனமொன்றிற்கு ரூ.40000 இற்குப் புதிய என்ஜின் பொ ருத்தப்பட்டது. இதனை வாகனப் பழுதுபார்த்தல் செலவுக் கணக்கு வரவில் பதிதல் ஒரு,
1. ஈடு செய்யும் வழு  2. கோட்பாட்டு வழு
3. ஏற்படுத்தப்பட்ட வழு  4. தவறவிட்ட வழு

26. பெற்ற கழிவு ரூ.200 கொடுத்த கழிவுக் கணக்கில் வரவில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இத்தவறைத் திருத்துவதற்காகத் தொங்கல் கணக்கில்,
1. ரூ.400 வரவு வைத்தல் வேண்டும்
2. ரூ.400 செலவு வைத்தல் வேண்டும்
3. ரூ.200 வரவு வைத்தல் வேண்டும்
4. ரூ.200 செலவு வைத்தல் வேண்டும்

27. பின்வரும் செலவுகளுள் வருமானச் செலவாகக் கருதத்தக்கது எது?
1. பலசரக்கு வியாபாரத்தில் மேசைக் கொள்வனவு
2. தளபாட வியாபாரத்தில் அலுமாரி கொள்வனவு
3. மரக்கறி வியாபாரத்தில் லொறி கொள்வனவு
4. சிற்றுண்டிச் சாலையில் தொலைக்காட்சி கொள்வனவு

28. நேர்கோட்டு முறையில் நிலையான சொத்தொன்றின் வருடத் தேய்வுத் தொகையைக் கணிக்கும்போது கவனத்தில் கொள்ளத் தேவையற்ற காரணி
1. சந்தைப் பெறுமதி  2. கிரயம்
3. எஞ்சிய பெறுமதி  4. விளைதிறனுடைய ஆயுட்காலம்

29. வணிகமொன்றின் நிதி நிலை எதன் மூலம் காட்டப்படும்
1. விற்பனைக் .கணக்கு  2. காசேட்டில்
3. இலாப நட்டக் கணக்கில்  4. ஐந்தொகையில்

30. வணிகமொன்றின் எண்கணிதச் செம்மையை சரிபார்க்கப் பயன்படுவது எது?
1. பரீட்சை மீதி  2. ஐந்தொகை
3. காசேடு  4. தொங்கல் கணக்கு

31. உரிமையாண்மையில் அதிகரிப்பை ஏற்படுத்துவது,
1. சரக்குப்பற்று  2. காசுப்பற்று  3. இலாபம்  4. நட்டம்

32. இலபா நட்டக் கணக்கில் உள்ளடக்கப்படாத செலவின வகை?
1. நிலைய நிர்வாகச் செலவு  2. விற்பனை விநியோகச் செலவு
3. நிதி ஏனைய செலவு  4. ஆலைமேந்தலைச் செலவு

33. உற்பத்தி வணிகமொன்றின் சகல நேர்க்கிரயங்களின் மொத்தம்
1. மொத்தக் கிரயம்  2. மேந்தலைக் கிரயம்
3. மூலக்கிரயம்  4. அலகுக் கிரயம்

34. நாளேடாகவும் பேரேடாகவும் இரட்டைத் தொழிற்பாட்டை மேற்கொள்வது,
1. காசேடு  2. சில்லறைக் காசேடு
3. இரட்டை நிரற் காசேடு  4. பொதுத் தினசேரி

35. பொதுத் தினசேரியொன்று பயன்படுத்தப்படும் சந்தர்ப்பம்
1. திருத்தும் பதிவுகள்  2. செம்மையாக்கும் பதிவுகள்
3. தொடக்கப் பதிவுகள்  4. மேற்சொன்னவை யாவும்

36. வங்கிக் கணக்கிணக்கக் கூற்றைத் தயாரிக்கும்போது பயன்படுத்தும் மூல ஆவணம்?
   1. வங்கிக் கூற்று 2. காசோலை அடியிதழ்
   3. மேற்சொன்ன இரண்டும் 4. எவையுமன்று

37. சில்லறைக் காசாளரின் பிரதான பணி அல்லாதது,
   1. பிரதான காசாளரிடம் பணம் பெறுதல்
   2. சில்லறை வருமானங்களுக்கான பணம் பெறுதல்
   3. சிறு செலவினங்களைப் பகுப்பாய்வு செய்து பணம் கொடுத்தல்
   4. சில்லறைக் காசேட்டில் பதிவுகளை மேற்கொள்ளல்

38. வணிகத்தின் ஐந்தொகையில் நடைமுறைச் சொத்தாகக் காட்டப்படுவது,
   1. கொடுத்த தரகு 2. பெற்ற தரகு
   3. பெறவேண்டிய தரகு 4. முன்னதாகப் பெற்ற தரகு

39. அறவிட முடியாக் கடன் தாக்கல் செய்வதன் காரணமாக,
   1. கடன்பட்டோர் நிலுவை அதிகரிக்கும்
   2. கடன்கொடுத்தோர் நிலுவை அதிகரிக்கும்
   3. கடன்கொடுத்தோர் நிலுவை குறையும்
   4. கடன்பட்டோர் நிலுவை குறையும்

40. 1.1.2009 இல் மீதிகள்
   1. மோட்டார் வாகனம் ரூ.20000
   2. வாகனத் தேய்மான ஏற்பாடு ரூ.4000 பெறுமானத் தேய்வு நேர்கோட்டு முறையில் 10 வீதம் செய்யப்படின் இலாப நட்டக் கணக்கில் தாக்கல் செய்யப்படுவது,
   1. ரூ.2000 வரவில் 2. ரூ.6000 வரவில்
   3. ரூ.2000 செலவில் 4. ரூ.6000 செலவில்

## வணிகக் கல்வியும் கணக்கீடும் - பகுதி II

நேரம் : 2 மணித்தியாலம்

**முதலாம் வினா உட்பட பகுதி - I இலிருந்து இரண்டும் வினாக்களையும் பகுதி - II இலிருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**

01. பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியின் உயர்தர வகுப்பைக் கற்று முடித்த மாணவனான கபிலன் உயர்தரக் கல்விக்குப் பின் ஹோட்டல் முகாமைத்துவத்தில் உணவும், குடிபானமும் தொடர்பான பாடநெறியை இலங்கை ஹோட்டல் கூட்டுத்தாபனத்தில் நிறைவு செய்துள்ளார். இவர் மாலை வேளைகளிலும், விடுமுறை தினங்களிலும் அதிகமான மாணவர்கள் வெள்ளவத்தை, உருத்திரா மாவத்தைக்கு வந்து செல்வதை அவதானித்துக் கொண்டார். அவ்வீதியில் சிற்றுண்டிச்சாலை வசதி இல்லாமையையும், மாணவர்கள் காலி வீதி நோக்கிச் செல்வதையும் அவதானித்தார். இதனைக் கருத்திற் கொண்டு அவ்வீதியில் ஓர் சிற்றுண்டிச்சாலை வணிகத்தை அமைக்க எண்ணினார். அச்சிற்றுண்டிச் சாலைக்கு "கபிலன் பாஸ்வூட்" எனப் பெயரிட்டதுடன், மாணவர்களுக்குத் தரமானதும், நியாயமான விலையிலும் உடன் உணவுகள் வழங்குவதை நோக்கமாகக் கொண்டு செயற்பட எண்ணினார்.

இதற்காக 01.04.2009 இல் தன்னிடமிருந்த 300000 ரூபா காசை மூலதனமாக இட்டார். மேலும் வங்கியில் 100000 ரூபாவைக் கடனாகப் பெற்றார். ரூபா 25000 இற்குத் தளபாடங்களைக் கொள்வனவு செய்தார். கட்டடமொன்றை மாதாந்த வாடகையாக ரூபா 10000 செலுத்தி வணிகம் செய்ததற்காகப் பெற்றுக் கொண்டார்.

01.01.2011 இல் நிதிப் பற்றாக்குறை காரணமாகத் தனது நண்பன் சுரேஷ் என்பவரை ரூ.200000 பணம் பெற்றுக்கொண்டு வியாபாரத்தில் 01.01.2010 இல் கணக்கெடுத்தலின்போது உணவுப் பொருள் கொள்வனவிற்கும் ஏனைய செலவுகளுக்குமாக ரூ.300000 செலவிடப்பட்டுள்ளது. குறித்த காலப் பகுதியில் விற்பனையின் மூலம் ரூ.500000 பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

1. கபிலன் இவ்வியாபாரத்தை ஆரம்பிக்கத் தூண்டப்படத் தேவையாக இருந்த காரணிகள் இரண்டு தருக.
2. கபிலன் ஆரம்பித்த வியாபார நிறுவனம் எவ்வகையைச் சார்ந்தது ஆகும்?
3. இவ்வியாபாரம் பதிவு செய்யப்பட வேண்டுமா? உமது விடைக்கான காரணத்தைக் குறிப்பிடுக.
4. 01.01.2010 இல் நண்பன் சுரேஷ் வியாபார முயற்சியில் சேர்த்த பின்னர் அம்முயற்சியின் பலம் பலவீனம் இரண்டையும் தருக.
5. நணபன் சுரேஷைச் சேர்தத பின்னர் இது எவ்வகையான வியாபார அமைப்பாக மாறுகின்றது? அவ்வியாபார நிறுவகத்தைப் பதிவுசெய்ய வேண்டுமா?
6. 31.03.2010 இல் முடிவடையும் நிதியாண்டில் உழைக்கப்பட்ட இலாபம் எவ்வளவு?
7. மேற்படி இலாபத்தில் நாலின் மூன்று பங்கு கபிலனுக்கும் நாலின் ஒரு பங்கு சுரேஷிற்கும் பகிரப்படின் அவர்கள் இருவருக்கும் கிடைக்கும் இலாபத்தைத் தனித்தனியே கணிப்பிடுக.
8. நிதியாண்டு காலப்பகுதியில் கபிலன் ரூ.10000 தையும், சுரேஷ் ரூ.10000 காசாகப் பற்றியிருப்பின் நிதியாண்டு முடிவில் (31.03.2010) கபிலனின் மூலதனப் பங்கையும் சுரேஷின் மூலதனப் பங்கையும் தனித்தனியாகக் கணிப்பிடுக.
9. இவ்வியாபாரம் விரிவாக்கப்படும்போது மேற்கொள்ளக் கூடிய வியாபார வாய்ப்புகள் இரண்டைத் தருக.
10. மாணவர்கள் உட்பட பெரும்பாலான மக்கள் அண்மைக்காலமாக "கபிலன் பாஸ்வூட்" நிறுவகங்களை நடுவதற்கான காரணங்கள் யாவை?

## வணிகக் கல்வி - பகுதி I

(இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.)

02. 1) பண்டங்களுக்குப் பதிலாக பண்டங்கள் பரிவர்த்தனை செய்யும் வியாபாரம் எவ்வாறு அழைக்கப்படும்?

2) அ. கைத்தொழிற் புரட்சி எவ்வகையான உற்பத்திப் பெருக்கத்திற்கு ஏதுவானது?
ஆ. தகவல் தொழில்நுட்பப் புரட்சி எத்தகைய வியாபாரத்திற்கு வழிவகுத்தது?

3) பணத்தின் பிரதான இயல்பு யாது? பணத்தின் பிரதான தொழிற்பாடு யாது?

4) வணிகக் கருமங்களில் செல்வாக்கைச் செலுத்தும் காரணிகள் இரண்டைக் குறிப்பிட்டு அது தொழிற்படும் முறையை விபரிக்க.

03. 1) பின்வருவனவற்றை ஆரம்பிக்க அனுமதிப் பத்திரம் எங்கு பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.
(அ) வணிக வங்கி (ஆ) அச்சகம்
(இ) சாரதிப் பயிற்சி நிலையம் (ஈ) கடதாசித் தொழிற்சாலை

2) வணிகச் சூழல் எவ்வாறு அடிப்படையில் இரண்டு வகைப்படும்? வணிகத்தினால் கட்டுப்படுத்த முடியாத சூழலைக் குறிப்பிட்டு அதில் அடங்கும் இரண்டு காரணிகளைக் குறிப்பிடுக.

3) பதிவு செய்யப்பட வேண்டிய இருவகை வணிக அமைப்புக்களைக் குறிப்பிட்டு எந்தச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படும் எனக் குறிப்பிடுக.

4) வணிக வங்கியல்லாத நிதி நிறுவனங்கள் எவ்வாறு இரண்டு வகைப்படும்? அவற்றுக்கு உதாரணங்கள் தருக.

04. 1) வினைத்திறனான போக்குவரத்து, தொடர்பாடல் என்பன வாழ்க்கைச் செலவினைக் குறைக்க எவ்வாறு உதவுகின்றன.

2) அ) பொதுக் குறுக்குக்கோடு, சிறப்புக் குறுக்குக்கோடு என்பவற்றின் கோடுகளுக்கிடையில் இடம்பெறக்கூடிய இரு பதங்களைத் தருக.
ஆ) காசோலையொன்றுக்குப் பணம் வழங்க வங்கி மறுக்கும் சந்தர்ப்பங்களைத் தருக.

3) அ) தெருப்போக்குவரத்து முறைகளில் காணப்படும் குறைபாடுகள் இரண்டு தருக.
ஆ) திறைசேரி உண்டியல், திறைசேரி முறிகள் இவை இரண்டுக்கும் இடையிலான பிரதான வேறுபாடு யாது?

4) வரையறுத்த கம்பனிகள் பொதுமக்களுக்குப் பங்குகளை வழங்குவதால் எத்தகைய நன்மைகளைப் பெற்றுக்கொள்கின்றன?

## வணிகக் கல்வி - பகுதி II

(இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.)

05. 1) வணிகமொன்றின் பரீட்சை மீதி சமப்பட்டதாயினும் கூட வணிகத்தின் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்வதில் தவறுகள் நிகழ்ந்திருப்பதற்கு இடமுண்டு. இவ்வாறாக பரீட்சை மீதியினால் வெளிப்படுத்தப்படாத இரண்டு தவறுகளை உதாரணம் காட்டிக் குறிப்பிடுக.

2) சாகரன் வணிகத்தின் 31.03.2009 அன்று உள்ளவாறு தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதி சமப்படவில்லையாகையால் வித்தியாசமாகிய ரூ.20000 தொங்கற் கணக்கில் செலவு வைக்கப்பட்டது. பின்னர் பின்வரும் தவறுகள் கண்டு பிடிககப்பட்டன.

கடன் கொடுத்தோனாகிய ரவியிற்கு செலுத்தி ரூ.15000 இற்குரிய காசோலை ரவியின் கணக்கில் சரியாகக் குறிக்கப்பட்டுள்ள போதிலும் அது காசேட்டில் குறிக்கப்படவில்லை.

கொள்வனவுப் பேரேட்டின் மொத்தம் ரூ.22000 ஆனது ரூ.20000 எனக் கொள்வனவுக் கணக்கில் குறிக்கப்பட்டுள்ளது.

கடன்பட்டோனாகிய சரவணனிடம் கிடைத்த ரூ.4000 காசேட்டிலும், சரவணனின் கணக்கிலும் வரவுப் பக்கத்தில் குறிக்கப்பட்டுள்ளன.

செலுத்திய வங்கி வட்டி ரூ.1000 காசேட்டில் சரியாகக் குறிக்கப்பட்டுள்ளதெனினும் வேறு பதிவுகள் எதுவும் வேண்டப்படுவன கிடையாது.

அ. தவறுகளைத் திருத்துவதற்குத் தேவையான பேரேட்டுக் குறிப்புகள்
ஆ. தொங்கற் கணக்கு

06. 1) 'சுவசக்தி' வணிக நிறுவனத்தின் காசேட்டிற்கு அமைய 2004 நவம்பர் 30 ஆம் திகதியன்று இருந்தபடி வங்கி நிரலின் வரவு மீதி ரூபா 5600 ஆகும். ஆனால் அதே திகதியில் வங்கிக் கூற்று ரூ.5800 எனும் செலவு மீதியைக் காட்டுகிறது. இவ்வேறுபாட்டிற்கான காரணங்களை ஆராய்ந்த பொழுது பின்வரும் விடயங்கள் வெளிப்பட்டன.
அ) வைப்புச் செய்யப்பட்டு ஆனால் காசாக்கப்படாதிருந்த காசோலைகளின் பெறுமானம் ரூ.1400 ஆகும்.
ஆ) வணிகத்தினால் வழங்கப்பட்ட நிலையான கட்டளைக்கு அமையச் செலுத்தப்பட்ட காப்புறுதிக் கட்டணம் ரூபா.1350 ஆகும்.
இ) வழங்கப்பட்டு ஆனால் காசாக்கப்படுவதற்கு வங்கியிடம் சமர்ப்பிக்கப்படாதிருந்த காசோலைகளின் பெறுமானம் ரூபா 2800 ஆகும்.
ஈ) வணிகத்தின் சார்பில் வங்கிக்கு நேரடியாகக் கிடைத்த பங்குலாபங்கள் ரூபா 1500 ஆகும்.
உ) வங்கியினால் வணிகத்தின் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்ட வங்கிக் கட்டணங்கள் ரூபா 450 ஆகும்.

நீர் செய்ய வேண்டியவை:-
1. 2004 நவம்பர் 30ஆம் திகதியன்று இருந்தபடி காசேட்டைச் செம்மையாக்கம் செய்க.
2. செம்மையாக்கல் செய்த காசேட்டு மீதியுடன் ஆரம்பித்து வங்கிக் கணக்கிணக்கக் கூற்றைத் தயாரிக்கவும்.

07. 1) பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் ஒவ்வொன்றும் சொத்துக்கள், பொறுப்புக்கள், மூலதனம் என்பவற்றின் மீது எவ்வாறு தாக்கம் செலுத்தும் என்பதை அதிகரிக்கும் குறைக்கும் அல்லது மாற்றம் எதுவுமில்லை என எழுதுவதன் மூலம் எடுத்துக்காட்டுக.

அ) உரிமையாளர் ரூபா 50000 எனும் தொகையை மேலதிக மூலதனமாக முதலீடு செய்தல்
ஆ) கடன்கொடுத்தோருக்கு ரூபா 10000 எனும் தொகையைச் செலுத்துதல்.
இ) வணிகத்திற்கு ரூபா 50000 கடனொன்றறைப் பெற்றுக் கொள்ளுதல்
ஈ) வணிக வங்கிக் கணக்கிலிருந்து உரிமையாளரின் ஆயுட்காப்புறுதிக் கட்டணமாக ரூபா 2500 எனும் தொகையைச் செலுத்துதல்.

விடையளிப்பதற்குப் பின்வரும் மாதிரி அமைப்பினைக் கொண்ட அட்டவணையொன்றைப் பயன்படுத்துக.

| கொடுக்கல் வாங்கல்கள் | சொத்துக்கள் | மூலதனம் | பொறுப்புகள் |
|---|---|---|---|
| அ) | | | |
| ஆ) | | | |
| இ) | | | |
| ஈ) | | | |

02. பின்வரும் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்வதற்காகப் பயன்படுத்தப்படும் மூலப்பதிவேடுகள், பேரேடுகள், மூல ஆவணங்களைக் குறிப்பிடுக.
அ) விற்ற பண்ட உட்திரும்பல்
ஆ) கடன்பட்டோர் ஒருவரிடமிருந்து பணம் கிடைத்தல்
இ) மீள்விற்பனை செய்வதற்கான, தளபாடங்களைக் கடனாகக் கொள்வனவு செய்தல்.

ஒரு ஊரே நகர்ந்து செல்வது போன்ற கப்பல், தண்ணீரில் மிதப்பது எப்படி என்ற வியபபு நமக்கு உண்டு. கடலில் கப்பல்கள் எவ்வாறு மிதக்கின்றன என்று பார்ப்போம். சிறிய கப்பல்கள், பெரிய கப்பல்கள் என்ற வித்தியாசமின்றி எல்லா கப்பல்களுக்கும் அதிக எடை கொண்டவை. ஆகவே ஒரு கப்பல் தண்ணீரில் இருக்கும்போது அதன் உடற்பகுதி ஓரளவு வரை தண்ணீரில் அமிழ்ந்திருக்கும். அதாவது, கப்பலின் எடைக்குச் சமமான தண்ணீர் இடம்பெயரும் வரை அதன் உடற்பகுதி தண்ணீரில் அமிழும். 10 ஆயிரம் தொன் எடையுள்ள ஒரு கப்பலின் உடற்பகுதி, அதே எடையுள்ள தண்ணீரை இடம பெயரச் செய்யும். எனவே ஒரு கப்பலின் எடையைக் கூறுவதற்குப் பதிலாக, அது இடம்பெயரச் செய்யும் தண்ணீரின் எடையைக் கூறுகிறார்கள். அதாவது ஒரு கப்பலின் ஹடிஸ்பிளேஸ்மென்ட் 10 ஆயிரம் தொன் என்று கூறுவார்கள்.

அமிழ்ந்துள்ள கப்பலின் ஒவ்வொரு பகுதியையும் தண்ணீர் அழுத்துகிறது. தண்ணீரில் கிடப்பு நிலையில் இருந்து ஏற்படும் அழுத்தங்கள் கப்பலின் உடற்பகுதியை நசுககுகின்றன. ஆனால் அவை இந்த நடைமுறையில் ஒன்றையொன்று அமிழ்நது சமநிலையை ஏற்படுதது கின்றன. செங்குத்தான போக்கில்



# கப்பல் நீரில் மிதப்பது எப்படி?

உள்ள அழுத்தங்களின் சக்தியே கப்பலின் எடையை ஒரு சமநிலைக்குக் கொண்டு வருவதாக ஆக்கிமிடிஸ் கருதினார். காற்றில் அமிழ்ந்துள்ள பொருட்களுக்கும் இந்தக் கொள்கை பொருந்தும். கியாஸ் உள்ளிட்ட எல்லா திரவங்களுக்கும் ஆக்கிமிடிஸின் கொள்கை பொதுவானதே. உதாரணமாக, பலூனை எடுத்துக் கொள்வோம். அது தனது பருமனுக்குச் சமமான எடையை விட இலேசாக இருந்தால் பறக்கும்.

---

உலகளவில், முன்னணி விமான நிறுவனமான 'வெர்ஜின் அட்லாண்டிக்' நிறுவனம், தேங்காய் எண்ணெயை எரிபொருளாக கொணடு விமானத்தை இயக்கி உள்ளது. பெட்ரோல், டீசல் விலை அதிகரித்து வரும் நிலையில், மாற்று எரிபொருளாக, பயோ எரிபொருளை பயன்படுத்துவது குறித்து ஆய்வு நடந்து வருகிறது. இதறகான முயற்சியில்,வெர்ஜின் அட்லாண்டிக் நிறுவனம் பல ஆண்டுகளாக ஈடுபட்டுள்ளது. இதன் ஒரு கட்டமாக தேங்காய் எண்ணெய் மற்றும் பாபாசூ




# தேங்காய் எண்ணெயில் பறந்த விமானம்!

எண்ணெய் (தென் அமெரிக்காவில் அமேசான் காடுகளில் விளையும் ஒரு வகை பனை மரத்தின் கொட்டைகளில் இருந்து எடுக்கப்பட்டது) ஆகியவற்றின் கலவையில் உருவான புதிய எரிபொருளை, இந்நிறுவனம் பயன்படுத்தியது. லண்டனில் உள்ள ஹீத்ரு விமான நிலையத்தில் இருந்து, நெதர்லாந்தில் உள்ள ஆம்ஸ்டர்டாம் விமான நிலையம் வரை, இந்த எரிபொருளை கொண்டு, போயிங் 747400 ரக ஜெட் விமானம், இயக்கப்பட்டது. விமான சோதனை ஓட்டம் வெற்றிகரமாக நடந்தது.

விமானத்தில் நான்கு எரிபொருள் தாங்கிகள் உள்ளன. அதில் ஒன்றில், புதிய எரிபொருள் நிரப்பப்பட்டு இருந்தது. இந்த விமானத்தில், பயணிகள் பயணம் செய்யவில்லை. விமானிகளும், தொழில நுட்ப நிபுணர்களுமே பயணம் செய்தனர். தேங்காய் எண்ணெய் மூலம் விமானத்தை இயக்கிய ரிச்சர்ட் பிரான்சன் முயற்சியை பலர் பாராட்டி உள்ளனர்.

---



# பாவம் எலிகள்

எலிகள் எவ்வாறு பூனைகளிடம் வசமாக சிக்கிக் கொள்கின்றன என்பதற்கான காரணத்தை விஞ் ஞானிகள் கண்டறிந்துள்ளனர். பூனையின் சிறுநீரின் மணமானது எலிகளுக்கு எச்சரிக்கை விடுக்கும் காரணியாக இதுவரை கருதப்பட்டது. ஆனால் ஆண் எலிகள் பூனையின் சிறுநீரின் ரொக்ஸோபிளாமா இரசாயனத்தை நுகரும் போது அவற்றின் மூளையில் பாலியல் உணர்ச்சி தூண்டப்படுவது புதிய ஆய்வில் கண்டறியப்பட்டுள் ளது. மேலும் எலிகளின் மூளையில் அச்சத்தை தோற்றுவிக்கும் பகுதிகளும் செயலிழந்து விடுவதுடன் பயமும் பாலியல் உணர்ச்சியாக மாற்றப்படுகின்றது. இதனால் எலிகள் பயமிழந்து பூனைகளை நெருங்கி வந்து அவற்றுக்கு இரையாகின்றன

---



அப்பிள் சாதனங்களுக்கென சந்தையில் தனிஇடம் உண்டு. குறிப்பாக அப்பிளின் ஐ போன், சந்தையில் உள்ள மற்றைய போட்டி உற்பத்தியாளர்களின் கையடக்கத்தொலைபேசிகளை விட இவற்றின் விலை அதிகம். ஆனாலும் இவற்றுக்கான கேள்வி நாளுக்கு நாள்

# ஐ போன் விரும்பிகளுக்கு ஒரு நற்செய்தி!

அதிகரித்துக் கொண்டே செல்கின்றது.. இவ்வருடத்தின் 2 ஆவது காலாண்டில் மாத்திரம் சுமார் 20.34 மில்லியன் ஐ போன்கள் விறபனையாகியுள்ளமை இதற்கான ஓர் எடுத்துக்காட்டு. அப்பிள் இறுதியாக ஐ போன் 4 ஐ வெளியிட்டது. இதனைத்தொடர்ந்து தற்போது அதிகம் எதிர்பார்க்கப்படும் கையடக்கத் தொலைபேசியாக விளங்குவது ஐ போன் 5 ஆகும். அடுத்த மாதமளவில் இது வெளியாகுமென எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும் விலை குறைந்த ஐ போன் 4 இனை அப்பிள் வெளியிடவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இது சுமார 8 ஜிபி மெமரியைக் கொண்டதாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. தற்போது சந்தையில் உள்ள ஐ போன்கள் 16 மற்றும் 32 ஜிபி மெமரிகளைக் கொண்டுள்ளன. மெமரியைக் கொண்ட போதிலும் அப்பிளின் ஐ கிளவுட் வசதி இருப்பதனால் அது பெரிதும் உதவுமென அந்நிறுவனம் தெரிவிக்கின்றது. சீனா போன்ற வளர்ந்து வரும் சந்தைகளைக் கவனத்தில் கொண்டே அப்பிள் இதனை வெளியிடவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

---

அசாதாரண வகையில் தமது காதலைத் தெரிவிக்கப் பல வகைகளைப் பயன்படுத்துகின்றனர் காதலர்கள். மரங்களில் தமது பெயர்களைப் பதிப்பது கயிறுகளில் முடிச்சுக்களையிடுவது என்றெல்லாம் இருந்து தற்போது காதலர்களுக்கிடையில் புதியதொரு மோகம் வந்துள்ளது. என்னவென்று தெரியுமா? காதல்ஜோடிகள் தமது பெயர்களைப் பூட்டுக்களில் எழுதி அவற்றைப் பாலங்களில் பூட்டிவிட்டு அதன் திறப்பினை ஆற்றில் போட்டுவிடுகின்றார்கள். 2007 இல் வெளியிடப்பட்ட Ho Vogilia De Te (I Want You) எனும் நாவல் றோமில் வெளியிடப்பட்டபோது தான் அதில் இந்தப பூட்டுப் பூட்டும் கருத்து தெரிவிக்கப்பட்டிருந்தது. அதில் மில்வியோ பாலத்தில் பூட்டைப்பூட்டிவிட்டு ரைபர் ஆற்றில் திறப்பைப் போட்டிருந்தனர் காதலர்கள். இவர்கள் பாலத்தின் விளக்குக்கம்பங்களைக் கூட விட்டு வைக்கவில்லை. இதனால் பூட்டுக்



# காதல் சின்னங்களை சுமக்கும் பாலங்கள்

களின் பாரந்தாங்க முடியாமல் அவை விழும்நிலையில் காணப்படுகின்றன. இந்த



நிலை வெனிசில் பரவியபோது அனைவராலும் விரும்பப்படும் றியல்ரோ பாலமுள்ள பகுதி யும் அதேபோல வெறோனாவில் றோமியோவும் ஜூலியற்றும் முதலில் சந்தித்த வீடும் பூட்டுக்களால் நிரம்பிக் காணப்படுகின்றது.

இத்தாலியப் பத்திரிகை இவ்வாறு செய்பவர்களுக்குத் தண்டனை விதிக்கப்படும் என்றும் சிறைத்தண்டனை கூட விதிக்கப்படும் என்றெல்லாம் எழுதியிருந்தது. ஆனால் காதல் ஜோடிகள் இவற்றை எல்லாம் பொருட்படுத்துவதாய் இல்லை.

---

# நீங்கள் அனுப்பிய மெயிலை படித்துவிட்டாரா? அறிவது எப்படி???

நீங்கள் ஒரு முக்கியமான நபருக்கு, நண்பர்களுக்கு மெயில் அனுப்பி விட்டு, அவருடைய பதிலுக்காகக் காத்துக்கொண்டு இருக்கிறீர்கள். குறைந்த பட்சம், அவர் உங்கள் மெயில் படித்து விட்டாரா இல்லையா என்பதை அறிந்து கொண்டால் நன்றாக இருக்குமே! நீங்கள் அனுப்பிய மெயிலை உங்கள் நண்பர் படித்து விட்டாரா, இல்லையா என்பதை அறிந்து கொள்ள, spypig என்ற நிறுவனம் இந்த சேவையை அளிக்கிறது.

செய்முறை விளக்கம்:

- முதலில் எப்போதும் போல மெயில் டைப் செய்து தயாராக வைத்துக் கொள்ளுங்கள்.
- இப்போது, www.spypig.com இணைய தளத்திற்குச் செல்லுங்கள்.

அங்கு, உங்கள் முகவரி, உங்கள் நண்பர் முகவரி கொடுங்கள். Step 3 இல் முதல் படத்தைத் (வெற்றுப்படம்) தேர்ந்து எடுத்து, Click to Activate my Spypig என்பதைச் சொடுக்குங்கள். (அப்படி செய்தால், நீங்கள் ட்ராக் செய்கிறீர்கள் என்பது அவர்களுக்குத் தெரியாது.)

- இப்போது ஒரு பெட்டியில் நீங்கள் தேர்ந்து எடுத்த படம் காட்டப்படும். அதன் மீது சுட்டியை வைத்து, வலது பொத்தானை சொடுக்கி, "Copy Image" (Firefox) Copy(IE) சொடுக்கி, copy செய்யவும்.

இப்போது நீங்கள் டைப் செய்து வைத்த மெயிலை திறந்து, அந்த பக்கத்தின் அடியில் இந்த படத்தை ஒட்டி, உடனே மெயிலை அனுப்பி விடுங்கள். (கவுண்ட் டவுன் டைமர் ஓடும், அந்த ஒரு நிமிடத்திற்குள் மேலே கூறியதைச் செய்ய வேண்டும்.) அவ்வளவு தான். நீங்கள் அனுப்பிய மெயிலை அவர் திறந்த உடன், எந்த ஊரிலிருந்து படித்தார், எப்போது படித்தார் போன்ற தகவல்கள் உங்கள் மெயிலுக்கு வந்துவிடும்.

# சுருக்கப்பட்ட இணைய முகவரியின் உண்மை முகவரியைக் கண்டறிய

டுவிட்டரில் அனைத்து பயனாளர்களும் சுருக்கப்பட்ட url முகவரியை பயன்படுத்துகின்றனர். இது ஒரு வகையில் பார்த்தால் நன்மை தான். என்றாலும், பல வகைகளில் வைரஸ் மற்றும் ஆபாச இணையத்தளங்களின் முகவரியைச் சுருக்கி அனுப்புவதால் வைரஸ் எளிதாக நம் கணினியை தாக்குகிறது. இப்படிச் சுருக்கப்பட்ட முகவரியை நாம் சொடுக்காமல் எப்படி இதன் உண்மையான இணையத்தள முகவரியை கண்டுபிடிக்கலாம் என்பதைப் பற்றிதான் இந்த பதிவு. நாளுக்கு நாள் இணையதள முகவரியை சுருக்க பல இணையத் தளங்கள் வந்து கொண்டிருந்தாலும் அத்தனை தளத்தையும் பயன்படுத்துவோர் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டு தான் இருக்கிறது. bit url மற்றும் பல தளங்கள் இணையதளங்களை சுருக்கும் சேவையை வழங்கினாலும் இன்னும் நாம் சொடுக்கிய url முகவரி எந்த தளத்திற்க்கு செல்லும் என்பதில் பலருக்கும் சந்தேகம் இருந்து கொண்டுதான் இருக்கிறது. இந்த பிரச்சினையிலிருந்து நம்மை மீட்க ஒரு இணையதளம் வந்துள்ளது இந்த இணையதளத்திற்கு சென்று நாம் சுருக்கப்பட்ட இணையத்தள முகவரியை கொடுத்தால் அதன் மூலம் அதாவது உண்மையான இணையத்தள முகவரியை நமக்கு கொடுக்கும். உதாரணமாக நாம் http://bit.ly/b6CJ9n என்ற சுருக்கப்பட்ட முகவரியை கொடுத்து சோதித்து பார்த்தோம் சரியாக கொடுத்தது. இணையதள முக்வரி : http://www.unshortn.com

கணினி மூலை

# அரசாங்கம் கோரிக்கைகளை ஏற்றது ஹசாரேயின் உண்ணாவிரதம் முடிவு



(புதுடில்லி)

கடந்த 12 நாட்களாக உண்ணாவிரதப் போராட்டம் மேற்கொண்டு வந்த அன்னா ஹசாரே நேற்றுக் காலை 10.20 மணிக்கு இளநீருடன் தேன் கலந்த பானத்தை அருந்தித் தனது உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டார்

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஜன் லோக்பால் மசோதாவை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்ய உதவிய பிரதமர் மன்மோகன் சிங், நாடாளுமன்ற உறுப்பினர் கள் உள்ளிட்டோருக்கு அனனா ஹசாரே குழுவின் சார்பில் கிஜ்ரிவால் நன்றி தெரிவித்துள்ளார்.

ஹசாரேயின் மூன்று கோரிக்கைகளை நாடாளுமன்றம் ஏற்பதான பிரதமர் மன்மோகன் சிங்கின் கடிதத்தை அன்னா ஹசாரேவிடம் மத்திய அமைச்சர் விலாஸ்ராவ் தேஷ்முக் கையளித்துள்ளார்.

அன்னா ஹசாரேவின் 3 முக்கிய கோரிக்கைகளையும் நாடாளுமன்றம் ஏற்றுக்கொண்டது. கோரிக்கைகளை ஏற்பது தொடர்பாக நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் நேற்றுமுன்தினம் நீண்ட விவாதம் நடைபெற்றது. இரவு 8 மணியளவில் ஹசாரேவின் 3 முக்கிய நிபந்தனைகளையும் ஏற்கும் தீர்மானத்தை நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி அறிவித்தார். தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒருமித்த கருத்து அடிப்படையில் மக்களவையில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மேசையைத் தட்டி ஆதரவு தெரிவித்தனர்.

தொடர்ந்து மாநிலங்களவையிலும் இதேபோன்று ஹசாரேவின் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு, அவை ஒத்திவைக்கப்பட்டது.கடந்த 12 நாள்களாக உண்ணாவிரதம் மேற்கொண்டு வந்த ஹசாரேவுக்கும் அவரது ஆதரவாளர்களுக்கும், போராட்டத்தில் ஈடுபட்ட மக்களுக்கும் கிடைத்த பெரும் வெற்றியாகவே இது கருதப்படுகிறது.

ஏற்றுக் கொள்ளப்பட்ட 3 கோரிக்கைகளாவன, அனைத்து அரசு அலுவலகங்களிலும் மக்கள் சாசனம் இருக்க வேண்டும். அனைத்து மாநிலங்களிலும் லோக் ஆயுக்த அமைப்பை உருவாக்குவது குறித்த சட்டப் பிரிவை லோக்பால் மசோதாவில் சேர்க்க வேண்டும். கீழ்நிலை அரசு ஊழியர்களையும் லோக்பால் சட்ட வரம்புக்குள் கொண்டுவர வேண்டும் ஆகியவை ஹசாரேவின் 3 முக்கிய கோரிக்கைகள். இவற்றையே நாடாளுமன்றம் ஏற்றுக்கொண்டுள்ளது.

## சென்னை மேயராகும் வாய்ப்பை குஷ்புவுக்கு வழங்க தி.மு.க. முடிவு

(சென்னை)

நடிகை குஷ்புவுக்கு சென்னை மேயர் ஆகும் வாய்ப்பினை வழங்க தி.மு.க. முடிவு செய்திருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தி.மு.க.வில் சேர்ந்த குஷ்புவுக்கு முன்னாள் தி.மு.க. அரசில் அமைக்கப்படவிருந்த மேலவையில் பதவி வழங்கப்படலாம் என்று முதலில் கூறப்பட்டது. மேலவை கொண்டு வருவதற்கு முன்பே தேர்தல் வந்துவிட்டதால், தேர்தலில் எந்தத் தொகுதியும் குஷ்புவுக்கு வழங்கப்படவில்லை. அதேநேரம் தமிழகம் முழுவதும் சூறாவளி சுற்றுப்பயணம் செய்து தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டார் குஷ்பு.

தேர்தல் பிரசாரத்தில் வடிவேலுக்கு போட்டியாக களமிறங்கி பணியாற்றிய குஷ்பு, தேர்தல் தோல்விக்குப் பின்பும் வடிவேலு போல ஒதுங்கி இருக்காமல், கட்சிப் பணிகளில் கவனம் செலுத்தி வருகிறார். இந்நிலையில், தமிழகத்தில் உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேலைப்பாடுகள், அனைத்துக் கட்சியிலும் தீவிரமாக நடைபெற்று வருகிறது. அந்தந்த கட்சியில் யாரை வேட்பாளராக நிறுத்தலாம் என்று ஆலோசனையும் நடைபெற்று வருகிறது. சென்னை மாநகராட்சி தேர்தலில், தி.மு.க சார்பாக யாரை நிறுத்தலாம் என்று பேச்சு வார்த்தை நடந்து வருகிறது. அதில் தி.மு.க.வுக்காக தொடர்ந்து பணியாற்றும் குஷ்புவை நிறுத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டுள்ளது.

# ராஜீவ்காந்தி கொலை குற்றவாளிகளின் தூக்குத் தண்டனையை எதிர்ப்பது தவறு

## தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் தங்கபாலு

(சென்னை)


ராஜீவ்காந்தி கொலை வழக்கில் முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோருக்கு அளிக்கப்பட்டுள்ள தூக்குத் தண்டனையை எதிர்ப்பது தவறானது என்று தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் கே.வீ. தங்கபாலு தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்றுமுன்தினம் அவர் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பினை செயற்படுத்த முற்படும்போது, அதைத்தடுக்க வேண்டும் என்று சில தலைவர்கள் அறிக்கை விடுவதும், போராடுவதும் சரியான முறையாகாது. தங்கள் கட்சித் தலைவர்களுக்கு இதுபோல் நடந்தால் தீர்ப்பைத் தள்ளி வைக்க வேண்டும் என எந்தக் கட்சியினராவது கோரிக்கை வைப்பார்களா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்


சிறந்த பிரதமராக விளங்கியவர் ராஜீவ காந்தி. அவருடைய படுகொலை இன்னும் ஒவ்வொரு தமிழன், இந்திய குடிமக்கள் அனைவர் நெஞ்சங்களிலும் தீப்பிழம்பாக உள்ளது.

எனவே,. சட்டத்தை மதிக்கும் இந்தியாவில் சட்டம் வழங்கிய தீர்ப்புகளை நிறைவேற்றுவது ஒவ்வொரு ஆட்சியாளர்களின் கடமை. பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகியோரின் அப்பா, அம்மா, உறவினர்கள் அவர்களுக்காக வாதாடுவது தனிப்பட்ட முறையில் இயல்பான ஒன்று. அவர்களுடைய வருத்தங்களைக் பகிர்ந்து கொள்கிறோம்.



அதேசமயம் ராஜீவ் கொலைக்குக் காரணமானவர்கள் நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்டு, அதற்கான தண்டனையை வழங்கப்படும்போது அதை வரவேற்பதும், அதை நிறைவேற்ற வேண்டுவதும் இயல்பான ஒன்று. இதில் தர்மமும், தார்மிகமும் கூட உண்டு.

தந்தையை இழந்து ராகுல் காந்தியும், பிரியங்கா காந்தியும் 20 ஆண்டுகளாகத் துடித்துக் கொண்டிருக்கின்றனர். அவர்களின் உணர்வுகளுக்கு யார் பதில் சொல்ல முடியும் எனத் தெரிவித்தார்.



உலகத் தாய்ப்பால் தின விழாவில் நடந்த கொழு கொழு குழந்தை போட்டியில், தெரிவு செய்யப்பட்ட குழந்தைக்கு அமைச்சர் வைத்திலிங்கம் பரிசு வழங்குவதைக் காணலாம்.

# இலங்கைத் தமிழர்களுக்கு நீதி கிடைக்க இந்திய அரசாங்கம் தலையிட வேண்டும்


## பிரகாஷ் காரத் தெரிவிப்பு

(சென்னை)

இலங்கைத் தமிழர்களுக்கு நீதி கிடைக்க இந்தியா தலையிட வேண்டும் என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் பிரகாஷ் காரத் தெரிவித்துள்ளார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் திருவண்ணாமலை மாவட்டக் குழு புதிய அலுவலகத்தை கடந்த சனிக்கிழமை திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்-



இலங்கையில் போரைக் காரணம் காட்டி ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டனர். அப்பொழுது போரை நிறுத்தக்கோரி இந்திய அரசை வலியுறுத்தினோம். ஆனால் அவர்களோ விடுதலைப் புலிகளை ஒழிக்கத்தான் இந்தப் போர் என்றார்கள்.

தற்போது இலங்கை மண்ணில் விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டுவிட்டார்கள். ஆனால் தமிழ் மக்கள் இன்னும் அடிமையாகவே வாழ்கிறார்கள். அவர்களுக்கான அரசியல் உரிமை, சுதந்திரம் போன்றவை மறுக்கப்பட்டுள்ளது.

அம்மக்கள் சுதந்திரத்துடனும், தன்மானத்துடனும் வாழ வேண்டும் என்றால் சுயாட்சி அதிகாரம் கொண்ட மாநிலம் அமைத்துத் தருவதே தீர்வுக்கு வழி வகுக்கும்.

இலங்கையில் தமிழர்களுக்கு நீதி கிடைக்க இந்தியா தலையிட வலியுறுத்தி டில்லியில் வரும் 7ஆம் திகதி ஆர்ப்பாட்டம் நடத்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி முடிவு செய்துள்ளது என்றார்.

# முதலில் யாருக்குத் தூக்கு? குலுக்கல் முறையில் தெரிவு

(வேலூர்)

வேலூர் சிறையில் வரும் ஒன்பதாம் திகதி தூக்கிலிடப்படும் மூவரிடமும், கடைசி ஆசையைத் தெரிவிக்கும்படி கேட்கப்பட்டு, அவர்களுக்கான தூக்கிலிடும் நேரமும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் கொலை வழக்கில், வேலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ள முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகிய மூவரையும் தூக்கிலிட, சிறைத் துறை நிர்வாகம் முடிவு செய்துள்ளது. இதையடுத்து, வேலூர் மத்திய சிறைக்கு மூன்றடுக்கு பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது. சிறை உள்வாசல் வரை, பத்திரிகையாளர்கள், புகைப்படப் பிடிப்பாளர்கள் செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது. சிறை அலுவலர்கள் வாகனங்கள், சோதனைக்குப் பின்பே அனுமதிக்கப்படுகின்றன. சிறையைச் சுற்றி நான்கு இடங்களில் தடுப்புகள் அமைத்து, 24 மணி நேரம் வாகனச் சோதனை நடைபெறுகிறது. வேலூர், திருவண்ணாமலை மாவட்டத்தில், 19 இடங்களில் உள்ள இலங்கைத் தமிழர் முகாமில், 7,500 பேர் தங்கியுள்ளனர். அவர்களும் தீவிர கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர். காட்பாடி, அரக்கோணம், ஜோலார்பேட்டை ரயில்வே நிலையங்களில் பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

முருகன், சாந்தன், பேரறிவாளன் மூவரும் தனித்தனி அறைகளில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். அறையைவிட்டு அவர்கள் வெளியியேவர அனுமதி இல்லை. அவர்களைப் பார்ப்பவர்கள், வெளியில் இருந்து உணவுப் பண்டங்கள் கொடுக்க அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. 3 வேளை சிறை உணவு மட்டுமே வழங்கப்படுகிறது. அதுவும் சோதனைக்குப் பின்னரே வழங்கப்படுகிறது.

# 11 ஆண்டுகளாக நடவடிக்கை என்ன?

(வேலூர்)

ராஜீவ் கொலையாளிகள்ின் கருணை மனுக்கள் மீது, 11 ஆண்டுகளாக ஜனாதிபதி அலுவலகத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த விவரங்களை, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ்ப் பெற, நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என, வழக்கறிஞர் திலீபன் கூறினார்.

மும்பையைச் சேர்ந்த வழக்கறிஞர் திலீபன், வேலூர் சிறைக்கு வந்து, முருகனைப் பார்க்க அனுமதி கேட்டபோது, சிறைத் துறையினர் மறுத்து விட்டனர். பிறகு, வழக்கறிஞர் திலீபன் கூறியது:முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோர் ஜனாதிபதிக்கு, 11 ஆண்டுகளுக்கு முன் கருணை மனு அனுப்பினர். அதன் மீது, மத்திய உள்துறை அமைச்சகம், இது வரை எத்தகைய நடவடிக்கை எடுத்துள்ளது. ஏன் காலதாமதமாக கருணை மனு நிராகரிக்கப்பட்டது. நிராகரிப்பின் போது சொல்லப்பட்ட காரணங்கள் குறித்தும், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ், நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றார்.

# மழையுடன் கரையைக் கடந்தது சூறாவளி 6 பேர் பலி, 11 அடி உயரத்திற்கு வெள்ளம்

## அவசர தேவைகளுக்கு அமெரிக்க ஜனாதிபதி உத்தரவு

(வொஷிங்டன்)


அமெரிக்காவைத் தாக்கிய ஜரீன் சூறாவளி மணிக்கு 500 மைல் வேகத்தில் கரையைக் கடந்துள்ளது. இதில் ஆறு பேர் இதுவரை உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அவசர உதவிப் பணிகளுக்கு அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா உத்தரவிட்டுள்ளார். முன் எச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள நியூயோர்க், வொஷிங்டன், விர்ஜீனியா, மேரிலேண்ட் ஆகிய நகரங்களில் அவசரநிலைப் பிரகடனம் செய்யப்பட்டது. அங்கு தாழ்வான பகுதியில் தங்கியிருந்த சுமார் 25 இலட்சம் பேர் அப்புறப்படுத்தப்பட்டு பாதுகாப்பான இடத்தில் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

விடுமுறையில் சென்று இருந்த அதிபர் ஒபாமா அதை இரத்துச் செய்து விட்டு உடனே வொஷிங்டன் திரும்பினார்.

இந்த நிலையில் அமெரிக்காவில் கேப் அருகே உள்ள வடக்கு கரோலினாவில் ஜரின் புயல் கரையைக் கடந்தது. அப்போது மணிக்கு 500 மைல் வேகத்தில் பலத்த காற்று வீசியது. அதைத்தொடர்ந்து பலத்த மழை கொட்டியது. அப்போது வடக்கு கரோலினா, புளோரிடா, விர்ஜினீயா ஆகிய இடங்களில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

இதனால் அங்குள்ள 6 இலட்சம் பேர் இருளில் தவித்தனர். புயல் தாக்கியதால் பலத்த மழை பெய்தது. இதனால் நியூயோர்க், வடக்கு கரோலின், விர்ஜினீயா. புளோரிடா ஆகிய இடங்களில் வெள்ளப் பெருக்கு ஏறபட்டுள்ளது. வீடுகளைச் சுற்றி சுமார் 11 அடி உயரத்துக்கு தண்ணீர் சூழ்ந்து நிற்கிறது. உணவு, குடிநீர் போன்ற அத்தியாவசியப் பொருட்களை இருப்பு வைத்து இருப்பதால்



மக்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை.

புயல் கரையைக் கடக்கும் போது நியூயோர்க் நகரில் வாகனப் போக்குவரத்து நிறுத்தப்பட்டது. விமான நிலையங்கள் மூடப்பட்டன. ஆஸ்பத்திரிகளில் தங்கி சிகிச்சை பெற்ற நோயாளிகள் வெளியேற்றப்பட்டனர்.

அமெரிக்காவின் இராணுவத் தலைமையகமான பென்டகன் 200 லொரிகளில் அவசர தேவைக்கான உதவி பொருட்களுடன் சென்றுள்ளது.

# பாகிஸ்தான் எல்லையில் தாக்குதல் நாற்பது படையினர் உயிரிழப்பு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் எல்லைப் பகுதியில் 4 சோதனைச் சாவடிகளில் தீவிரவாதிகள் நடத்திய பயங்கரத் தாககுதலில் பாகிஸ்தான் இராணுவ வீரர்கள் 40 பேர் பலியாகினர். 10 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் நாடுகளின் எல்லைப் பகுதியான கைபர்ரூபாக்துங்கவா மலைகளில் ஆப்கன் தீவிரவாதிகளை ஒடுக்கும் நடவடிக்கையில் இராணுவ வீரர்கள் ஈடுபட்டுளளனர். அங்கு பல சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு தீவிரவாதிகள் நடமாட்டம் கண்காணிக்கப்படுகிறது. சிட்ரால் என்ற இடத்தில் திடீரென இயந்திரத் துப்பாக்கிகள், கையெறி குண்டுகளுடன் நூற்றுக்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் இராணுவச் சோதனை சாவடிகளை தாக்கினர்.

நான்கு இடங்களில் ராணுவ தீவிரவாதிகள் இடையே கடும் சண்டை நடந்தது. அதில் 40 வீரர்கள் பலியாகினர். 10 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். தகவல் அறிந்து அங்கு கூடுதல் படைகள் குவிக்கப்பட்டதால் தீவிரவாதிகள் தப்பியோடினர். இந்தத் தாக்குதலில் 400க்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் ஈடுபட்டிருக்கலாம் என ஜியோ நியூஸ் செய்தி தெரிவித்தது. இந்த மலைப் பகுதியை ஒட்டிய ஆப்கன் நகரான ஜாலாபாத்தில் இருந்து 160 கி.மீ. பாதை வழியாக பாகிஸ்தானின் அரெண்ட் நகருக்குள் தீவிரவாதிகள் நுழைவது அதிகரித்துள்ளது.

இதைத் தடுக்க அந்த மலைப் பகுதியின் பாலங்களை இராணுவத்தினர் குண்டு வைத்துத் தகர்த்து வந்தனர். இதனால், ஆத்திரமடைந்த தீவிரவாதிகள் மொத்தமாகப் புகுந்து இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்தியதாகத் கூறப்படுகிறது.

## அல்ஜீரிய எல்லைப்பகுதியால் கடாபி தப்பிச் சென்றுள்ளார்?

லிபியா அதிபர் மும்மர் கடாபி லிபியாவில் இருந்து தப்பிச் சென்று விட்டதாகவும் ஆனால் தப்பவில்லை லிபியாவில் இருப்பதாகவும் இருவேறு கருத்துகள் நிலவுகின்றன. இந்த நிலையில் கடாபி அவரது மகன்மார் ஆயுதம் தாங்கிய 6 வாகனங்களுடன் லிபியா-அல்ஜீரியா எல்லைப் பகுதி வழியாக தப்பிச் சென்ற தாக எகிப்திய செய்தி நிறுவனம் தகவல் தெரிவித்துள்ளது.

அதேநேரம் அல்ஜீரியா எல்லைப்பகுதி வழியாக குண்டு துளைக்காத மெர்சிடஸ் ரக கார்கள் சென்றதாக லிபிய நாட்டு இராணுவம் தெரிவித்துள்ளது. அந்த வாகனங்களில் லிபியாவின் முக்கிய அதிகாரிகள் பலர் இருந்திருக்கலாம் எனக் கூறப்படுகிறது.

## 53 சடலங்கள் மீட்பு

(திரிபோலி)

லிபியத் தலைநகர் திரிபோலியில் அமைந்துள்ள களஞ்சியசாலை ஒன்றிலிருந்து 53 சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கொலைகள் கடந்த வாரம் இடம்பெற்றிருக்கலாம் என பிரித்தானியாவின் செயதிச் சேவை ஒன்று கூறுகின்றது.

இந்தச் சடலங்கள் எரியூட்டப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.




## தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

ஏழாவது அகவையில்

பெயர்: கு. கிருவிகா
முகவரி: சந்தை வீதி,
மானிப்பாய்.



29.08.2011

பல்லாண்டு காலம்
வாழ்கவென வாழ்த்துகின்றோம்

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..............................
முகவரி : ..............................
பிறந்த ஆண்டு : ..............................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. ..............................
பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# வேலை வாய்ப்புச் செய்திகள்

பேக்கரித் தயாரிப்புக்களான பாண், பணிஸ், ரோல்ஸ் போன்ற உணவு வகைகளை ஆட்டோவில் கொண்டு சென்று விற்பனை செய்வதற்கு சாரதி லைசன்ஸ் உள்ள ஒருவர் உடனடியாகத் தேவை. சாப்பாடு, தங்குமிட வசதிகள் உண்டு. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு 0112657188

வவுனியாவிலுள்ள காரியாலயத்திற்கு கணினி அறிவுள்ள ஆண், பெண் இருபாலாரும் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு கொள்வதற்கு : 0244925019

யாழ்ப்பாணத்தில் தங்கி நின்று வேலை செய்யக்கூடிய மேசன் மற்றும் கூலியாட்கள் உடனடியாகத் தேவை. சம்பளம் மற்றும் மேலதிக விபரங்களுக்குத் தொடர்புகொள்ள வேண்டிய இலக்கங்கள் 0770280236, 0773604402.

40 வயதிற்கு மேற்பட்ட ஒரு பெண் வீட்டில் சமையல் வேலை செய்வதற்கு தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். ஆர்வமுள்ளவர் மற்றும் அனுபவமுள்ளவர்கள் தொடர்புகொள்ள வேண்டிய இலக்கங்கள். 0777281907 - 0777352585

நமது ஸ்தாபனத்தில் வாகனத்தில் டிலிவரி வேலை செய்வதற்கு ஆர்வமுள்ள ஆண்கள் உடனடியாகத் தேவை. சம்பளம் மற்றும் மேலதிக விபரங்கள் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு கொள்வதற்கு : 0776018323

யாழ்ப்பாணத்தில் சைவ உணவகம் இரண்டிற்கு வேலையாட்கள் உடனடியாகத் தேவை (தங்குமிட வசதி, போக்குவரத்து வசதி, மூன்று நேர உணவு) என்பனவும் வழங்கப்படுவதுடன், சம்பளம் நேரில பேசித் தீர்மானிக்கப்படும். தொடர்பு கொள்வதற்கு : 0777917753

சாறி பிளவுஸ், சல்வார் தைப்பதற்கு பெண் பிள்ளைகள் உடனடியாகத் தேவை. சம்பள விபரங்கள் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு கொள்வதற்கு : 0712220414, 0777623158.

வவுனியாவில் பிரபல பாதணி விற்பனை நிலையமொன்றுக்கு (Selesman) தேவை. உணவு மற்றும் தங்குமிட வசதியுண்டு. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு கொள்வதற்கு : 0775574712

சங்கானையில் அமைந்துள்ள புடைவை நிலையமொன்றிற்கு பெண் விற்பனையாளர் ஒருவர் உடனடியாகத தேவை. அதோடு விற்பனைப் பயிற்சியாளராகப் பழக விரும்புவோரும் தொட்பு கொள்ளலாம். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு கொள்வதற்கு : 0213219132

விவசாயத் துறையில் முன்நிலை வகிக்கும் நிறுவனமான **CIC Group Guand (Pvt) Ltd** மற்றும் நாட்டில் இடம்பெற்ற விவசாயத் துறையில் பாரிய நிறுவனமான **CIC Holdings Plc** இன் துணை நிறுவனமாகும். இதில் ஆர்வமுள்ள இளைஞர்கள் யாழ்ப்பாணம், வவுனியா மாவட்டங்களுக்கு 'விற்பனை முன்னேற்ற அலுவலர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்'.
முகவரி : Senior Manager Human Resourse Management
CIC Holdings PLC CIC House
199, Kew Road, Colombo -02
Fax : 0112331771
Email :hnd@cic.lk

சேட், ரவுசர் தைக்கக்கூடிய தையலாட்கள் உடனடியாகத் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
no.126, St.Antony's Mawatha, Colombo -13
Tel : 5835586, 0779770727

வெள்ளவத்தையில் இயங்கும் பென்சி கடைக்கு விற்பனையாளர் (பெண்) காசாளர் உடனடியாகத் தேவை.
இல. 33, காலி வீதி, வெள்ளவத்தை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். தொடர்புகளுக்கு : 0772225122

கண்டியில் வைத்தியர் ஒருவரின் வீட்டு வேலைக்கு 45 வயதிற்குக் குறைந்த பெண் ஒருவர் தேவை. ஆரம்பச் சம்பளம் 10,000 ரூபாவிற்குக் குறையாமல் வழங்கப்படும். மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய இல - 0777856806

கொழும்பில் 15 இல் இயங்கி வரும் Net cafe ஒன்றிற்கு கணினி அனுபவமுள்ள வேலையாட்கள் தேவை.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு : 0777913904

# முப்பது வருடமாக உள்ள பிரச்சினைக்கு ஒரு இரவில் தீர்வினைக் காண முடியாது

## பல நாடுகளை உதாரணம் காட்டுகிறார் பீரிஸ்



(கொழும்பு)

முப்பது வருட யுத்தம் காரணமாக ஏற்பட்ட பிரச்சினைக்கு ஒரு இரவில் மட்டும் தீர்வுகாண முடியாதென வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள வெளிநாட்டு ராஜதந்திரிகளைச் சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

அரசியல் ஸ்திரமற்றுப் போன கம்போடியா,பங்களாதேஷ்,ஸ்பெயின் நாடுகளின் பிரச்சினைகளுக்கு தீர்வு ஏற்பட நீண்டகாலம் பிடித்தது.

இலங்கையில் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த மக்களில் 4 இலட்சத்து 20ஆயிரத்து 888பேர் மீள்குடியேற்றப் பட்டுள்ளனர். 60ஆயிரம் குடும்பங்களுக்கு வீடுகள் தேவையாக உள்ளது. தற்போது 24ஆயிரத்து 551வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான ஆணைக்குழு எதிர்வரும் நவம்பர் 15ஆம் திகதியளவில் தனது இறுதி அறிக்கையை சமர்ப்பிக்குமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இடம்பெயர்ந்தவர்களுக்கு ஆயிரம் வீடுகள் திட்டம்

(கொழும்பு)

வட மாகாணத்தில் இடம்பெயர்ந்த குடும்பங்களுக்காக ஆயிரம் வீடுகளை நிர்மாணிக்கும் திட்டமொன்றை முன்னெடுப்பதற்கு தேசிய வீடமைப்பு அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தத் திட்டத்தின் முதற்கட்டமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் இம்மாதம் 30 ஆம் திகதி 50 வீடுகளை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் படவுள்ளதாக சபையின் தலைவர் ஜயந்த சமரவீர தெரிவிக்கிறார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைதீவு, மன்னார் மற்றும் வவுனியா ஆகிய ஐந்து மாவட்டங்களை உள்ளடக்கும் வகையில் இந்தத் திட்டம் மேற்கொள்ளப் படவுள்ளது.

இந்நிலையில் எதிர்வரும் காலங்களில் இந்தத் திட்டத்தினை கிழக்கு மாகாணத்திலும் முன்னெடுக்க உள்ளதாக சபையின் தலைவர் மேலும் குறிப்பிடுகிறார்.

## பெங்களூரிலும் இலங்கைத் தூதரகம்

(கொழும்பு)

இந்தியாவின் பெங்களூர் நகரில் அரசாங்கம் புதிய தூதரகப் பணியகம் ஒன்றைத் திறந்துள்ளது.

இரு நாடுகளுக்களுக்கும் இடையிலான வர்த்தக மற்றும் ஏனைய தொடர்புகளை விரிவுபடுத்திக் கொள்வதற்கு இந்த புதிய தூதரகப் பணியகம் உதவும் என்று இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் பிரசாத் காரியவசம் தெரிவித்துள்ளார்.

பெங்களூர் நகரில் உள்ள இலங்கைத் தூதரகப் பணியகத்தின் பிரதம அதிகாரியாக சுதாகர் என்பவர் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# அமெரிக்காவிலுள்ள இலங்கையர்கள் விபரம் அறிய தொலைபேசிச் சேவை

(கொழும்பு)

அமெரிக்காவிற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ள அயரின் சூறாவளியினைத் தொடர்ந்து அங்குள்ள இலங்கையர்கள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கமைய, 24 மணி நேர அவசர தொலைபேசிச் சேவையொன்று அறிமுகப் படுத்தப் பட்டுள்ளது.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜாலிய விக்கிரமசூரியவின் ஆலோசனைக்கு அமைய இந்த அவசர தொலைபேசிச் சேவை அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக தூதுவராலயம் விடுத்துள்ள அறிக்கையில், 2023520355 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக, இலங்கையில் உள்ளவர்கள், அமெரிக்காவில் உள்ள இலங்கைத் தூதுவராலயத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

இதன் மூலம் அமெரிகாவில் உள்ள தமது உறவினர்கள் குறித்த தகவல்களை உடனடியாகப் பெற்றுக்கொள்ள முடியும் என அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

தற்போது ஏற்பட்டுள்ள இந்தச் சூறாவளியானது, அமெரிக்காவின் கிழக்குக் கரையோரப் பிரதேசத்தின் ஊடாக மணிக்கு 150 கிலோ மீட்டர் வேகத்தில் சென்று கொண்டிருப்பதாக வெளிநாட்டு வானிலை நிலையங்கள் தெரிவித்துள்ளன.

இந்த இயற்கை அனர்த்தம் காரணமாக இதுவரை சுமார் 20 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள், பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனிடையே இந்தச் சூறாவளிகாரணமாக மேலும் ஆறு பிராந்தியங்கள் அபாய வலயங்களாகப் பிரகடனப்படுததப்பட்டுள்ளன.

இந்த நிலையில் குறித்த வலயங்களில் இருந்தும், மக்களை மிக விரைவில் வெளியேறும்படி அவதான நிலையம் அறிவுறுத்தியுள்ளது.

# இராணுவத்திற்கு எதிரான செயற்பாட்டில் இஸ்லாமிய தீவிரவாதக் குழுக்கள்

## என்கிறது ராவய பௌத்த நிலையம்

(கொழும்பு)

இலங்கையைச் சேர்ந்த இஸ்லாமியத் தீவிரவாதக் குழுக்கள் இன்று பயங்கரவாதிகளாக மாறிவிட்டனர் என்றும் இதனால் சிங்கள தேசத்துக்குப் பாதுகாப்புப் பிரச்சினை ஏற்பட்டுள்ளதாகவும் சிங்கள ராவய பௌத்த நிலையம் என்ற அமைப்பு குற்றஞ் சாட்டியுள்ளது

நேற்றுமுன்தினம் கொழும்பு விஹார மகாதேவிப் பூங்காவுக்கு முன்னால் இடம்பெற்ற இந்த அமைப்பின் ஆர்ப்பாட்டப் பேரணியிலே இவ்வாறு குற்றம் சுமத்தப்பட்டு கோஷம் எழுப்பப்பட்டது.

கிறீஸ் பூதங்களைச் சாட்டாக வைத்து இலங்கை இராணுவ முகாம் அமைந்துள்ள பிரதேசங்களில் பிரச்சினைகளைத் தோற்றுவித்து அமைதி இன்மையை ஏற்படுத்தவும் முஸ்லிம் தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளனர் எனவும் அந்த அமைப்பு அங்கு தெரிவித்தது.

# சிமெந்து வகைகளின் மாதிரிகளை நுகர்வோர் அதிகாரசபை பெற்றுள்ளது

(கொழும்பு)

சந்தையில் உள்ள அனைத்து சிமெந்து வகைகளினதும் மாதிரிகளை நுகர்வோர் விவகார அதிகார சபை பெற்றுக் கொண்டுள்ளது.

கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோவின் பணிப்புரைக்கமைய சிமெந்து மாதிரிகள் பெறப்பட்டதாக அதிகார சபையின் தலைவர் ரூமி மர்சூக் தெரிவித்தார்.

இதன் பிரகாரம் சந்தையிலுள்ள எட்டு சிமெந்து வகைளின் மாதிரிகள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இந்த சிமெந்து மாதிரிகளை வெளிநாடொன்றில் தரப் பரிசோதனைக்கு உட்படுத்தவுள்ளதாகவும் நுகர்வோர் விவகார அதிகாரசபையின் தலைவர் மேலும் குறிப்பிட்டார்

# மறுவாழ்வளிக்கப்பட்ட 500பேர் சமூகத்துடன் இணையவுள்ளனர்

(கொழும்பு)

மறுவாழ்வளிக்கப்பட்ட 500 விடுதலைப் புலிகள் இயக்க முன்னாள் உறுப்பினர்கள் எதிர்வரும் 18ஆம் திகதி சமூகத்துடன் இணைக்கப்படவுள்ளதாக புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கு முன்பு அவர்களை வடக்குக்கு சுற்றுலா ஒன்றுக்காக அழைத்துச் செல்லவுள்ளதாக அமைச்சின் செயலாளர் ஏ.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் மறுவாழ்வு பெறும் அனைத்து புலிகள் இயக்க முன்னாள் உறுப்பினர்களையும் செப்டெம்பர் மாத நிறைவின் முன் சமூகத்துடன் இணைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

# குடும்பத் தலைவர்களாக 90 ஆயிரம் பெண்கள்

## சமூக சேவைகள் அமைச்சர் தகவல்

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணங்களில் சுமார் 90000 பெண்கள் குடும்பத் தலைவராக இருந்து தமது குடும்பத்தைக் கொண்டு செலுத்துகின்றனர் என சமூக சேவைகள் அமைச்சு அறிவித்துள்ளது.

பெண்களை மையப்படுத்தியே இந்தக் குடும்பங்களின் வாழ்வாதாரம் அமைந்துள்ளது எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த சில தசாப்தங்களாக பெண்கள் குடும்பத் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும் நிலைமை உயர்வடைந்துள்ளது.

கொழும்பில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்ட போது சமூக சேவைகள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா இத் தகவலை வெளியிட்டார்.

பெண்களை மையப்படுத்திய குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நடவடிக்கைகளை அரசாங்கம் ஆரம்பித்துள்ளது குறிப்பாக சுயதொழில் முயற்சிகளுக்கு ஊக்கமளிக்கப்பட்டு வருகின்றது.

மூன்று தசாப்த காலமாக இடம்பெற்ற யுத்தம் காரணமாக கிழக்கு மாகாணத்தில் 49000 பெண்களும், வடக்கு மாகாணத்தில் 40000 பெண்களும் கணவரை இழந்து வாழ்கின்றனர் என அவர் தெரிவித்துள்ளார்.

# இந்தியாவிற்கு யாத்திரை செய்த 3 இலங்கையரை காணவில்லை

(கொழும்பு)

இந்தியாவிற்கு யாத்திரை மேற்கொண்ட மூன்று இலங்கையர்களைக் காணவில்லை எனத்தெரிவிக்கப்படுகிறது.

நான்கு நாட்களுக்கு முன்னர் குறித்த நபர்கள் காணாமல் போயுள்ளதாக இந்தியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது.

மூன்று வெவ்வேறு யாத்திரைக் குழுக்களைச் சேர்ந்த மூவரே இவ்வாறு காணாமல் போயுள்ளனர்.

தெனியா, அல்பிட்டி மற்றும் எட்டியாந்தோட்டை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களே இவ்வாறு காணாமல் போயுள்ளனர்.

காணாமல் போனவர்களைக் கண்டு பிடிப்பதற்காக இராஜதந்திர ரீதியில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

# வன்முறையில் ஈடுபடும் வேட்பாளர்களுக்கு வெற்றியீட்டினாலும் பதவிகள் இல்லை

## - திஸ்ஸ அத்தநாயக்க -

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது வன்முறைகளில் ஈடுபடும் வேட்பாளர்களுக்கு எந்தவொரு பதவியும் வழங்கப்படமாட்டது என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது. இந்த விடயம்தொட்பாக வேட்பாளர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பின்பற்றப்பட வேண்டிய தேர்தல் சட்டங்கள் தொடர்பாக வேட்பாளர்களை தெளிவுபடுத்தி வருகின்றோம். இந்தத் தேர்தல் வன்முறைகள் அற்ற தேர்தலாக நடைபெற வேண்டும்.

எவ்வாறாயினும் ஐக்கிய தேசியக் கட்சியன் அனைத்து வேட்பார்களும் தேர்தல் சட்ங்களை மதித்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என்றார்.

# பொய் பேசுவதற்கு பயிற்சி மருத்துவர்களுக்கு அரசு வழங்கியது

## விக்கிலீக்ஸ் வெளியிடும் திடுக்கிடும் தகவல்




(வொசிஷ்டன்)

இறுதி யுத்தத்தில் பொதுமக்கள் கொல்லப்பட்டமை தொடர்பாக கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் எப்படிப் பொய்யான தகவல்களை வெளியிட வேண்டும் என்று மருத்துவர்களுக்கு இலங்கை அரசு பயிற்சி வழங்கியதாக விக்கிலீக்ஸ் பரபரப்புத் தகவல் ஒன்றை வெளியிட்டிருக்கிறது.

கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் மூலம் இந்த தகவல் அமெரிக்காவில் உள்ள இராஜாங்க திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளதாக விக்கிலீக்ஸ் மேலும் குறிப்பிட்டுள்ளது

வன்னிப்போரின் போது பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் இலங்கைப் படையினரால் கொல்லப்பட்டனர். அவற்றை குறித்த மருத்துவர்கள் வெளிநாட்டு ஊடகங்களுக்கு வெளிப்படுத்தினர். எனினும் போர் முடிந்த பின்னர் அந்த மருத்துவர்கள் இலங்கை படையினரால் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டனர்.

தடுத்து வைக்கப்பட்ட காலத்தில், வன்னிப்போரின் போது அதிகளவான பொதுமக்கள் கொல்லப்பட்டதாக கூறுமாறு புலிகள் தமக்கு அழுத்தம் கொடுத்ததாக குறித்த மருத்துவர்கள் கூறுவதாக அரசாங்கம் தெரிவித்து வந்தது. இதனை அவர்கள் செய்தியாளர்களுக்கு வெளிப்படையாக தெரிவிப்பர் என்று அரசாங்கம் தெரிவித்தது.

இதன்படி போரின் போது வன்னியில் பணியாற்றிய மருத்துவர்களான ரி சத்தியமூர்த்தி, வரதராஜ், மற்றும் சண்முகராஜா ஆகியோர், தாம் போரின் போது வெளிநாட்டு ஊடகங்களுக்கு வெளியிட்ட தகவல்கள் பொய்யானவை என்று குறிப்பிட்டனர்.

புலிகளின் அழுத்தம் காரணமாகவே அவ்வாறு தாம் கூறியதாக அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தனர். இதனை அமெரிக்க தூதரகத்தின் அதிகாரியான ஆர் மூர் என்பவர், அமெரிக்க இராஜாங்க திணைக்களத்துக்கு கேபிள் செய்தி மூலம் அறிவித்துள்ளார்.

இந்த செய்தியாளர் சந்திப்பின் போது இலங்கை அரசாங்கத்தின் செயற்பாடுகளை குறித்த மருத்துவர்கள் வரவேற்றிருந்தமையையும் விக்கிலீக்ஸ் வெளிப்படுத்தியுள்ளது. எனினும், அந்த மருத்துவர்கள், இலங்கை அரசாங்கத்தினால் பயிற்றுவிக்கப்பட்டு பொய் கூறியதை அடுத்தே அவர்கள் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டதாகவும் அவர்கள் தொடர்ந்தும் தமது பணிகளில் தொடர அனுமதிக்கப்பட்டதாகவும் அமெரிக்க தூதரகம் இராஜாங்கத் திணைக்களத்துக்கு கேபிள் மூலம் அறிவித்ததாக விக்கிலீக்ஸ் குறிப்பிட்டுள்ளது.

## பருத்தித்துறையிலும் மர்ம மனிதன் பீதி

(பருத்தித்துறை)

பருத்தித்துறை திக்கம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 8.00 மணிக்கு மர்ம மனிதர்கள் மூன்று பேர் வீடொன்றினுள் உட்புகுந்துள்ளனர்.

அச்சமயம் பார்த்து வீட்டில் இருந்த பெண்மணி கூக்குரலிடவே அயலவர்கள் விழிப்படைந்து மர்ம மனிதனைத் துரத்தினர்.

இதன்போது உஷாரடைந்த மர்ம மனிதர்கள் ஓடித்தப்பி மறைந்தனர். ஆயினும, அப்பிரதேச மக்கள் அண்மையிலுள்ள இராணுவ முகாமுக்குள் சென்றதனை அவதானித்தாகக் கூறுகின்றனர். (சுமித்தி, எஸ்)

## குடிநீர் விநியோகம் செய்ய வேலணைக்கு உழவு இயந்திரம்

வேலணை பிரதேச செயலக மக்களினது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி நான்கு உழவு இயந்திரங்களை வழங்கியுள்ளார்.

வேலணை பிரதேச செயலர் மாநாட்டு மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற கூட்டத்தில் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டி அபிவிருத்தி வேலைத் திட்டங்களை கண்டறிந்து அவற்றை உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற திட்டத்தின் பிரகாரம் இந்த நான்கு உழவு இயந்திரங்களையும் கையளித்துள்ளார்.

இவ்வாறு கையளித்துள்ள உழவு இயந்திரத்தில் இரண்டு குடிநீர் விநியோகத்திற்கான இரண்டு பவுஷர்களும், கழிவுகளை அகற்றுவதற்காக இரண்டு உழவு இயந்திரங்களும் வழங்கப்பட்டுள்ளது. (05)

## பிரச்சாரத்தில் அவசரம் மோதல்களுக்கு வாய்ப்பு

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான விருப்பு எண்கள் வழங்கப்படுவதற்கு முன்னதாகவே, அவர்கள் தமது பிரச்சார நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாக, தேர்தல்களைக் கண்காணிக்கும் பவ்ரல் அமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோகண ஹெற்றியாராட்சி இந்த குற்றச்சாட்டை முன் வைத்துள்ளார். இந்த நிலையில், இப்படியான நடவடிக்கைகளை கட்சியின் தலைவர்கள் கட்டுப்படுத்த தவறும் பட்சத்தில், கட்சியின் வேட்பாளர்களுக்கு இடையேயான மோதல்கள் அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் உள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## தூக்குத் தண்டனைக்கு......

உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் செங்கொடி உயிரிழந்தார்.

செங்கொடி தீக்குளிப்பதற்கு முன்னர் எழுதி வைத்த கடிதம் தற்போது கிடைத்துள்ளது. 21 ஆண்டுகளாக சிறையில் வாடும் மூவரின் தூக்குத்தண்டனையை ரத்து செய்ய வேண்டும் என்று கடிதத்தில் உருக்கமான வேண்டுகோள் விடுத்துள்ளார். முதல்வர் ஜெயலலிதா இந்த விடயத்தில் தலையிட்டு தூக்குத்தண்டனையை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கடிதத்தில் கோரிக்கை விடுத்துள்ளார்.

## ஈ.என்.டி.எல்.எப்...

துடிக்கும் வேங்கைகளாக வந்திருந்த நபர்கள் செயற்பட்டனர். எதனை முன்வைத்தால் மாநாடு குழம்பும் என்று தெளிவாக அறிந்து, இப்போது தவிர்க்க வேண்டிய கோரிக்கையை முன்வைத்தனர்.

இந்த மாநாடு, தீர்வொன்றுக்கு வரமுடியாமல் போனதையிட்டு இந்த நபர்கள் மகிழ்ச்சி அடைந்து சென்றனர். தமிழர்கள் அழிவதைப் பற்றி இவர்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளவே இல்லை. வெளிநாடுகளிலிருந்து கைபேசிகளில் கிடைத்த தகவல்களையே தங்கள் கோரிக்கை என்று முன்வைத்தனர்.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அவசர காலச்சட்டம்......

அவர் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை அவசரகால சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள், அந்த சட்டம் அகற்றப்பட்டுள்ளமையால், தற்போது சாதாரண சட்டத்தின் கீழ் கொண்டு வரப்படக்கூடிய வாய்ப்புகள் உள்ளன. இதற்காக அரசாங்கம் புதிய சட்டம் ஒன்றை விரைவில் நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தும் என்று நீதியமைச்சின் செயலாளர் சுகத்த கம்லத் தெரிவித்துள்ளார்.

## தூக்குக் காவடிக்கு உதவியவர் காயம்

நல்லூர் ஆலய வருடாந்த தேர் இரதோற்சவத்தில் தூக்குக் காவடி எடுத்தவருக்கு ஒத்தாசை புரிந்த பக்தர் ஒருவர் சறுக்கி விழுந்து காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு காயமடைந்தவர் திருநெல்வேலி அம்மன் கோவில் வீதியைச் சேர்ந்த ஆர் மதிச்சந்திரன் (வயது-24) என்பவரே காயமடைந்தவராவார். சம்பவதினம் தூக்குக் காவடி எடுத்த பக்தருக்கு மேல் இருந்து உதவி செய்து கொண்டிருந்த போது சறுக்கி விழுந்துள்ளார். (எப்.எஸ்)

## மோட்டார் சைக்கிளுக்கு வீதியில் இட ஒதுக்கீடு

நாட்டின் பெருந்தெருக்களின் போக்குவரத்தில் மோட்டார் சைக்கிளுக்கு என விசேட பாதை ஒழுங்கு ஒன்று ஒதுக்கப்படவுள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் இதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதிகார சபையின் தலைவர் ரஞ்சித் பிரேமசிறி இந்த தகவலை எமது செய்திப் பிரிவிற்கு தெரிவித்தார்.

## கவிதை நூல் வெளியீடு



(மட்டக்களப்பு)

சதாசிவம் மதன் எழுதிய 'உயிரோவியம்' எனும் கவிதை நூல் வெளியீட்டு விழா நேற்றுக் காலை 9.00 மணிக்கு மட்டக்களப்பு, புதுக்குடியிருப்பு கண்ணகி வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்கு கதிரவன் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் இன்பராசா தலைமை தாங்கினார். இதில் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார்.

## பதிவு செய்யப்படாத தனியார் மருந்தகங்கள்

### சுகாதார அமைச்சு பாய்ச்சல்

(கொழும்பு)

பதிவு செய்யப்படாத தனியார் மருந்தகங்களை சோதனையிடுவதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. நாட்டில் தற்போது மூவாயிரம் தனியார் மருந்தகங்கள் காணப்படுவதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது. வருடாந்தம் தேசிய வாசனைத் திரவியங்கள் மற்றும் ஔடதங்கள் ஒழுங்கு படுத்தல் அதிகார சபையிடம் குறித்த மருந்தகங்கள் பதிவு செய்யப்பட வேண்டும். ஆயினும், சில மருந்தகங்கள் நீண்டகாலமாக பதிவு செய்யப்படாது இருப்பதாக அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இதற்கமைய பதிவு செய்யப்படாது இயக்கப்படும் மருந்தகங்கள் சோதனையிட்டு அவற்றுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவினால் தேசிய வாசனைத் திரிவியங்கள் மற்றும் ஔடதங்கள் ஒழுங்கு படுத்தல் அதிகார சபைக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. இதற்கமைய மருதானைப் பகுதியில் பதிவு செய்யப்படாது இயக்கப்பட்ட 04 மருந்தகங்கள் அண்மையில் சுற்றிவளைப்பிற்கு உட்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.


## துப்பாக்கிச் சூடு இளைஞர் பலி

(கொழும்பு)

பெந்தோட்டை ஹம்புறுகல பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக்கு 27 வயது நபரொருவர் பலியாகியுள்ளார் என பெந்தோட்டைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். பிறந்தநாள் நிகழ்வொன்றில் இரு குழுக்களிடையே வாக்குவாதம் இடம்பெற்றதை அடுத்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி பிரயோகத்திலேயே குறித்த நபர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.


## செய்திப்பாணம்

**ஆட்சித்தடு மாற்றத்தை அணுகுகின்ற வேலைத்திட்டம்**
**மீட்டுமறு தலிக்கின்ற முடியாமை - காட்டிநில்**
**சந்திரிகா மணிநேரம்; ஜெயலலிதா புதுவருடம்**
**சந்திசிரிக்க வைத்ததே சால்!**



# ராஜீவ் கொலைக் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்குங்கள்

## இந்தியப் பிரதமரிடம் கூட்டமைப்பு கோரிக்கை




இந்தியாவின் முன்னாள் பிர
தமர் ராஜீவ் காந்தியின் கொலை
வழக்கில் மரண தண்டனை விதிக
கப்பட்ட முருகன், சாந்தன், பேரறி
வாளன் ஆகிய மூவருக்கும் பொது
மன்னிப்பு வழங்குங்கள் என இந்
திய பிரதமர் மன்மோகன் சிங்கு
க்கு தமிழ் தேசியத் கூட்டமைப்பி
னால் கடிதமொன்று அனுப்பி வைக்
கப்பட்டுள்ளது.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் சார்
பில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளு
மன்ற உறுப்பினர் பா.அரியநேத்தி
ரனால் எழுதி அனுப்பிவைககப்
பட்டுள்ள அந்த கடிதத்தில் மேலும
தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"இந்தியாவின் முன்னாள் பிர
தமர் அமரர் ராஜீவ் காந்தியின்
கொலை வழக்கில் குற்றம் சாட்
டப்பட்டு கடந்த 20 வருடங்களாக
சிறைவாசம் அனுபவிக்கும் முரு
கன், சாந்தன், பேரறிவாளன்
ஆகிய மூவருக்கும் மரண தண்
டனை நிறைவேற்றப்பட்டுள்ள
மையை அறிந்து மிகவும் கவ
லையும் வேதனையும் அதிர்ச்சி
யும் ஈழத்தமிழர்களும் உலகத்
தமிழர்களும் அடைந்துள்ளோம்.

இந்த ஏக்கத்துக்கு விடிவு
கிடைக்க எமது தொப்புள் கொடி
உறவாக இருக்கும் பாரத நாடு
எமக்கு கைகொடுக்கும் என்ற
நம்பிக்கை ஈழத்தமிழர்கள் மனங்
களில் இருந்து இன்னும் அகல
வில்லை.

இந்த உயர் தண்டனையை
மன்னிப்பு வழங்கி இந்த மூவரை
யும் மரண தண்டணையில் 'இரு
ந்து விடுதலைபெற பாரத பிரதம
ராகிய உங்களாலேயே முடியும்
என்று அக்கடிதத்தில் தெரிவிக்கப
பட்டுள்ளது.

# புதிய சட்டமா அதிபர் அடுத்த மாதம் பதவியேற்பு

(கொழும்பு)

இலங்கையில் முதல் தடவையாக பெண் ஒருவர் சட்டமா அதிப
ராகப் பதவியேற்கவுள்ளார். இந்த நிலையில் பிரதி சொலிஸிட்டர்
ஜெனரல் சாந்தி ஏவா வனசுந்தரவே புதிய சட்டமா அதிபராக பதவி
ஏற்கவுள்ளார்.

ஏற்கனவே முதன்முறையாகப் பிரதம நீதியரசராகச் சிராணி
பண்டாரநாயக்க நியமிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. செப்
டம்பர் மாதம் முதல் அவர் இலங்கையின் சட்டமா அதிபராகப்
பதவியேற்கவுள்ளார். இதனையடுத்து சொலிஸிட்டர் ஜெனரலாக
பாலித பெர்னாண்டோ நியமிக்கப்படவுள்ளார். இதற்கிடையில்
பதவியில் இருந்து இளைப்பாறும் மொஹான் பீரிஸ் அமைச்
சரவையின் சிரேஷ்ட ஆலோசகராக நியமிக்கப்படவுள்ளார்.

# தீவகத்தில் விரைவில் புதிய பஸ் சேவை

மண்டைதீவிலிருந்து அல்லைப்பிட்டியூடாக ஊர்காவற்துறைக்
கான புதிய பஸ் சேவை ஒன்று எதிர்வரும் 06 திகதி முதல் ஆரம்
பிக்கப்படவுள்ளதாக வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தெரி
வித்துள்ளார்.

நேற்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை வேலணை பிரதேச செயலகத்
தில் கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில்
இடம்பெற்ற வேலணைப் பிரதேச செயலர் பிரிவின் உடனடி அபி
விருத்தி வேலைத்திட்ட ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொண்ட
ஆளுநர் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளையின் கோரிக்
கையின் பேரில் இந்தப் புதிய பஸ் சேவையினை ஆரம்பிப்பதற்கான
ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (05)


# திருட்டு முயற்சி; பெண் கைது

யாழ்.போதனா வைத்தியசாலையில் பணிபுரியும் தாதி ஊழியர்
ஒருவர் கொள்ளைச் சம்பவம் தொடர்பாக நேற்று முன்தினம்
இரவு 7 மணியளவில் பொலிஸாரினால் சந்தேகத்தின் பேரில் கைது
செய்யப்பட்டுள்ளார். புங்குடுதீவைச் சேர்ந்த இப்பெண் ஊழியர்
தனது சித்தியின் வீட்டில் ஆள் இல்லாத சமயம் பார்த்து 7000 ரூபா
பணத்தையும், நகைகளையும் அபகரித்துத் தான் வேலைசெய்யும் பகுதி
யில் உள்ள நோயாளியின் கட்டிலில் மறைத்து வைத்திருந்தார்.

இதனையடுத்து சந்தேகம்கொண்ட அப்பெண்ணின் சித்தி பொலி
ஸாரின் உதவியுடன் பிரஸ்தாப பெண்ணைக் கைதுசெய்து உரிய
நகையையும், பணத்தையும் மீட்டெடுத்துள்ளார். இது தொடர்பாக பொலி
ஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (எப்.எஸ்)


# மரணச் சடங்கில் சரத்பொன்சேகா

முன்னாள் இராணுவ தள
பதி சரத் பொன்சேகா, நேற்று
ஞாயிற்றுக்கிழமை பலத்த பாது
காப்புக்கு மத்தியில் மரணச்
சடங்கொன்றில் கலந்துகொண்
டுள்ளார். சரத் பொன்சேகாவின்
சகோதரரான கித்சிறி மஹிந்த
லால் பொன்சேகாவின் மகள்
பெனிக்கா சத்துராணியின் மர
ணச் சடங்கிலேயே அவர் கலந்து
கொண்டார். களனிப் பிரதேசத்
தில் அமைந்துள்ள மேற்படி மர
ணச் சடங்கு வீட்டில் சுமார் 20
நிமிடங்கள் வரை சரத் பொன்
சேகா தங்கியிருந்தமை குறிப்
பிடத்தக்கது.



நல்லூர் அலங்காரக் கந்தனின் அருள் பாலிக்கும் தீர்த்தோற்சவம் நேற்றுக் காலை
இடம் பெற்றது. இதன்போது பெரும் எண்ணிக்கையிலான உள்நாட்டு, வெளிநாட்டு பக்தர்கள்
கலந்துகொண்டனர். (படம் - ஜனார்த்தனன்)

# சாட்டி சுற்றுலா மையம் அபிவிருத்தி செய்ய ஆலோசனை



வேலணை சாட்டி கடற்கரை
யை சுற்றுலா மையமாக மேலும்
அபிவிருத்தி செய்வது தொடர்
பாக பாரம்பரிய கைத்தொழில்
கள் மற்றும் சிறுதொழில் முய
ற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ
தேவானந்தா மற்றும் வடமாகாண
ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகி
யோர் அப்பகுதிக்கு விஜயம்
மேற்கொண்டு ஆராய்ந்தறிந்து
கொண்டனர்.

சாட்டிப் பகுதிக்கு நேற்று
விஜயம் மேற்கொண்ட இவர்கள்
அப்பகுதியை சுற்றுலா மைய
மாக மாற்றி அமைப்பது தொடர்
பாக ஆராய்ந்தனர்.

இதன் பிரகாரம் அங்குள்ள
அடிப்படைத் தேவைகளை இனங
கண்டு அவற்றுக்கு தீர்வு காண்ப
தில் தீவிர கவனம் செலுத்தப்
பட்டது.

குறிப்பாக அங்கு உல்லாசப்
பயணிகளின் பயன்பாட்டுக்கு
ஏற்றவகையில் ஆண்கள் பெண்
களுக்கென தனித்தனியான மல
சல கூடங்கள் அமைத்தல்,
குடிநீர்த் தாங்கிகளை அமைத்
தல், மின்சார வசதிகளை ஏற்
படுத்திக் கொடுத்தல் தொடர்பா
கவும் விரிவாக ஆராயப்பட்டது.

# இந்திய இலங்கை மீனவர்கள் வடக்கில் மீண்டும் சந்திப்பு

தலைமன்னார் மற்றும் மன்
னார் கடற்பரப்பினுள் இலங்கை
மீனவர்கள் அத்துமீறி மீன்பிடிப்ப
தனை தடுப்பது தொடர்பில் இரு
நாட்டு மீனவ தொழிற்சங்கங்
களுக்கு இடையிலான கூட்டம்
செப்ரெம்பர் 10 ஆம் திகதி இலங
கை வடக்கில் நடைபெறவுள்ளது.

ஒரு வாரத்தினில் மூன்று நாட்
களுள் 100 மேற்பட்ட இந்திய
மீனவர் படகுகள் மன்னார் கடற்
பரப்பினுள் நுழைந்து மீன்பிடி
யில் ஈடுபடுவதாக வடக்கு மீனவ
கடற்தொழிற் சங்கங்கள் தெரி
விக்கும் அதேவேளை இதுவரை
2000 படகுகள் எல்லைமீறி இருப
பதாக குறித்த மீனவ கடற்தொழிற
சங்கங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

இவ்வாறு அவர்கள் ஒரு
நாளில் பிடித்து செல்லும் மீன்
தொகையினால் இலங்கை மீன
வர்கள் ஒருமாத காலத்துக்கு
கஷ்டத்துக்குள்ளாவதாகச் சங்கம
குறிப்பிடுகிறது.

# அதி திறமைசாலிகள் தெரிவு; இளைஞர் சேவைகள் மன்றம் ஏற்பாடு


(கொழும்பு)

நாடு முழுவதிலும் இருந்து
விசேட திறமைகளை கொண்ட
20 இளைஞர் யுவதிகளை தெரிவு
செய்வதற்கு தேசிய இளைஞர்
சேவைகள் மன்றம் நடவடிக்கை
எடுத்துள்ளது. இதற்காக 13
வயது முதல் 29 வயதுக்குட்
பட்ட இலங்கையர்கள் இதற்
கென விண்ணப்பிக்க முடியு
மென மன்றத்தின் தலைவர் லலித்
பியும் குறிப்பிடுகிறார். இதற்
கான மேலதிக தகவல்கள் வாரா
ந்த பத்திரிகைகளில் மும்மொழி
களிலும் வெளியிடப்பட்டுள்ள
தாக அவர் மேலும் குறிப்பிடுகிறார்.

இவ்வாறு தெரிவுசெய்யப்
பட்டவர்கள் விசேட செயற்திட்டம
ஒன்றில் இணைத்துக் கொள்ளப்
படவுள்ளனர்.

# இலங்கையுடன் வர்த்தகம்; வியட்நாம் அதிக ஆர்வம்





(கொழும்பு)

வியட்நாம் மற்றும் இலங்கைக்கு இடையிலான இரு தரப்பு
வர்த்தகம் மற்றும் முதலீட்டு நடவடிக்கைகளை மேம்படுத்த இரு
நாடுகளும் இணைந்து செயற்படவேண்டும் என வியட்நாம் தூதுவர்
தெரிவித்துள்ளார். கொழும்பில் அண்மையில் இடம்பெற்ற வர்த்தக
சமூக ஒன்று கூடல் நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்
றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதற்கு ஏற்றவாறாக இரு நாடுகளுக்கும் இடையே நேரடி விமானச்
சேவை ஆரம்பிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை அவர் வலியு
றுத்தியுள்ளார். இதன் மூலம் தற்போது 9 கோடி அமெரிக்க டொலர
பெறுமதியான வர்த்தகத்தை எதிர்வரும் 2015 ஆம் ஆண்டளவில்
30 கோடி அமெரிக்க டொலர்களாக அதிகரிக்க முடியும் எனவும் அவர்
நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 ஒகஸ்ட் 29 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.